AstroVed

ஜூலை, 2022

மாலை: 3

மலர்: 33

# சத்வித்யா

பிரின்ஸ் இன்ஃபோ பார்க், பிளாட் எண்.81-பி, ஏ-பிளாக், 4வது தளம்,
2வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்

இணையதளம் வாயிலாக மாதம் ஒரு முறை வெளிவரும்



புத்திர பாக்கியத்தை தடை தாமதங்கள் இன்றி பெற

நல்ல கனவுகளைக் காண

கோரிக்கைகளை நிறைவேற்றுவார்

# கோவைகோனியம்மன்!!

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com



போன ஜென்மத்தில் நாம் என்ன செய்து கொண்டிருந்தோம் என்ன நினைத்துக் கொண்டிருந்தோம் என்பதை அறிவதும் அறிவியல் தான்! நினைவுத் திறன் அதீத அளவில் இருந்தால் தான் நமது முற்பிறவி பற்றி அறிய முடியும். புத்தர், கடவுளே இல்லை என்றவர் ஆனால் முற்பிறவி என்பது உண்டு என நம்பினார். ஒரு விளக்கை ஏற்றினால், அதைக்கொண்டு அடுத்தது அதிலிருந்து இன்னொன்று என பல விளக்குகளை தொடர்ச்சியாக ஏற்ற முடியும். இப்படித்தான் கடந்து போன பிறவியின் நினைவுகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆகையால் தான் பல பிரச்சனைகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அடுத்து ஏற்ற முடியாமல் ஒரு விளக்கு அனைவதைப் போல் நமது மூளை முற்பிறவி நினைவுகளை எப்போது மறந்து, புதிய சிந்தனை பிறக்கிறதோ அப்போது தான் நமது பிரச்சனைகள் மறந்து புதிய வாழ்கை, புதிய பாதை பிறக்கும்.

Dr. Baskaran Pillai



கண்விழித்து கல்விகற்று தேர்வு எழுதி, அடுத்த நிலையைக் காண காத்திருந்த மாணவர்களுக்கு தேர்வின் முடிவுகள் வந்துவிட்டது. இதில் பலர் சொர்க்கத்தின் கதவு திறந்ததாக மகிழ்வெய்தி இருப்பர்! வேறு சிலரோ.... இன்னும் நமக்கான வாசல் திறக்க வில்லையே என்று ஏக்கப் பெருமூச்சு விட்டபடி இருக்கலாம்.

ஒன்று மட்டும் உண்மை! வெற்றி பெற்றவர்கள் வீறுநடை போடுங்கள்; வெற்றி வாய்ப்பை இழந்தோர் விடாமுயற்சியுடன் முன்னேறுங்கள்! காலம் உங்களுக்கு சொர்கத்திற்கான வாசலை திறந்து விடும்!

பள்ளிப் படிப்பை முடித்தவர்கள். தங்கள் பாதங்களை கல்லூரிகளில் வைத்து தடம் பதிக்க துடிப்பது இயல்பு! மாணவர்களே! உங்கள் அறிவு எதில் லயித்திருக்கிறதோ உங்கள் அறிவு எதை நோக்கி நடைபோடுகிறதோ... அந்த பாடங்களை - அந்தத் துறைகளை தேர்ந்தெடுங்கள்!

பெற்றோர்களே! உங்கள் கனவுகளை பிள்ளைகளின் மேல் சுமத்தாமல் அவர்களின் திறனறிந்து, சுதந்திரமாக செயல்பட விடுங்கள்! தன் எண்ணப்படியே, தன்னுடைய பலமறிந்து ஓடுபவனே வெற்றிக்கோட்டை தொட முடியும்! அப்போதுதான் ஒவ்வொரு மாணவனும் இந்நாட்டு மன்னனாய் - பாரதத்தின் எதிர்காலத் தூணாய் விளங்கி, முன்னேற்றப் பாதையில் நாடு செல்ல காரணமாக விளங்க முடியும்! நன்றி!

அன்புடன்
(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

அன்பு சத்வித்யா வாசகர்களே! இதுவரை இணையதளத்தில் வெளியாகி, எல்லையில்லா ஆன்மீக செய்திகளை அள்ளித் தந்து கொண்டிருக்கும் நமது சத்வித்யா இணையதள மாத இதழ், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க விரைவில் புத்தக வடிவில் உங்கள் கரங்களில் தவழவிருக்கிறது என்பதனை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றென்றும் உங்கள் ஆதரவை வேண்டும், Astroved.com மாத இதழ்

அன்புடன்
Astroved.com



# ஜூலை மாத காலண்டர் – 2022

**ஜுலை** | ஸ்ரீ சுபகிருது வருடம் ஆனி - ஆடி | **JULY 2022**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **SUN** ஞாயிறு | **31** ஆடி 15 | சதுர்த்தி **3** 19 | ஏகாதசி பக்ரீத் **10** 26 | **17** ஆடி 01 | ஏகாதசி **24** 08 |
| **MON** திங்கள் | அரசினா விடுமுறை: 10. பக்ரீத் பண்டிகை<br>இந்துக்கள் பண்டிகை: 6. ஆனி உத்திர தரிசனம் | **4** 20 | பிரதோஷம் **11** 27 | **18** 02 | **25** 09 |
| **TUE** செவ்வாய் | கிறிஸ்துவ பண்டிகை: 02. தேவமாதா காட்சியருளிய தினம்<br>முஸ்லீம் பண்டிகை: 9. அரபா மெக்காவுக்கு ஹஜ்யாத்திரை செய்த நாள் 10. பக்ரீத் பண்டிகை 31. ஹிஜிரி வருடப்பிறப்பு | ஷஷ்டி **5** 21 | **12** 28 | ஷஷ்டி **19** 03 | பிரதோஷம் சிவராத்திரி **26** 10 |
| **WED** புதன் | வளர்பிறை சுபமுகூர்த்த நாட்கள் -<br>தேய்பிறை சுபமுகூர்த்த நாட்கள் -<br>கரி நாட்கள்: 15, 20 கரிநாள் அன்று சுபகாரியங்கள் தவிர்க்கவும் | **6** 22 | பௌர்ணமி **13** 29 | **20** 04 | **27** 11 |
| **THU** வியாழன் | [illegible] | அஷ்டமி **7** 23 | **14** 30 | அஷ்டமி **21** 05 | அமாவாசை **28** 12 |
| **FRI** வெள்ளி | **1** ஆனி 17 | நவமி **8** 24 | **15** 31 | நவமி **22** 06 | **29** 13 |
| **SAT** சனி | **2** 18 | வங்கி விடுமுறை தசமி **9** 25 | சதுர்த்தி **16** 32 | கார்த்திகை ★ தசமி **23** 07 | **30** 14 |

www.dailycalendartamil.com

# ஸ்ரீ யோக ஹயக்ரீவர்



திரு. பிரபு

ஸ்ரீ யோக ஹயக்ரீவரை வழிபடுவதன் மூலம் கல்வியில் சிறந்து விளங்க முடியும், ஞாபக சக்தி மேம்படும், தேர்வுகளில் தேர்ச்சி பெறமுடியும். யோக ஹயக்ரீவர் திருத்தலம் செட்டிபுண்ணியம் செங்கற்பட்டில் அமைந்துள்ளது. இங்கு யோக ஹயக்ரீவர் நான்கு கைகளுடன் யோக நிலையில் இருப்பது சிறப்பு. இந்தத் தலத்தில் ஸ்ரீ தேவநாத பெருமாள் மூலவராக உள்ளார்.

இந்தத் தலத்திற்கு சென்று ஸ்ரீயோக ஹயக்ரீவரையும் ஸ்ரீ தேவநாதப் பெருமாளையும், தாயாரையும், சீதா ராமரையும் வழிபடுவதன் மூலம் அறிவும், ஞானமும் பெருகும், கல்வியில் மேன்மை அடைய முடியும்.

வழிபடும் முறை:
இந்தத் தலத்திற்கு ஒவ்வொரு மாதமும் வரும் திருவோண நட்சத்திர நாளன்று சென்று தீபமேற்றி வழிபட வேண்டும். வெற்றிலை, பாக்கு (தாம்பூலம்), துளசி, தேங்காய், மலர்கள், பழ வகைகள், மஞ்சள், குங்குமம், ஏலக்காய், எலுமிச்சை பழம் கொண்டு சென்று மாணவர்கள் தங்கள் பெயருக்கு அர்ச்சனை செய்து தியானம் செய்து வரவேண்டும்.

கல்வியில் தேர்ச்சி பெற முடியாத மாணவர்கள் கூட தொடர்ந்து திருவோண நட்சத்திர நாளன்று

வழிபடுவதன் மூலம் மிக உயர்ந்த மதிப்பெண்களைப் பெற முடியும். 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதுபவர்கள் மருத்துவம் மற்றும் இதர நுழைவுத் தேர்வுகள் எழுதுபவர்கள் ஹயக்ரீவரை வழிபடுவதன் மூலம் இலக்கை அடைய முடியும்.

IAS, IPS போன்ற உயர்ந்த கல்வி பயிலும் மாணவர்கள் ஹயக்ரீவர் வழிபாடு செய்த பின்பு மலை சார்ந்த கோயில்களை கிரிவலம் சென்று வரவேண்டும்.

இது அரசு சார்ந்த (TNPSC> UPSC> SSC....) அனைத்து நுழைவுத் தேர்வுகளிலும் வெற்றி பெற உதவியாக இருக்கும்.

கிரிவலம் செல்ல வேண்டிய நாள், பவுர்ணமி மற்றும் ஜென்ம நட்சத்திர நாளாக இருக்க வேண்டும். ஹயக்ரீவரை திருவோண நட்சத்திரம் அன்று வழிபடுவது மற்றும் அனைத்து புதன் கிழமைகளிலும் தரிசனம் செய்வது மிகவும் சிறப்பு.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை தொடர்ந்து திருவோண நட்சத்திர நாளில் இந்த தலத்திற்கு அழைத்துச் சென்றால் பிள்ளைகளின் கல்வியில் மாற்றங்களை உணர முடியும்.

சாதனை புரிய விரும்புவோர்கள் தங்கள் இலக்கை நிர்ணயித்து தொடர்ந்து வழிபட்டால் சாதிக்க முடியும்.



திருக்கோயில் திரு உலா

# பரிகாரத் தலம்



## புதுவை அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் ஆலயச் சிறப்பு

மிகச் சிறந்த பரிகாரத் தலம் இது என்றால் அது மிகையில்லை. நீண்ட நாட்களாக வருத்தும் எவ்வித கொடிய நோயாக இருந்தாலும், இத்தல அம்பிகையையும், இத்தல இறைவனையும் மனமுருக வேண்டி வழிபட்டால் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெறலாம்.

### ஆலயம் அமைவிடம்

புதுவை- கடலூர் பிரதான சாலையில் இடையார்பாளையம் - நாணமேடு கிராமத்தில் மேற்கு திசையில் அமைந்துள்ளது.

### திருத்தலப் பெருமை

மிகத் தொன்மையான சிவாலயம் இது. தலவிருட்சம் வேப்பமரம். பக்தர்கள் இத்தல விருட்சமான வேப்ப மரத்தை வலம் வந்து பிரார்த்தனை செய்து கொண்டால் எத்தகைய நோயானாலும் முழுமையாக குணம் அடைந்து விடும் என்பது ஐதீகம். பொதுவாக வருத்தும் பிணி அகல ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில் ஸ்ரீ வைத்தியநாதரையும் ஸ்ரீ தையல் நாயகியையும் வழிபடுவதும், சென்னை திருவான்மியூர் ஸ்ரீ மருதீஸ்வரரையும் வழிபடுவதும் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இத்தலமோ நோய் தீர்க்கும் மருந்தாலயமாக நிகழ்கிறது.

இத்தல குளம் இறைவனால் ஏற்படுத்தப்பட்டது. இத்தலத்து ஈசனுக்கு அபிஷேகம் செய்ய சிவபிரானே நன்னீர் கண்டு எடுத்துக் கொடுத்த காரணத்தால் (ஜலம் கண்டு கொடுத்த ஈசன்) ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் என அழைக்கப்படுகிறார்.

எத்தகைய வறட்சிக் காலத்திலும் இக்குளம் வற்றாது நில வளம் காண இன்றளவும் உதவுகிறது.

சிவலிங்கத் திருமேனியில் உள்ள ஆவுடையார் சதுர வடிவில் உள்ளதைக் காணலாம். இத்தலத்தில் வடகிழக்கில் அம்மன் சன்னிதி அழகுற அமைந்துள்ளது. மாதந்தோறும் பிரதோஷ வழிபாடு, பௌர்ணமி வழிபாடு, திருவாதிரை ஆருத்ரா தரிசனம், ஆணி திருமஞ்சனம், மகா சிவராத்திரி என அனைத்து விசேஷங்களும் மிகவும் அற்புதமாக நடைபெறுகிறது.

## புதுவை சிவன் கோயில்

இத்திருத்தலத்தில் கருவறைக்கு வலது புறத்தில் ஸ்ரீ விநாயகர் சந்நிதியும் இடது புறத்தில் ஸ்ரீ முருகப்பெருமான் சந்நிதியும் அமைந்துள்ளது. ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, ஸ்ரீதுர்க்கை, ஸ்ரீ திருமால் சந்நிதிகள் எழிலுற அமைந்துள்ளன.

கோயிலுக்கு வர இயலாத வயோதிகர்கள் நோயால் பெரிதும் வருந்துவோர் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரரையும், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரியையும் மனதார வழிபட்டு, திருநீறு அணிந்து உள்ளம் உருக வழிபட்டால் அல்லும்பகலும் நன்மையே விளையும். வருத்திய நோய் அகலும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். இத்தல நாதரையும், இத்தல அம்பிகையையும் வழிபட்டு நலம் யாவும் பெறுவோம்.





சைவ சித்தாந்த செம்மல்
**கவிஞர். சீனு. செந்தாமரை**
கடலூர்



# திருமாலின் லீலை
# வாயில் காவலர்கள் ஜெயன் மற்றும் விஜயன்

வைகுண்டத்தின் வாயிற் காவலர்களாக இருப்பவர்கள் ஜெயன் மற்றும் விஜயன். ஒரு சமயம் ப்ரம்ம குமாரர்கள் சனகர், சனந்தனர், சனாதனா மற்றும் சனத்குமாரர் திருமாலை சந்தித்து ஆசி பெற எண்ணி வைகுண்டம் வந்தனர்.

அவர்கள் காலவரிசைப்படி மிகவும் வயதானவர்களாக இருந்தபோதிலும், அவர்களின் தவத்தின் சக்தியால் அவர்கள் சிறு குழந்தைகளைப் போல தோற்றமளித்தனர். அவர்கள் தூய்மையான குணங்களின் உருவகங்களாக

இருந்தனர் மற்றும் பெருமை, பேராசை, பற்றுதல், காமம் அல்லது பிற பொருள் ஆசைகள் போன்ற எதிர்மறையான குணங்கள் எதுவும் அவர்களிடம் இல்லை.

குழந்தை ரூபத்தில் இருந்ததால் அவர்களின் சக்தியை உணராத ஜெயன் மற்றும் விஜயன் அவர்களை வைகுண்டத்தில் நுழைய அனுமதிக்கவில்லை. கோபம் கொண்ட ப்ரம்ம குமாரர்கள் அவர்களை வைகுண்டத்தை விட்டு வெளியேறி பூலோகம் செலுங்கள் என்று சாபம் அளித்தனர்.

கவலையில் ஆழ்ந்த அவர்கள் எம்பெருமாளிடம் சரணடைந்து சாபவிமோசனம் வேண்டி நின்றனர்.

பக்தர்களுக்காக தான் பெருமாள் என்ற கூற்றை மறந்ததால் அவர்களுக்கு சாபம் அளிக்கபட்டது என்றும் அதனை அவர்கள் அனுபவிக்கத்தான் வேண்டும் என்றும் பெருமாள் பணித்தார். ஆயினும் இரண்டு வாய்ப்பை இறைவன் அருளினார் அவை

1. 7 பிறவிகள் எடுத்து ஸ்ரீமன் நாராயணன் பெருமைகளை பூலோகத்தில் பரப்பி வைகுண்டம் திரும்பலாம்.

2. 3 பிறவிகள் ஸ்ரீமன் நாராயணனை எதிர்த்து வைகுண்டம் திரும்பலாம்.

எம்பெருமானை 7 ஜென்மங்கள் பிரிய முடியாது என்று எண்ணி அவர்கள் இரண்டாவது வாய்ப்பை தேர்வு செய்தனர். அதன்படி

சத்ய யுகத்தில்: ஹிரண்யாக்ஷன் மற்றும் ஹிரண்யகசிபு.

திரேதா யுகத்தில் : ராவணன் மற்றும் கும்பகர்ணன்.

துவாபர யுகத்தில் : கம்ஸன் மற்றும் சிசுபாலன்.

இவ்வாறு மூன்று பிறவிகள் எடுத்து தங்கள் சாப விமோசனம் பெற்று வைகுண்டம் திரும்பினார்கள்.

மகாபாரத்ததில் எனக்கு பிடித்த வரிகள்.

நினைத்தபடி நீ சென்றால் என் ஒழிந்தால் என்

செயித்த நூறு மைந்தர்களின் முதல்வன் நிலம் வழங்கினால் என் வழங்காமல் இருந்தால் என்

கொண்டீட்ட முடியை இவள் முடிந்தால் என் முடியாமல் இருந்தால் என்

யாம் என்ன அறியோம் ஆதிமூர்த்தி உலகத்தில் ஒருவனுக்கும் தெரியாது இங்கு உன் மாயை ஆனால் ஒன்றை மட்டும் உணர்வேன் உண்மையாக உலகத்தை ஆளும் திருமூர்த்தியின் கணக்கு எதுவோ அதுவே என் கணக்கு.

இந்த பாடலின் பொருள் பற்றிய கதை தொடரும். சர்வம் ஸ்ரீ கிருஷ்ணார்பணமஸ்து

மகாபாரத்ததில் பாண்டு இறக்கும் தருவாயில் தன்னுடய 5 புத்திரர்களை அழைத்து தன்னுடய உடலை தீக்கிரை ஆக்கும் முன் அதனை உண்டிட வேண்டும் என்று பணித்தார். அவ்வாறு உண்டால் முக்காலமும் உணரும் சக்தியை அவர்கள் பெறுவார்கள் என்று கூறி இறந்தார். இதனை மறைந்து கவனித்த மாயவன் கண்ணன் அவர்களை திசை திருப்பி பாண்டுவை எரிக்க காட்டிற்கு சென்று விறகுகளை கொண்டு வருவோம் என்று அழைத்துச்சென்றான். பாண்டுவின் பூத உடலின் பாதுகாப்பிற்காக சகாதேவனை மட்டும் காவல் காக்கும்படி கூறி கண்ணன் மீதமுள்ள நால்வரையும் அழைத்துசென்றான். இதற்கிடையில் தந்தையின் கூற்றை சிந்தித்த சகாதேவன் கிருஷ்ணன் வருவதற்குள் பாண்டுவின் சுண்டு விரலை உண்டார். அதனால் முக்காலமும் உணரும் சக்தியை பெற்றான். அனைவரும் விறகினை கஷ்டப்பட்டு சுமந்து வரும் சமயம் கிருஷ்ணனின் தலையில் விறகுகள் இல்லாமல் அவைகள் மிதந்தும் பறந்தும் வந்ததை சகாதேவன் கண்டான். ஒவ்வொருவரும் விறகுகளை சுமந்து களைப்பில் இருக்க இறைவனும் களைப்பில் இருப்பதை போல் நடிக்க சகாதேவனோ இறைவனிடம் நன்றாக நடிக்கிறாய் மாதவா என்று சொன்னதும் கண்ணன் சகாதேவனை வினவ சகாதேவன் உண்மையை ஒப்பு கொண்டான். உடனே கிருஷ்ணன் சகாதேவனிடம் எதிர் காலத்தில் தான் நடத்த இருக்கும் லீலையை நீயும் இனி முன்கூட்டியே அறிவாய் என்றும் எக்காலத்திலும் யாருக்கும் அதனை முன்னரே கூறக்கூடாது என்று சத்தியத்தை பெற்றான்.

அதனால் தான் துரியோதனன் பாரத போரில் சகாதேவனை அணுகி வெற்றிக்கு நாள் வேண்டி இருந்தான்.

சகாதேவனுக்கு மட்டும் ஏன் இந்த வரத்தை இறைவன் அளித்தான். அதனை ஏன் மற்றவர்களுக்கு மறுத்தான். அதுவும் அவன் லீலைகளில் ஒன்று.

தர்மன் : அனைத்து சாஸ்திரங்களை அறிந்தவர்.

பீமசேனன் : உடல் வலிமை மிக்கவன்.

அர்ஜுனன் : சிறந்த வில்லாளி.

நகுலன் : மருத்துவ கலையில் நிபுணத்துவம் பெற்றவன்.

அதனால் தான் கிருஷ்ணன் சகாதேவனுக்கு இந்த வரத்தை அளித்தான்.

இறைவன் நிணத்திருந்தால் சகாதேவன் சக்தியை பறித்திருக்க இயலும் அதனை செய்யாமல் இருந்தது தான் கண்ணனின் கருணை.

ஜோதிட சாஸ்திரதில் கைத்தேர்ந்தவனாக விளங்கிய சகாதேவன், பாரத போரில் கர்ணன் இறந்ததும் மற்றும் துரியோதனன் தோற்ற பிறகு கிருஷ்ணனிடம் இக்கலை ஒரு மாயை என்றும் உண்மை இல்லாத சாஸ்திரம் என்று கூறி ஜோதிட குறிப்புகளை எரிக்க முற்பட்டான்.

கிருஷ்ணன் அதனை தடுத்து சகாதேவனிடம் ஏன் இவ்வாறு என்று கேட்க சகாதேவனோ என் தமயனில் ஒருவன் கர்ணன் அதனை என்னால் உணர முடியவில்லை. நான் நாள் குறித்தும் துரியோதனன் தோற்றான் என்றும் கூற இறைவன் சிரித்தவாறே அனைத்தும் நீ நினைத்தபடி நடந்தால் பிறகு “நான் எதற்கு” என்றான்.

சர்வம் ஸ்ரீ கிருஷ்ணார்பணமஸ்து.



திரு. கிருஷ்ணன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

# திதிகளுக்குரிய பெண் தெய்வங்களும் திதி சூன்ய பரிகாரங்களும்

இந்த பூமியில் பிறந்த அனைவரும் ஏதாவது ஒரு திதியில் பிறந்து இருப்போம். அவ்வாறு பிறந்த திதிகளுக்கு ஏற்றவாறு நமது ஜனன ஜாதகத்தில் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட ராசிகள் திதி சூன்யம் ஆகி அந்த ராசியில் அமையும் பாவங்களும் அந்த ராசி அதிபதிகளும் பலம் குறைந்து விடுகின்றன. திதி சூன்யம் அடைந்த ராசிகளின் அதிபதிகள் திதி சூன்யாதிபதிகள் என்று அழைக்கப்படுகிறது. பௌர்ணமி மற்றும் அமாவாசை திதிகளுக்கு எந்த ராசிகளும் சூன்யம் அடைவதில்லை. வளர்பிறையில் பிறந்து இருந்தாலும் தேய்பிறையில் பிறந்து இருந்தாலும் திதிக்குரிய பெண் தெய்வம் மாறுவதில்லை. எடுத்துக்காட்டா வளர்பிறை சதுர்தசி திதியில் பிறந்து இருந்தாலும் தேய்பிறை சதுர்தசி திதியில் பிறந்து இருந்தாலும் ஜ்வாலமாலினி தேவியை தான் வழிபட வேண்டும். அதே போல் பௌர்ணமி திதியில் பிறந்து இருந்தாலும் அமாவாசை திதியில் பிறந்து இருந்தாலும் சித்ரா தேவியை வழிபட வேண்டும்.

கீழே எந்த திதிகளுக்கு எந்த பெண் தெய்வத்தை வழிபட்டு திதி சூன்ய பாதிப்பிலிருந்து விடுபடலாம் என்று பார்ப்போம்.

| ஜென்ம திதி | திதியின் பெண் தெய்வம் |
|---|---|
| பிரதமை | காமேஷ்வரி தேவி |
| துவிதியை | பாகமாலினி தேவி |
| திரிதியை | நித்ய கிலின்னா தேவி |
| சதுர்த்தி | பேருண்டா தேவி |
| பஞ்சமி | வாணி வாசினி தேவி |
| சஷ்டி | வஜ்ரேஷ்வரி தேவி |
| சப்தமி | சிவதூதி தேவி |
| அஷ்டமி | த்வரிதா தேவி |
| நவமி | குலசுந்தரி தேவி |
| தசமி | நித்யா தேவி |
| ஏகாதசி | நீலபதாகா தேவி |
| துவாதசி | விஜயா தேவி |
| திரயோதசி | சர்வமங்களா தேவி |
| சதுர்தசி | ஜ்வாலமாலினி தேவி |
| பௌர்ணமி/அமாவாசை | சித்ரா தேவி |



வழிபடும் முறை:

ஒரு குறிப்பிட்ட திதியில் பிறந்தவர்கள் அந்த குறிப்பிட்ட திதியில் விரதமிருந்து அந்த குறிப்பிட்ட திதியின் பெண் தெய்வத்திற்கு உரிய காயத்ரி மந்திரத்தை 108 முறை ஜபித்து, தூப தீப ஆராதனை செய்து வணங்கி வந்தால் திதி சூன்ய பாதிப்பிலிருந்து விடுபட்டு வாழ்க்கையில் சகல சௌபாக்கியங்களையும் அடைய முடியும்.



திரு. செந்தில் நாதன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்



# சித்தர் பூமி



ரா. பன்னீர்செல்வம்

“சத்வித்யா நேயர்களே! இந்த சித்தர்பூமி பதிவில் இடம்பெறவிருக்கும் சித்தர் யார்? என்பதை அறியுமுன்பாக இங்கே சில விபரங்களை நாம் காண வேண்டியுள்ளது! அவை என்னவெனில்......

தமிழகத்தின் தருமபுரி மாவட்டம் என்பது பல ஆண்டுகளாக வறட்சியின் பிடியில் சிக்கித் தவிக்கும் மாவட்டம்! பசுமை சூழுமா? வறுமை போகுமா? என மக்கள் அனைவரும் இறையருளை வேண்டி நிற்கின்ற நிலை. இன்று இந்த நிலை சற்றே மாறி இருக்கிறது; இனியும் மாறும்! இவையெல்லாம் எதனால்?... ஒரு மகான் இம்மண்ணில் ஜீவசமாதி அடைந்ததனால்! சரி.. யார் அந்த மகான்?!..

அவரைப் பற்றி அறிந்து கொள்வதற்கு முன்னர் மேலும் சில விபரங்களை பார்ப்போம்!

கோலார் தங்க வயல் (முபுகு) பகுதி! அங்கே ஒரு குடும்பம். பதின்ம வயதில் இருக்கும் ஒரு பெண். அதிக நாள் அக்கினியை மடியில் கட்டி வைத்திருக்க முடியாது என்பதனால் அச்சிறுமிக்கு விரைவிலேயே அதாவது இளவயதிலேயே திருமணம் நடத்தி விட வேண்டும் என்கிற எண்ணம். கோலாரிலே 96 வயதை தாண்டிய ஒரு கிழவி, தன்னை நாடி வருபவர்களுக்கு அருள்வாக்கு சொல்வதை ஆண்டவன் அருளால் பெற்றிருந்தார்.

அந்தக் கிழவியிடம் சென்று வாக்கு கேட்டால்.... தன் மகளுக்கு தான் நினைத்தது போல திருமணம் நடக்குமா? என அறிந்துகொள்ள விரும்பிய அந்த சிறுமியின் தாயார், தன் மகளான சிறுமியை அந்த அருள்வாக்கு கிழவியிடம் அழைத்துப்போனார்.

அப்போதுதான் ஒரு விஷயம் தெரிந்தது; அந்தக் கிழவிக்கு கண்பார்வை தெரியாது என்று! பின் எப்படி குறி சொல்வார்? என்ற கேள்வி எழுந்தது.

அந்த கிழவியின் முன்னால் தன் பெண்ணை நிற்க வைத்து அந்த தாய், "தன் மகளின் திருமணம் பற்றி கேட்டார். அந்தக் கிழவி மெல்ல அந்த சிறுமியின் கைகளைத் தொட்டுப் பார்த்தார். மனதிற்குள்ளே கணக்குப் போட்டார்.

"தாயி... இந்தப் பொண்ணுக்கு இருபத்தி ஏழு வயசுல தான் கல்யாணம் நடக்கும்! அது சாதாரண கல்யாணமா இருக்காது; தெய்வங்களும் தேவர்களும் வாழ்த்தற கல்யாணமா இருக்கும்! மாப்பிள்ளை யார் தெரியுமா? கோலூன்றி நடக்கிற ஒரு சன்னியாசி தான் மாப்பிள்ளையா வருவான்", என வாக்கு சொன்னார்.

அந்தக் கிழவி சொன்னதைப் போலவே சிறுமியான சாமுண்டீஸ்வரியின் 27வது வயதில் ஒரு சந்நியாசி வந்தார். இறைவனின் தீர்மானத்தால் அந்த சன்னியாசி சாமுண்டீஸ்வரியை மணக்க சம்மதித்தார். ஆனால், அந்தத் திருமணம் சாமானியமாய் நடக்கவில்லை.

பெண்ணை மணந்து கொள்ள, மாப்பிள்ளையான அந்த சன்னியாசி பல சோதனைகளை வைத்தார். ஒன்றல்ல, இரண்டல்ல! 18 நாட்கள் அந்த கடுமையான- ஆத்மார்த்தமான சோதனைகளை எதிர்கொண்டு, மனோ வலிமையோடு வெற்றி பெற்றார்; மணமகளான சாமுண்டீஸ்வரி!

சரி.... அந்த சன்னியாசி யார்?..... அவர்தான் சக்திவேல் சிவபுரத்தரசர்! கையிலே கோலேந்திய சன்னியாசியாய் ஆறடி உயரத்தில் வந்த இவர்தான் 18 நாட்கள் சோதித்த பின், இறை அருளோடு சாமுண்டீஸ்வரியை திருமணம் முடித்தார்.

இவர்தான்..... இன்று....

தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரியை அடுத்துள்ள பர்கூருக்கு அருகே "பட்ல பள்ளி" எனும் ஊரில் சிவபுரம் என்ற இடத்தில் ஜீவ சமாதி ஆகியுள்ளார், தன் தர்ம பத்தினியான சாமுண்டீஸ்வரியுடன்!

இந்த சித்தரின் பூர்வீகம் எது என ஆய்ந்து பார்த்தால்..... இவருடைய இயற்பெயர், பூர்வீகம் எதையுமே யாரும் அறிந்தார் இல்லை. கோலாருக்கு இவர் வந்து சேருவதற்கு முன் பெங்க**ளூ**ருக்கு அருகில் உள்ள கைவாரா குகையில் தவமியற்றி கொண்டிருந்ததாக அறியப்படுகிறது. அதற்கும் முன்னால் பற்பல ஆண்டுகள், இவர் பல்வேறு பகுதிகளில் பல காலம் வாழ்ந்து மக்களுக்கு அருள் புரிந்து தொண்டாற்றி வந்துள்ளார்.

மைசூரைச் சேர்ந்த "இன்கல்" என்ற ஊரிலே "நண்ணேஸ்வரா" என்னும் திருப்பெயரில் மகானாய் வலம் வந்துள்ளார். "தர்ம ஸ்தலர்விலே" ஜகதீஸ்வரானந்தன்" என்னும் திரு நாமத்திலும் அன்றைய மதராசான இன்றைய சென்னையிலே" ஒன்றும் தெரியாத விசுவாமித்திர மகாமுனிவர்" என்னும் பெயரிலும் "கைவாரா" விலே இருந்தபோது "கைவார் கண கண கண்ணன்" என்னும் அழகிய பெயரிலும் "இலங்கை"யிலே "முனி கண்ணன்" மற்றும் "சிலோன் சுவாமி" என்கிற அருட் பெயருடனும் பலபெயர்களில் பக்தர்களால் வணங்கப்பட்டுள்ளார்.

இது தவிர, "வெள்ளையங்கிரியப்பன்" கொல்லிமலை சுவாமி, கெண்ட கண்ணையன் என்ற பெயர்களிலும் பல திருவிடங்களிலும் பக்தர்களுக்காக, பல்வேறு திருவிளையாடல்கள் புரிந்து, தன்னை ஒரு மகான் என்று வெளிப்படுத்தியுள்ளார்.

இவர்தான், மங்கையான சாமுண்டீஸ்வரியை மணம்முடிக்க, இறைவனின் இன்னருளோடு கோலாருக்கு வந்து, தன் தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்த, சக்திவேல் சுவாமிகள் என்னும் பெயரில் இந்த உலகையே உய்விக்கும் பொருட்டு "தரும மாங்கல்ய பிச்சை" யாக இத்திருமணத்தை ஏற்றார்.

இத்திருமண வைபவம் நடந்த நன்னாளானது வைகாசி மாதம் அமாவாசை அன்று நள்ளிரவு 12 மணி.

இப்படியாக, அந்த தெய்வாம்சம் பொருந்திய திருமணம் முடிந்த கையோடு, தன் பத்தினியுடன், வந்த இடம் தான் நாம் காண வந்த பட்லபள்ளி ஆகும்.

இவர் வருவதற்கு முன் வறட்சியும் வறுமையும் ஒட்டிப்பிறந்த இரட்டைகுழந்தைகளாய் தவழ்ந்த இந்த பகுதி சுவாமிகள் வந்தபின்பு பசும்புல் தலை காட்ட செழுமை மிகுந்த பூமியாய் மெல்ல மெல்ல மாறத் தொடங்கியது.

புண்ணியவான்கள் கால்பட்ட இடமெல்லாம் பூலோகத்தில் கூட சொர்க்கமாய் மாறும் என்பதன் அடையாளமாய் இந்த பள்ளி மாறத்தொடங்கியது. நம் மகான் தங்கியிருந்த இடம் "சிவபுரம்" என்னும் பெயருடன் சிறப்புடன் விளங்கியது. அடுத்தடுத்து வளம்பெற தொடங்கி, இன்றளவும் மக்களின் வாழ்வாதாரத்திற்கு எவ்வித பாதிப்பும் இல்லாமல் விளங்குகின்றது.

இங்கே நம் சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் பற்பல லீலைகளை நிகழ்த்தி, மக்களின் மனக் கவலைகளை போக்கி வந்துள்ளார். இதில் இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால், சுவாமிகள் பட்ல பள்ளிக்கு வருவதற்கு முன்பே, நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால்.... என்று சிவபுரம் மடம் அமைந்திருக்கும் பகுதியில் ஒரு நடுகல் அமைந்திருந்தது.

அக்கல்லில் இன்னும் 200 ஆண்டுகளுக்குப்பின் ஒரு மகான் இங்கு வருவார்; அவரது வருகைக்கு பின்னர் இப்பகுதி வளம் பெறும் என்று வழங்கப்பட்டு உள்ளதை இன்றும் காணலாம்.

அந்தக் கல்லில் இருந்தபடியே... நமது மகான் இங்கு வந்ததும் அவரது ஆசியால் மக்களின் மனம் மகிழ்ந்ததும் இந்த மண் குளிர்ந்ததும் நடந்ததும் நடந்து கொண்டிருப்பதும் ஆண்டவனின் அருளாசி என்றே அனைவராலும் நம்பப்படுகிறது.

சுவாமிகளை காண, இப்பகுதி மக்கள் நிறைய பேர் வருவார்களாம். அவர்கள் முன்னிலையில் தன்னுடைய சித்துவேலைகளை காட்டி, ஆச்சரியப் படுத்தியிருக்கிறார் சுவாமிகள்.

ஒரு பெண், சுமார் 5 அடி உயரம் உள்ளவர்; நம் சுவாமிகளோ ஆறடிக்கும் மேலானவர்! ஆனால், அந்தப் பெண்மணிக்கு சுவாமிகளை ஒரு குழந்தையை போல் தன்னுடைய இடுப்பில் தூக்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை! தன் ஆசையை சுவாமிகளிடம் சொல்லியிருக்கிறார்.

சுவாமிகள் கொஞ்சமும் யோசிக்காமல், ”அவ்வளவுதானே!” என்றபடி துள்ளிக்குதித்து ஏதோ செய்ய..... என்ன ஆச்சரியம்?.... நான்கடி உயரமே கொண்டவராக சுவாமிகள் தன் உடலைக் குறுக்கிக் கொள்ள, அந்தப் பெண்மணி, சுவாமிகளை தன் இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்ட நிகழ்வெல்லாம் இங்கே சாதாரணமாக நிகழ்ந்துள்ளது.

சுவாமிகள், ஒரு குழந்தையைப் போல் மாறி, விளையாடிய காட்சிகளை கண்ணார கண்டவர்களும் உண்டு. தெய்வாம்சம் பொருந்திய மகானை மணாளனாய் மணந்த தெய்வமகள் சாமுண்டீஸ்வரிக்குள்ளும் தெய்வ சாந்நித்தியம் நிறைந்து காணப்பட்டது! மகானில் பாதியாய் மகிமைகள் புரிந்ததால் அவரை மக்கள் அனைவரும் ”சாமியம்மா” என அழைக்க தலைப்பட்டனர்.

இறைவனே நேரில் வந்தது போல இன்னருள் புரிந்த நமது சுவாமிகள் 1984 ஆம் ஆண்டு, இங்கே ஜீவசமாதி அடைந்தார்.

”சாமியம்மா” என அழைக்கப்பட்ட அம்மாவின் ஜீவசமாதியும் அருகருகே இவ்விடத்தில் அமைந்துள்ளது.

ஏராளமான மக்கள் ஜீவசமாதியை வந்து வணங்கி, அருள்பெற்று செல்கின்றனர். நம்பிக்கையுடன் வருவோர் அனைவருக்கும் நல்லருள் செய்யும் நற்றவ சிரேஷ்டராக கருணை மழை பொழிந்து வருகிறார்கள் “சக்திவேல் சிவப்புரத்தரசரும் சாமியம்மா”வும்!


ஜீவசமாதி அடைந்த பின் இப்புண்ணிய தலத்திலே வைகாசி அமாவாசை அன்று இரவு பன்னிரண்டு மணிக்கு இங்கே சுவாமிகளுக்கும் சுவாமியம்மாவுக்கும்

“தரும மாங்கல்ய பிச்சை“ என்னும் திருமண வைபவம் நடந்து வருகிறது. இந்த வைபவத்திலே கலந்து கொள்பவர் யாவருக்கும் எப்படிப்பட்ட தடையும் நீங்கி, திருமணம் நடைபெறுகிறது; குழந்தைச் செல்வம் இல்லாதோருக்கு அக்குறை தீருகிறது!

ஒருமுறை சிவபுரம் சென்று சிவபுரத்தரசரையும் சுவாமியம்மாவையும் வணங்கி, வழிபட்டு வாழ்வில் வளங்களை பெறுங்கள்.....



# திருவருள் புரிவார் திருவாரூர் தியாகேசன்!



பிரபுசங்கர்

திருவாரூர் என்றாலேயே பளிச்சென்று தேர் நினைவுக்கு வருவது ஆன்மிக இயல்பு. 'திருவாரூர் தேரழகு' என்ற சொலவடையும் உண்டே! இந்தத் திருத்தலத்தில் கோயில் கொண்டு அருள்பாலிக்கிறார் தியாகராஜர். 'ஆரூர்' என்பது ஊரின் பெயர்; கோவில் வரலாறுப்படி 'பூங்கோயில்' என்பது ஆலயத்தின் பெயர். தேவாரம், சிவலிங்கத்தை 'திருமூலட்டானம்' என்று பதிவு செய்கிறது. அன்றைய ஆரூர்ப் பூங்கோயில் இன்று 'தியாகராஜ சுவாமி திருக்கோயில்' என்று போற்றி வணங்கப்படுகிறது.

கோயில் என்று சிதம்பரம் நடராஜரின் ஆலயத்தைச் சொல்வதுபோல, திருவாரூர் ஆலயத்தை 'பெரிய கோயில்' என்று வழங்குகிறார்கள். ஆகவே தில்லைக்கு நிகரான புராதனப் பெருமை கொண்டது ஆரூர் கோயில். ஆமாம், பெரிய கோயில் எனப்பட்டதாலேயே ஆரூரைத் தில்லைக்கும் முற்பட்டதாகக் கருதலாம் அல்லவா? இரு தலங்களிலும் சிவலிங்கம் 'மூலட்டானம்' என்றே அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

கரையான் புற்றே இங்கு சிவலிங்கம் ஆனதால், இறைவன் வடமொழியில், வன்மீக நாதர் என்று வணங்கப் பெறுகிறார். 'வன்மீகம்' என்றால் புற்று. இத்தலம் ஐம்பெரும் பூதத் தலங்களுள் ஒன்றான மண் தலமாக அறியப்படுகிறது. காஞ்சிபுரம் ஏகாம்பரரும், ஐயாறு ஐயாறப்பரும் மண் வடிவினரே; இதனாலேயே அவ்விரண்டும் மண் தலங்களே என்பதும் ஒப்பு நோக்கத் தக்கது.

புற்றிடங் கொண்டார் என்ற தியாகராஜப் பெருமான், மிகப்பெரிய விமானம் கொண்ட தனிக் கருவறையில் கிழக்கு நோக்கி கோயில் கொண்டுள்ளார். அம்பிகை, 'அல்லியங்கோதை' என்ற நாமம் பூண்டு, தெற்கு நோக்கிய தனிக்கோயிலில் எழுந்தருளியுள்ளார். 'நீலோத்பலாம்பாள்' என்பது அன்னையின் வடமொழி பெயர்.

அம்பிகைக்கு வலப் பக்கத்தில் தியாகராஜ சுவாமி. தில்லை நடராஜரைப்போல் இவரும் தனித்தன்மை

கொண்டவர். உற்சவ மூர்த்தி அல்லர். இவரை சோமாஸ்கந்த வடிவினர் என்பர்.

தியாகராஜர் எழுந்தருளியுள்ள சிறப்பான ஏழு தலங்களைச் 'சப்த விடங்கத் தலங்கள்' என்று பேசுவார்கள். 'விடங்கர்' என்றால் 'உளியால் செதுக்கப்படாதவர்' என்று பொருள் - சுயம்பு. சப்த விடங்கத் தலங்களுள் முதன்மையானது ஆரூர்.

திருமால், தன் மார்பில் வைத்துப் பூசிக்கப் பெற்றவர் தியாகராஜர்!

இறை பிம்பமான தியாகராஜரின் திருமேனியை முழுவதுமாக நம்மால் தரிசிக்க இயலாது. கழுத்து வரை மணம் மிக்க மலர்களால் திருமேனி மறைக்கப்பட்டே காட்சி தருவார். ஆனால் தியாகராஜருக்கு உரிய மூலவர், மரகதலிங்கத் திருமேனியராகத் தனிப் பேழையில், தியாகராஜருக்கு அருகே வைக்கப்பட்டு பூஜிக்கப் பெறுகிறார்.

முசுகுந்தன் மற்றும் சங்கர சேவகன் என்ற மன்னர்கள் வேண்டிக் கொண்டபடி, தியாகராஜர், அரசக் கோலத்தில், திருவாரூரை அரசாண்டார் என்பர். 'அமரர் நாடு ஆளாதே ஆரூர் ஆண்ட' என்று தேவாரப் பாடல் ஒன்று இதனை விளக்குகிறது.

இக்கோயிலில் தியாகராஜருக்கு 'திருவந்திக்காப்பு' என்னும் மலர் மாலை வழிபாடு வெகு சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறது. அதேபோல 'முசுகுந்தார்ச்சனை'யும் பிரமாண்டமாக நடைபெறும். எம்பெருமான் தியாகராஜரின் பாத தரிசனம் ஆண்டுக்கு இருமுறை மட்டுமே காணக் கிடைக்கும். அத்திருநாட்கள், மார்கழி திருவாதிரை நட்சத்திர நாள் மற்றும் பங்குனி உத்திர நட்சத்திர நாள் ஆகியனவாகும். அப்போது தியாகராஜர் புகழ் பெற்ற ஆழித்தேரில் வலம் வருவார். அவர் போலவே தெப்பத்தில் சந்திரசேகரர் எழுந்தருளுவார். பங்குனி உத்திர விழாவின் நிறைவில் தியாகராஜர் அஜபா நடனத்துடன் பக்தர்களுக்குக் காட்சி தருவார். இந்த 'பக்தர் காட்சி', இப்போது 'பந்தல் காட்சி' என விநோதமாகத் திரிந்துவிட்டது!

தியாகராஜரை, தினமும் பூஜிக்கும் சிவாச்சாரிய மரபினர் 'நயினார்' எனப்படுகின்றனர். பூஜைக்கு உதவுவோர் 'அணுக்கத் தொண்டர்கள்' என அழைக்கப் பெறுவர். தியாகராஜர் சந்நதியில் பஞ்சமுக வாத்தியம் வாசிக்கப்படுகிறது.

இறைவனுக்கு ஓர் ஆண்டில் எட்டு முறை மட்டுமே அபிஷேகம் செய்விக்கப்படுகிறது.

ஆரூர்ப் பூங்கோயில் முதல் வெளிச்சுற்றில், வடமேற்கு மூலையில், அன்னை, 'கமலாம்பாள்' என்ற நாமத்துடன் தனிக் கோயில் கொண்டுள்ளாள். வடகிழக்கு நோக்கிக் கோண திசையில் அம்பிகையின் ஆலயம் அமைந்துள்ளது. காஞ்சி, காமகோட்டமும் இதேபோன்று கோண திசையில் அமைந்துள்ளது இங்கே ஒப்பு நோக்கத்தக்கது.

பண்டாசுரனை அழித்த யாகத்திலிருந்து தோன்றியவர் அன்னை லலிதாம்பிகை. ஒரு கையில் பாசம், மற்றொரு கையில் உருத்திராட்சம், ஏனைய இருகைகளில் தாமரை, பாசம் கொண்டு அன்னை யோக நிலையில் காட்சி தருகிறார். இடது காலை மாற்றி அமர்ந்த யோக முத்திரைக்கோலம், வித்தியாசமானது. சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீட்சிதர், இவ்வம்மை மீது 'நவாவரண கீர்த்தனை' பாடியுள்ளார்.

ஒரு பசுக்கன்றுக்கு நீதி வழங்குவதற்காகத் தன் மகனையே மனுநீதிச் சோழன் தேர்க்காலில் இட்டு மரணமடையச் செய்த அருள் சம்பவம் இங்குதான் நிகழ்ந்தது. விட்டவாசல் அருகில், இதனைச் சித்திரிக்கும் கல் தேர் அமைந்துள்ளது.

சீரும் சிறப்புமிக்கத் திருவாரூர் திருத்தலத்தில் வரலாற்றினை விளக்கும் 65 கல்வெட்டுகள் படி எடுத்து ஆராயப் பெற்றுள்ளன. வரலாற்றுப் பெருமிதம் கொண்ட அரிய 4 செப்பேடுகளும் இத்தலத்திற்கு உண்டு. கோயில் பராமரிப்புக்காகவும், மேம்பாட்டுக்கும் தம் பொருட்கள், சொத்துகளை தானம் செய்து, இறைவன் மீது தாம் கொண்ட பக்தியினை பக்தர்கள் வெளிப்படுத்திய ஆவணங்கள் இவை!





# வீட்டில் சந்தோஷம் மற்றும் அமைதி நிலைத்து இருக்க எளிய லால் கிதாப் பரிகாரங்கள்





திரு. செந்தில் நாதன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

என்னதான் வசதி வாய்ப்புகள் இருந்தாலும் நாம் வசிக்கும் வீட்டில் சந்தோஷமும் அமைதியும் இல்லை என்றால் அந்த வீடு நரகம் போல் காட்சி அளிக்கும். நமது இல்லம் எப்பொழுதும் சந்தோஷமாகவும் அமைதியாகவும் இருக்க கீழே உள்ள லால்கிதாப் பரிகாரங்கள் உதவுகின்றன.

1. வீட்டில் உள்ள யாரையும் பற்றி கடுமையான வார்த்தைகளை பேச வேண்டாம். யாரையும் அவமரியாதையுடன் நடத்தவோ, துஷ்பிரயோகம் செய்யவோ வேண்டாம். எப்பொழுதும் உங்கள் மனதில் நேர்மறையான எண்ணங்களை விதையுங்கள். தினமும் காலையிலும் மாலையிலும் வீட்டில் கற்பூரத்தை ஏற்ற வேண்டும்.
2. தினமும் அனுமன் கோயிலுக்குச் சென்று அரச மரத்திற்கு தண்ணீர் ஊற்றி வழிபட வேண்டும். தினசரி செல்லமுடியவில்லை என்றாலும் செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் சென்று அனுமனை வழிபடுங்கள்.
3. உங்கள் வாழ்க்கை பிரச்சினைகள் நிறைந்ததாக இருக்குமானால். அந்த பிரச்சனையிலிருந்து வெளியே வர நீங்கள் ஒருவரின் இறுதிச் சடங்கில் சுடுகாட்டில் இருந்து திரும்பும் போது, சில நாணயங்களை எடுத்து உங்கள் முதுகிற்கு பின்னால் எறிந்துவிட்டு வீட்டிற்குள் நுழையுங்கள்.
4. வெள்ளி பானை, கல் பானை, பித்தளை அல்லது செம்பு பாத்திரங்கள், மண் பானையில் தேன், கருப்பு ஆன்டிமனி, தண்ணீர் நிரப்பப்பட்ட வெள்ளிப் பெட்டி, வெல்லம், வெள்ளி துண்டு, அனுமன் சிலை என இந்த 10 பொருட்களை எப்பொழுதும் வீட்டில் வைத்திருக்க வேண்டும்.
5. எறும்பு, பறவை, பசு, நாய், காகம், ஆமை, மீன், மரம், பெண், அனாதை, முதியவர் ஆகியோருக்கு உணவும், தண்ணீரும் கொடுத்து அவர்களின் ஆசிர்வாதம் பெறுவது வீட்டில் அமைதி மற்றும் சந்தோஷத்தை ஏற்படுத்தும்.
6. வாஸ்துவின் படி வீட்டைக் கட்டவும். மற்றும் வாஸ்து குறைபாடுகளை நீக்க, வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் கற்பூரத்தை கொளுத்துவதன் மூலம், வாஸ்து குறைபாடுகள் தடுக்கப்படுகின்றன.
செல்வத்தை அதிகரிக்க வெள்ளிக்கிழமை அன்று அன்னை லட்சுமியின் கோவிலில் ஒரு துடைப்பத்தை தானம் செய்யுங்கள். இதைச் செய்வதன் மூலம் உங்கள் சேமிப்பு அதிகரித்து வீட்டில் சந்தோசம் கூடும்.

மேலே கூறப்பட்டுள்ள எளிய லால்கிதாப் பரிகாரங்களை செய்து வீட்டில் சந்தோசமும் அமைதியும் நிலைத்து இருக்க செய்வோம்.



# மருத்துவ உண்மைகள்!



கீதா மணி

மருத்துவ குணங்கொண்ட சிலவற்றை அறியலாம்.

## பேரிச்சம்பழம்

சுலபமாகக் கிடைக்கக் கூடியது பேரிச்சம்பழம். இதில் மக்னீசியம், சோடியம், பொட்டாசியம், பாஸ்பரஸ் போன்ற தாது உப்புக்கள் மற்றும் இரும்பு, சுண்ணாம்பு போன்ற உடல் தேவை சத்துக்கள் நிரம்பியுள்ளது.

தினசரி உடலுக்கு வேண்டிய “D“ காம்ப்ளக்ஸ் வைட்டமின்களும் கொண்டுள்ளது பேரிச்சம் பழம்.

தினமும் 3 பேரிச்சம் பழங்களை ஒரு குவளை பாலுடன் பருகி வர, அதில் உள்ள பல சத்துக்கள் மூலம் தேக ஆரோக்கியம் சீர்பெறும். எல்லா வயதினருக்கும் ஏற்ற சில பழங்களில் பேரிச்சையும் ஒன்று.

## தக்காளி பழம்

வைட்டமின் “C“ நிறைந்துள்ள தக்காளியை பச்சையாக உண்டால் நல்ல பலன் தான். இப்பழத்தில் சுத்தமான நீரும், வைட்டமின் “H“ என்கிற பயோட்டின் உள்ளன.

தினசரி காலை, மாலை இரு வேளைகளிலும் தக்காளியை தொடர்ந்து சாப்பிட்டு வர உடல் அதிக அளவில் நோய் எதிர்ப்பு சக்தியை பெற்றுவிடும். பற்கள் தொடர்பான நோய்களையும், நிமோனியா, டிப்தீரியா, எலும்புருக்கி ஸ்கர்வி போன்ற நோய்களையும் வராமல் காக்கும் குணம் கொண்ட தக்காளியை நாள்தோறும் 200 கிராமிலிருந்து 250 கிராம் வரை சேர்த்துக் கொள்ளல் நல்லது என்பது மருத்துவர்களின் ஆலோசனை.

## பப்பாளி பழம்

மாலைக்கண் நோயால் அவதிப்படுவோர், பப்பாளி பழத்தை தொடர்ந்து சாப்பிட்டுவர, அது குணமாகும் வாய்ப்பு கிட்டும். இது தவிர “A“ வைட்டமின் கொண்ட பப்பாளி சிறுநீரக குழாய் பிரச்சனைகள் தீரவும் எலும்பு வளர்ச்சி, பல் வளர்ச்சி மற்றும் தோல் வறட்சியை சரிப்படுத்தும் மருத்துவ தன்மையையும் கொண்டுள்ளது.

இவைதவிர பப்பாளியை அடிக்கடி சாப்பிடுவோரின் இளமை நீண்டு நிலைக்கும் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

## எலுமிச்சம் பழம்

அரச கனி என்று புகழப்படும் எலுமிச்சை கொடிய எய்ட்ஸ் வியாதியை கூட குணப்படுத்தவல்லது என்பது மருத்துவ கண்டுபிடிப்பு.

எலுமிச்சை பழச்சாறை பிழிந்து உப்பு சேர்த்து பருகிவர பித்தம் பறந்தோடிப் போகும்.

ரத்தக் கொதிப்பைக் கூட கட்டுப்படுத்தும் குணம் கொண்டது எலுமிச்சை பழம்.

## திருநீற்றுப்பச்சிலை

ஆசிமம் பேசிலிகம் என்ற தாவரவியல் பெயர் கொண்ட திருநீற்றுபச்சிலை மற்றும் இதன் விதை கூட மருந்து பொருளே.

தலைவலி, காது வலி, முகப்பரு போன்றவற்றை குணப்படுத்துவதோடு இந்த இலை உடல் நடுக்கத்தையும் குறைக்கவல்லது.

இதன் விதை கொண்ட குணம் வியர்வை மற்றும் தூக்கத்தை தூண்டி விடும்.

## தொட்டால் சிணுங்கி இலை

காரணப் பெயர் கொண்ட தொட்டால் சிணுங்கி இலை மற்றும் வேர் கூட மருத்துவப் பொருளாகும். மூலம், கக்குவான், இருமல் போன்றவற்றையும், யானைக்கால் நோய் கிருமிகளை அழிக்கவும் பயனாகிறது இச்செடி இலை.

## நெருஞ்சி இலை

சிறுநீரகக் கோளாறு, வயிற்று வலி, மூத்திரப்பை வீக்கம் போன்றவற்றை நீக்கும் இயல்புடைய நெருஞ்சி இலை, பழம், தண்டு வேர் கூட மருத்துவ குணம் உடையது.

## முடக்கு அறுத்தான் இலை என்னும் முடக்கத்தான் கீரை

இந்தக் கீரையின் இலை, வேர், தண்டு போன்றவைகூட தக்க மருந்து பொருளாகும்.

முடக்கத்தான் இலையானது கட்டி, வீக்கம், வாதம், காது வலி, மஞ்சள் காமாலை நோய் போன்றவற்றை குணமாகிவிடும்.

”சூலை பிடிப்பு, சொரி சிரங்கு வன்கரப்பான்
காலத் தோடு வளியும் கல் மலமும் காலைக் கடக்கத்தான் ஓடிவிடும் காசினியை விட்டு முடக்கற்றான் தனை மொழி” என்ற பாடலும் இதுபற்றி உண்டு.

## சில வியாதிகளுக்கு உடனடி தீர்வுகள்

### தலைவலி

பூண்டை அரைத்து நெற்றியில் பூசும் ஒரு வழி,
கேப்பை மாவில் கொதிநீரில் கிளறி நெற்றியில் பூசும் ஒரு முறை,
கடுகு அல்லது சுக்கை நீர் விட்டு அரைத்து நெற்றியில் பூசும் வேறு ஒரு முறை.
இவற்றில் எதை கையாண்டாலும் தலைவலி நீங்கிவிடும்.

### வாய்ப்புண் அவதி

தேங்காய்ப்பால் எடுத்து அரை டம்ளர் கொடுக்கலாம்
அல்லது கசகசாவை அரைத்து பாலில் கலந்து ஒரு டம்ளர் குடிக்க செய்யலாம்.
அல்லது வல்லாரை இலை, மணத்தக்காளி இலையை நன்கு கழுவி விட்டு சாறு பிழிந்து அருந்தலாம்.
அல்லது வெந்தயத்தை பொடி செய்து ஒரு டீஸ்பூன் தரலாம்.

### செண்பகப்பூ

நல்ல நறுமணம் உடைய செண்பகப்பூ, கால்களில் தோன்றும் வீக்கம், வாதம் போன்ற நோய்களை குணமாக்குவதோடு நேத்திர பிணி, பிரமேகம் போன்ற நோய்களையும் அழிக்க பயனாகிறது.

### ரோஜாப்பூ

அழகிய ரோஜாவை தலையில் சூடுவதால் பெண்களுக்கு ஏற்படும் ஜுரம், காது வலி, கபால பீனசம், காது சீழ், ஆசன எரிச்சல் போன்றவை குணமாகிவிடும் என்று கண்டுபிடித்துள்ளார்கள்.

### செம்பருத்திப்பூ

செம்பருத்திப் பூ தான் கொண்ட மருத்துவ தன்மையால் உடலில் ரத்தத்தை சுத்திகரிப்பு செய்யவும் உபயோகமாகிறது.



# இலையே! உன் விலை என்ன?



காஞ்சிக்குமரன்

அன்று அங்கே இலைகள் ஒன்றுகூடி மனம்விட்டுப் பேசிக் கொண்டிருந்தன. அப்பொழுது அங்கு பங்கு கொண்டிருந்த வாழையிலை தன் தலையை விறைப்பாக வைத்துக்கொண்டு” எல்லோரும் நல்லா இதை கேட்டுக்கணும்.

நம்ம இலை ஜாதியிலே நான்தான் உசத்தி. ஏன் தெரியுமா.... அவன் பணக்காரனாக இருந்தாலும், ஏழையாய் இருந்தாலும் அவங்களுக்கு பரிமாறப்படும் அத்தனை ருசியான பதார்த்தங்களையும் என்னிடம் போட்ட பிறகுதான், என் மூலம் மனிதர்கள் சாப்பிடுகிறார்களாக்கும்” என பெருமையாகச் சொன்னது. வாழையிலை பேசி முடித்த அடுத்த கணமே குபீரென சிரித்த வெற்றிலை” எப்படி வாழை இலை இப்படி திமிரா பேசலாம்...

அதிலே உண்டு முடித்த அத்தனை பேரும் அதை குப்பைத்தொட்டியில் தான

வீச ப்போறாங்க... இதில் பெருமைப்பட என்ன இருக்கு!” என எகத்தாளமாக கேட்டது.

பிறகு அது நான்தான் இலைகளில் உயர்ந்தவன். எப்படி தெரியுமா? கிடைத்ததே என்று நிறைய சாப்பிட்ட ஜனங்க... ஜீரணத்திற்கு வெற்றிலையை தானே வாயில போட்டு சுவைக்கிறாங்க..” என்று கூறி சுற்றிலும் கம்பீர “லுக்“கை விட்டது.

”அட! வெற்றிலையே.... ரொம்ப பீத்திக்க வேண்டாம்.... உன்னை வாயிலே போட்டு நல்லா மென்னு தின்னு ஆசாமிங்க அடுத்து செய்யற வேலை வாயிலிருந்து உன்னை ”தூ தூ” என்று துப்பி தெருவிலே போடற கேவலம் எப்பவுமே நடக்குதே!

”எல்லோரும் தெரிஞ்சுக்குங்க.... சமையல் ருசிக்கு என்னை வச்சு தானே தாளிச்சு கொட்டறாங்க..” அப்படின்னு கர்வமா கூறியது கறிவேப்பிலை.

எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த அங்கிருந்த துளசி அடக்கமாய் இப்படி சொன்னது-” வாழை இலையே! அகங்காரம் கொண்டு நீதான் சிரேஷ்டம் என பேசினாய்! அதனால் கடைசி கதி குப்பைத்தொட்டியில் உன் கதை முடிகிறது.

பிறகு துளசி தொடர்ந்தது” வெற்றிலையே! ஆணவத்துடன், திமிரும் கொண்ட உன் முடிவு தெருவில் வீசப்படும் நிலை ஆகிறது.

கருவேப்பிலையே உன் வாசம் முடியும் வரை இலையில் இருப்பு பிறகு எச்சில் இலை ஓரத்திற்கு போய் விட நேர்கிறது காரணம் உனது அகங்கார குணமே.

அந்த துர்குணம் எனக்கு துளிகூட இல்லாததால்தான் என்னை இறை பூஜைக்கு அனைவரும் உபயோகிக்கிறார்கள்.

குறிப்பாக பெருமாள் பூஜைக்காக பயன்படுத்துவதால் அவருடன் ஐக்கியமாகி விடும் புண்ணியமும் கிட்டுகிறது.

தயவுசெய்து இனகாரர்களே கேட்டுக் கொள்ளுங்கள்! “நான்“ எனும் அகந்தை நம்மை பற்ற விடவேண்டாம்.

அதனை மனித இனமே கொண்டு புத்தி வரும்வரை ஆட்டடும்! அவர்களை பகவான் பரந்தாமன் பார்த்துக்கொள்வார்” என அறிவுறுத்த, கர்வம் கொண்டு பேசிய இலைகள் தங்கள் நிலையை உணர்ந்து வாடி போய்விட்டன!

(சொற்பொழிவில் கேட்டது)

# மொழிப்பற்று

ஒருவன் எத்தனை மொழிகள் அறிந்து இருக்கிறான் என்பதை ஆராயும் பொழுது, அவன் கற்றுள்ள மொழிகளால் அவனது அறிவுத்திறனும் பன்மொழிப் புலமையும் வெளிப்படுகிறது.

ஆனால், அவனது தாய் மொழி தான் அவனுடன் இறுதிவரை உடன் இருக்கும் அடையாளம் என்பதை மறத்தலாகாது!

தாய் வயது முதிர்ச்சி உள்ள பெண்களை “அம்மா“ என்று அழைப்பது, ஒருவனது பண்பையும் குண நலனையும் குறிக்கும்! அதே நேரத்தில் அவன் தனது தாயை மறக்கலாகுமோ? அறிவு வளர்ச்சி, பார்ப்போரை தாயாக நினைக்க வைக்கும்; ஆனால், பாச உணர்ச்சி, தன்னை பெற்றெடுத்த தாயை நினைத்தாலே ஊற்றெடுக்கும்!

எனில், எத்தனை மொழிகள் அறிந்திருந்தாலும் தாய் மொழியை மறவாதீர்! அதுதான் நமது அடையாளம்!

சோழ தாசன்



## நாயன்மார் வரலாறு

# மாணிக்கவாசகர்

# குதிரைகள் வாங்கப் போய்....



ரா. பன்னீர்செல்வம்

நாயன்மார்கள் அறுபத்து மூவர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே! இந்த அறுபத்து மூவரில் நால்வர் மட்டும் தான் " சமயக்குரவர்" என்னும் தகைசால் புகழினை பெற்றனர். இவர்களால் பதிகம் பாடப்பெற்ற 276 தலங்களும் பாடல் பெற்ற தலங்களாய் பக்தர்களால் போற்றி வழங்கப்படுகின்றன.

அத்தகைய சிறப்பினைப் பெற்ற சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவர் தான் மாணிக்கவாசகர்! உள்ளத்து பெருகிவரும் பக்தியை உருக செய்தவர். பக்தியை மட்டுமா? தன் பாடல்களால் நம் ஊனையும் உயிரையும் உருக வைத்தவர்! தன் மாணிக்க வாசகங்களால் இறைவனையே சுவாசிக்கும் இணையில்லா பெருமகன் தான் நம் மாணிக்கவாசகர்!

வாதவூரில் அவதரித்ததால் வாதவூரார் எனவும் அழைக்கப்பட்டு அறியப்படுபவர்! மதுரையை ஆண்ட அரிமர்த்தன பாண்டிய மன்னனின் முதல் அமைச்சராக பணியாற்றினார், வாதவூரார்!

அரசனை நல்வழிப்படுத்தல், சீரிய ஆலோசனைகள் வழங்குதல், குடிகளின் நலம் பேணல், நாட்டு அரண்களை மேம்படுத்தல் என முதலமைச்சருக்கான பணியினை செவ்வனே செய்து வந்தார், வாதவூரார்!

சைவம் காக்கும் மரபிலே வந்த பாண்டிய மன்னனின் அமைச்சர் ஆனதால், சிவன் ஒருவனே தெய்வமென்று மற்றோரை போன்றே தினமும் மனதார வணங்குவாரே தவிர, மற்றபடி வாதவூராரின் சிந்தனை எல்லாம் மன்னன் நலம், நாட்டின் வளம், மக்களின் நல்வாழ்வு என்ற அளவில் இருந்து வந்தது!

இறைவன் ஈசனோ, இவரை வைத்து உலகுக்கு ஏதோ ஒரு பக்தி உணர்வை வெளிக்காட்டத் தக்க தருணம் பார்த்திருந்தான் என்று எண்ணும் வகையில் அமைந்தது ஓர் நிகழ்வு!

அரசனின் அமைச்சரான வாதவூரார் ஈசனின் அடியவர் என்கிற பேற்றினை பெறுவதற்கு அந்த ஈசனே ஒரு நாடகத்தை நடத்த எண்ணினான்.

அந்த நாளும் வந்தது!

அரிமர்த்தன பாண்டியனின் அரண்மனை!

தர்பார் மண்டபம் நிறைந்திருந்தது! அரியணையில் அமர்ந்திருந்த மன்னனின் முகத்தில் பல்வேறு உணர்வுகள்! மெல்ல, தன் அமைச்சரை பார்த்த மன்னன், "அமைச்சரே! நம் குடிகள் பசி பஞ்சம் ஏதுமின்றி இறைவன்பால் அன்பு கொண்டு நல்வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். எல்லாம் எமையாளும் ஈசனின் செயலே என்பதை யாம் அறிவோம்! ஆயினும் பகைவர்கள் நம்மை சுற்றிலுமுள்ள குறுநில மன்னர்களை வளைத்து நமது மண்ணிற்கு துரோகம் செய்யவும் நம் மீது படை எடுக்கவும் திட்டமிடுகிறார்கள் என்னும் செய்தியை ஒற்றர் மூலம் அறிந்தேன்!

இறையருள் நம்மை காப்பாற்றும்; என்றாலும் நம் படை பலத்தை வலுப்பெற செய்வது நம் கடமையாகும்! எனவே, அமைச்சரே.... நம் குதிரைப் படையை வலுப்படுத்த வேண்டும் என்று எண்ணம் கொண்டுள்ளேன்!

அவையோரே! களமாடும் குதிரைகளை அவற்றின் வகையறிந்து தேர்வு செய்து வாங்கிவர தேர்ந்த ஞானமும் அனுபவமும் வாய்ந்த நமது அமைச்சர் பெருமகனாரை அனுப்பலாம் என முடிவு செய்துவிட்டேன்! ஆயிரம் பரிகள் என் இலக்கு அவற்றைக் கொண்டுவந்து சேர்ப்பது நம் அமைச்சரின் பொறுப்பு! அமைச்சரே! பரம்பொருளின் துணைகொண்டு பரிகளை வாங்கிவர இன்றே புறப்படுங்கள்; பரிகள் வாங்க தேவையான பொன்னும் பொருளும் களஞ்சியத்திலிருந்து பெறப்பட்டு மூட்டை வடிவத்திலே



காத்திருக்கின்றன! அப்பொருட்கள் அனைத்தும் நம் படை வலிமையைப் பெருக்கும் பரிகளாக திரும்ப வேண்டும்! இவ்வரச பணியை சிரமேற்கொண்டு செவ்வனே செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே உண்டு! இன்றே சென்று வெற்றியுடன் பரிகளோடு திரும்புங்கள்".... என பெருமிதத்தோடு சொல்ல...

அமைச்சர், "நல்லது அரசே! தங்கள் அன்பும் இறைவனின் ஆசியும் என்னை வழிநடத்தும்! தங்கள் ஆணைப்படியே பரிகளுடன் திரும்புவேன்! வருகிறேன் மன்னா! " என நெஞ்சுயர்த்தி புறப்பட்டார்!

சில பல குதிரை வீரர்கள் புடைசூழ, நல்லதொரு ஜாதி குதிரையின் மீது ஆரோகணித்து பயணித்த படி இருந்தார் வாதவூரர்!

பொன், பொருட்கள் அடங்கிய மூட்டைகள் சில குதிரைகளிலும் பாதுகாப்பு வீரர்கள் சில குதிரைகளிலும் அமைச்சரை பின்தொடர்ந்தனர்!

நெடுந்தொலைவு வந்த களைப்பு! குதிரைகள் கொஞ்சம் இளைப்பாறிய பின் பயணத்தை தொடரலாம் என முடிவுசெய்து நீரும் நிழலும் உள்ள தக்க இடம் காண விழைந்தனர்.

தற்போது அவர்கள் வந்து சேர்ந்து இருந்த இடம் திருப்பெருந்துறை எனும் ஆவுடையார் கோவில் என்னும் அற்புத தலம் என்பதை அறிந்தனர். சற்று தூரத்தில் ஒரு பெரிய மரம் தென்படவே, குதிரைகளும் தாங்களும் இளைப்பாற அதுவே ஏற்ற இடம் என்பதனை அறிந்து மரத்தடி நோக்கி விரைந்தனர்!

அது குருந்த மரம்! மரத்தடியில்.... வடக்கு நோக்கி ஓடிய ஒரு தடித்த வேரை தலையணையாய் கொண்டு துறவி ஒருவர் படுத்துக் கொண்டிருந்தார். செம்பொன் மேனி, திரிசடை உடலெல்லாம் நீறுபூசி, காவி தரித்த கோலம்! கண்டதுமே கையெடுத்து கும்பிடத் தோன்றும் கருணை பொங்கும் முகம் என கடவுளே வந்தது போல் கண்மூடி இளைப்பாறிக் கொண்டிருந்தார். அந்தத் துறவி!

ஒருவேளை..... இறைவனே அவர் தானோ?!....

பரந்து விரிந்த நிழற்பரப்பு! இந்த இடமே சரியானது! அமைச்சரும் குழுவினரும் வந்து சேர்ந்தார்கள். குதிரைகளை எல்லாம் ஓரிடத்தில் கட்டினார்கள். கொள்ளும் தண்ணீரும் குதிரைகளுக்கு வைக்க ஏற்பாடு நடந்தது.

வாதவூரார் சுற்றுமுற்றும் பார்த்தபடி, மரத்தின் அடிப்பகுதியை நோக்கி வந்தார். அங்கே அருள் ஒளி வீசுகின்ற தோற்றத்தில் படுத்திருந்த துறவியை கண்டார். வாதவூராரின் கண்கள் அவரை விட்டு அகல மறுத்தன. உறங்கும் பாவனை; அதிலும் உறங்காத சிந்தனை! மூடியிருக்கும் இமைகளினுள்ளே முகிழ்ந்து வரும் கருணை.... " யார் இந்தத் துறவி! இவரை..... எங்கோ..... பார்த்தது போல் இருக்கிறதே.... எங்கே?.... ஓ..... ஞாபகம் வந்துவிட்டது! அடிக்கடி என் கனவில்

காட்சி தந்து ஆசி வழங்குவாரே ஒரு சிவனடியார்.... அவரைப் போலல்லவா தெரிகிறது! " என்றவாறு யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்.

அதே நேரத்தில்....

கண்களைக் கூட திறந்து பார்க்காத அத்துறவி, மெல்ல இதழ் விரித்து, " யார் அமைச்சரா?.... ஏன் அங்கேயே நிற்கீரீர்?! அருகில் வரலாமே! " என்றார்.

ஆச்சரியத்தில் திகைத்தார் வாதவூரார்! " எப்படி இது?.... ஒருவேளை நாம் தொலைவில் வரும் போதே பார்த்திருப்பாரோ?".... என யோசித்தபடியே அருகில் வந்தார்.

கண்திறந்து, சிறு புன்னகையோடு வாதவூராரை பார்த்த துறவி, கைகளை ஊன்றி எழுந்து அமர்ந்தார்." இப்படி அமருங்கள்" என்றார். தயங்கியபடியே வணங்கிய வாதவூரார், அமர்ந்தார்.

அவரை பார்த்த வாதவூராரின் கைகள் தானே உயர்ந்தன; தலை தானே குனிந்தது.... நெகிழ்வுடன் வணங்கி," சுவாமி.. என்னை ஆசீர்வதியுங்கள்! " என்றார் வாதவூரார்.

ஆசி வழங்குவது போல் கைகளை உயர்த்திய துறவி; " திருசிற்றம்பலம்" என்றார். அப்படியே வாதவூராரின் பின்னால் பணிவுடன் ஒதுங்கி நின்ற வீரர்கள் வணங்குவதை கண்டு, அவர்களுக்கும் ஆசிகளை வழங்கினார்.

"அமைச்சரே! இவர்கள் எல்லாம் தங்களின் பணியாளர்களா?! ".... துறவி சிரித்தபடியே கேட்டார்!

"பணியாளர்கள் என்று சொல்வதைவிட உதவியாளர்கள் என்பதே சாலப் பொருந்தும் சுவாமி! " பணிவுடன் சொன்னார்.

"நல்ல பதில்! ஆனால், இவர்கள் தங்களிடம் மெத்தப் பணிவுடன் நடந்து கொள்கிறார்களே! ".... - துறவி!

"அது எனது அமைச்சன் என்னும் பொறுப்பிற்கு இவர்கள் செலுத்தும் கவுரவம்! "- வாதவூரார்

"இந்தப் பதவி இல்லை என்றால்....? "- துறவி

"இதை எல்லாம் நான் எதிர்பார்க்க மாட்டேன்! காரணம், நானே ஒரு பணியாள் தான்! "- வாதவூரார்!

"என்ன..... தாங்கள் பணியாளரா? ".... - துறவி!

"ஆம் சுவாமி! நான் அமைச்சரோ அன்றி அற்பனோ.... இப்போது மட்டுமல்ல; எப்போதும் நான் அந்த சிவனின் பணியாள் தான்! சிவத்தொண்டன்! சிவனடியார்க்கு தொண்டன்! " பணிவுடன் சொன்னார் வாதவூரார்.

"ஈசன் மீது அத்துணை பற்றா?.. "- துறவி!

"பற்றற்றவன் பாதம் பற்றுவதொன்றே என் பற்று! " - வாதவூரார்.

"இப்போது தாங்கள் செல்வது? "....

"அரச கட்டளையை ஏற்று! "....

"கட்டளை என்னவோ? "

"படை பலத்தை பெருக்கும் பொருட்டு ஆயிரம் பரிகள் வாங்கி வரவேண்டும். இது அரசனின் ஆணை!

இதைக்கேட்டு, சத்தமாக சிரித்தார் துறவி! அவரது சிரிப்பின் அர்த்தம் புரியாவிட்டாலும் அதிலிருந்த அந்த தெய்வீகத்தன்மை வாதவூராரை அமைதியாகியது.

"பாண்டிய மன்னனின் படை பலத்தை உயர்த்துவது அமைச்சரின் கடமை! பரமனின் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டியது சிவத் தொண்டனின் கடமையல்லவா?.... "

துறவி, ஓரக்கண்ணால் வாதவூராரை பார்த்தார்.

"இறைத் தொண்டில் இன்றுவரை யான் யாதொரு குறையும் வைத்ததில்லை".

"குறை காண்பது மனிதனின் மடமை; குறைகளைக் களைவது இறைவனின் கருணை!.... அமைச்சரே!.... இத்தலத்தின் பெயர், திருப்பெருந்துறை! அப்படி என்றால்..... கரை சேரும் இடம்! பிறவிப் பெருங்கடலை நீந்தி இறைவனடி சேர ஏற்ற இடம்! பிறவி என்னும் பிணி போக்க உகந்த இடம்! உயரிய தலம்!.... இத் திருப்பெருந்துறையில் இறைவன் ஈசனின் இருப்பைக் காட்ட ஒரு ஆலயம் அமைக்க வேண்டும் என்று எனக்கு நீண்ட நாள் விருப்பம்! ஆனால், ஒரு துறவியான எனக்கு இது சாத்தியமில்லையே!"

சற்றே வருத்தம் தொனிக்க பேசினார். வாதவூரார் துறவியைக் கூர்ந்து கவனித்தார். மீண்டும் துறவியே தொடர்ந்தார்.

"ஒன்று மட்டும் உண்மையப்பா!.... பொன்னும் பொருளுமற்ற துறவிக்கு இப்படிப்பட்ட ஆசை வரலாமா? வரக்கூடாது! என்ன செய்வது?.... என்னுள்ளே இருந்து இறைவன் இதனை நடத்த சொல்கிறான்.... இறைவன்.... இருக்கும் இடத்தை விட்டு இல்லாத என்னிடம் இப்படி ஒரு கட்டளையை

இட்டு விட்டான்! பொருள் படைத்தவர்களோ பரிகளை வாங்கி, படை நடத்தி, பலரைக் கொன்று பாவிகளாவதற்கே அந்த பணத்தை செலவிடுகிறார்கள்.

குற்ற உணர்வுடன் துறவியைப் பார்த்த வாதவூரார், திரும்பி பொன், பொருட்கள் அடங்கிய மூட்டைகளை பார்த்தார்.

"உயிர்களை படைத்தவன் இறைவன்; உயிர்களை எடுப்பவன் மன்னனா?.. பகைவரை படையில் வெல்வதை காட்டிலும் பாசத்தால்..... பக்தியால் வெல்லலாம், அந்தப் பரமனின் அருள் இருந்தால்!.... அமைச்சர் பெரும!..... நீர் கொண்டு வந்த பெரும்பொருள் உயிர்களை அழிக்க உதவப் போகிறதா? அல்லது உயிர்களை உய்விக்க போகிறதா? உமது புகழ், பாவச்செயலால் பரவ வேண்டுமா? பரம பக்தியால் உயர வேண்டுமா?.. " வாதவூராரை உற்றுப் பார்த்தார், துறவி!

வாதவூராரின் உள்ளத்தில் குழப்பங்கள் தீர்ந்து, ஈசன் ஆலயமும் அவன் அருளைப் பெறும் பக்தர்களின் காட்சி மட்டுமே நிழலாடியது!

பிறகென்ன?..... வாதவூரார் ஆலயத் திருப்பணி செய்ய எண்ணம் கொண்டார். கொண்டு வந்த பொருட்களனைத்தும் கோவில் கட்டும் திருப்பணிக்கு பயன்படுத்தப்பட்டன.

இதனிடையே, வாதவூராருக்கு துறவியே குருவாக இருந்து ஐந்தெழுத்து மந்திரத்தை உபதேசித்தார்!

அன்று முதல் அமைச்சர் என்ற தோற்றம் மாறி, தானும் ஒரு துறவி போலவே காட்சியளித்தார்!

மன்னனை மறந்தார்; பொன், பொருள் அத்தனையும் மறந்தார்; குதிரைகளை மறந்தார்! அவருடைய நினைவெல்லாம் அடி அடியாய் உயிர்த்தெழும் ஆண்டவனின் ஆலயத்தைப் பற்றியே இருந்தது!

உடன் வந்த காவலர்கள் செய்வதறியாது தவித்தனர். தலைநகரை விட்டு வந்து பல காலம் ஆகிவிட்டது! இங்கு நிலைமை தலைகீழாக மாறிவிட்டது... மன்னருக்கு இதை தெரியப்படுத்தாமல் விட்டுவிட்டால் அரச நிந்தனைக்கு நாமுமல்லவா சேர்ந்து ஆளாக நேரிடும்?! என்ற அச்சம் மேலிடவே, வந்த வீரர்களில் சிலர் நடக்கின்ற சம்பவங்களை மன்னனிடம் தெரிவித்துவிட வேண்டும் என்ற நோக்கில் நாடு திரும்பினர்.

வீரர்களில் சிலர் காணாதது பற்றி வாதவூரார் விசாரிக்க.... மற்றவர்கள் நடந்ததைக் கூற, அப்போதுதான் " குதிரைகள் வாங்க வேண்டுமே" என்ற நினைப்பே அவருக்கு வந்தது! பெருங்குழப்பம் மனதை சூழ்ந்தது!

"இறைவா!".... என குரலெடுத்துக் கலங்கியவர், செய்வதறியாது திகைத்தார். அரசையே காக்க வேண்டிய அமைச்சர் பொறுப்பிற்கே அவமானம் இழைத்தேனே!....

மன்னரின் முகத்தில் எப்படி விழிப்பேன்..... இறைவா! உன் நினைப்பில் கடமையை மறந்தேனே!... அரச நிந்தனையிலிருந்து நான் தப்புவது எப்படி? மகேசா..... திருப்பெருந்துறை திருவே!... மன்னனின் சினம் தணிக்க மார்க்கம் காட்டு", என வாதவூரார் கண்ணீர் ததும்ப கதறினார்.

ஆலயம் அமைய, அருஞ்செயல் புரிந்த அவரை சோதிப்பானா இறைவன்?.... அப்போது.... அங்கே... ஒரு அசரீரி கேட்டது!

"வாதவூரனே! கவலை வேண்டாம்! உடனே போ! ஆவணி, மூலம் தினத்தன்று பரிகள் வந்துவிடும் என்று அரசனிடம் கூறு!.... பரிகள் வந்து சேரும்; பரிதவிக்காதே! எல்லாம் நல்லபடி நடக்கும்! "....

இந்த அசரீரியை கேட்டு, மனம் மகிழ்ந்தார், வாதவூரர்! எல்லோரும் வணங்கினர்!

அரிமர்த்தன பாண்டியன் அரண்மனை!

"இதுதான் அமைச்சருக்கழகா?".... - மன்னன்!

தவிப்போடு தலைகுனிந்து நின்ற வாதவூரார், சற்றே சுயநினைவு பெற்று, " அரசே! குதிரைகள் வாங்கப் போன வழியில், வானுயர கோவில் திருப்பணிக்கு ஏற்பாடு செய்தது உண்மைதான்! ஆனால்.... குதிரைகள் வாங்கவும் ஏற்பாடு செய்துவிட்டேன்! "

"அப்படியானால், குதிரைகள் எங்கே?".... மன்னரின் குரலில் கோபம் தொனித்தது!

"ஆவணி மாதம், மூல நட்சத்திரம் வரும் நாளில் அத்தனை குதிரைகளும் வந்து விடும் மன்னா! இது... இறைவன் மீது ஆணை!...."

இன்னொரு அமைச்சர் எழுந்தார்! "ஏற்கனவே குதிரை வாங்கி வர கொடுத்த காலக்கெடு கடந்து பல காலம் ஆகிவிட்டது! இப்போது..... ஆண்டவன் மீது ஆணையிடுகிறார். இதனை எப்படி நம்புவது?". என சந்தேகத்தை எழுப்பினார்.




"நியாயந்தான்! .... அமைச்சரே!.. சொன்ன சொல் தவறிவிட்டீர்! உங்கள் பேச்சை எப்படி நம்புவது?! வேண்டுமானால்..... ஆவணி மூல நாளில் குதிரைகள் வந்து சேரும்வரை..... தங்களை சிறையிட உத்தரவிடுகிறேன். நீர் சொன்னபடி குதிரைகள் வந்து சேர்ந்ததும் உமக்கு விடுதலை! இல்லையென்றால்..... அரச கட்டளையை நிறைவேற்றாதவர்களுக்கு உமது கதியே உதாரணமாகிவிடும்". என அரசன் சொன்னதும் வாதவூராரை சிறைக்கு அழைத்துச் சென்றனர் காவலர்கள்! அப்போதும் "இறைவா! என அந்த நமச்சிவாயத்தையே நம்பி சென்றார்.

ஆவணி மூல நாள்! பகல்பொழுது பாகாய் கரைந்து மாலை மயங்கும் நேரம்! பரிகள் வரவில்லை! சிறை கூடத்துக்கு வந்த மன்னன், "அஸ்தமனத்திற்குள் குதிரைகள் வராவிட்டால்.... கடுமையான தண்டனை காத்திருக்கிறது! ஆயினும் மதி நுட்பம் நிறைந்த அமைச்சராய் பலகாலம் செவ்வனே பணியாற்றினீர்; எனவே மரணம் தவிர்த்து அதற்கு இணையான தண்டனை நிச்சயம் உண்டு!" என்ன சொல்கிறீர்?" என்று கேட்டார்!

"இறைப்பணிக்கு இதுதான் பரிசு என்றால் அதையும் இன்முகத்தோடு ஏற்பேன் மன்னா!.." என்றார் வாதவூரார்!

அப்போது ஒரே ஆரவாரம்! காவலன் ஒருவன் வந்தான்.

"அரசே! வானமே தெரியவில்லை; அத்தனை புழுதி! ஆயிரத்திற்கும் மேற்பட்ட குதிரைகள் அணிவகுத்து நிற்கின்றன. நகர மக்கள் வேடிக்கை பார்க்க குழுமி விட்டார்கள்," என்றான்.

அரசனுக்கு ஆச்சரியம்! வாதவூரார்

"திருசிற்றம்பலம்" என்றவாறு இறைவனை வணங்கினார்." அரசே! இறைவன் என்னை கைவிடவில்லை! சொன்னவாறு பரிகள் வந்துவிட்டனவே!"

"சொல்லைக் காப்பாற்றி விட்டீர்.... அமைச்சரை விடுதலை செய்யுங்கள்," என்றான் மன்னன்!

இறைவன் அருளால் வாதவூரர் விடுதலை பெற்றதும் வந்த பரிகள் அனைத்தும் அன்றிரவே நரியாக மாறி காட்டை நோக்கி ஓடியதும் குதிரைகளைக் கொண்டுவந்த தலைவன் இறைவனே என மன்னன் அறிந்து வாதவூரரை வணங்கியதும் தேவாரத்தையும் எட்டாவது திருமுறைகளான பாக்களை மணியான வாசகங்களால் பாடிய வாதவூரார் மாணிக்க வாசகர் என்னும் மணிவாசகராய்- சமயக்குரவர்கள் நால்வரில் ஒருவராய் நனி சிறந்து விளங்குவதும் ஈசன் திருவருளே!



# மணம் வீசும் மனங்கள்! கருணை மனம்!



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

"ஸ்ரீ தட்சிணாமூர்த்தியாக இறைவன் ஆலமரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருப்பவர் தான்! அசைவதே கிடையாது; கண் பார்க்கிறதில்லை; வாய் பேசுவதில்லை என்று இருப்பவர்தான். ஆனாலும் அப்படிப்பட்டவருக்கு இப்பொழுது கருணையில் மனஸ் உருகிக் கொண்டிருந்தது!

தட்சிணாமூர்த்தி ஸ்வரூபம் மனஸூம் இல்லாமல் இருப்பவர் தான் மனஸ் என்பது போய், ஆத்மா மட்டும் ஆக இருப்பதுதான் அத்வைதம்.

தட்சிணாமூர்த்தி என்றால் "அத்வைத ஸ்வரூபம் என்று அர்த்தம்" ஆனாலும் கருணா நிமித்தமாகவே, மனஸை போட்டுக்கொண்டு "ஐயோ" குழந்தைகள் இப்படி கெட்டுப் போகிறார்களே" என்று உருகிக் கொண்டு இருந்தார் அத்வைததிற்கு தட்சிணாமூர்த்தி என்று ரூபம் மட்டும் எப்படி வரலாம்? அதுவும் நம்மிடமுள்ள கருணையினால் தானே? அப்போ மனஸூம் வரட்டுமே"!

என்று காஞ்சி மகா பெரியவாள் குரு தட்சிணாமூர்த்தியின்" கருணை உள்ளம் பற்றி தெய்வத்தின் குரலில் அருளியுள்ளார்.

தெய்வத்தை கருணை காட்டும் தாயாகவே பாவித்து தனது பராபரக்கண்ணி முப்பத்தி நான்காம் பாட்டிலே ஸ்ரீ தாயுமான சுவாமிகள் இப்படி போற்றி ஆனந்திக்கிறார்."கன்றினுக்குச் சேதா கனிந்து இரங்கல் போல் எனக்கு இரங்குவாய் பராபரமே" என.

அந்த மகானே, தான் படைத்தருளியுள்ள வேறொரு பாடலில், கருணை மனதின் தன்மையை அழகாக விவரிப்பார்."காகம் ஆனது கோடி கூடி நின்றாலும் ஒரு கல்லின் முன் எதிர்நிற்குமோ? கர்மம் ஆனது கோடி முன்னே செய்தாலும் நின் கருணை பிரவாக அருளை தாகமாய் நாடினாரை பாதிக்க வல்லதோ"? என்பதாக!

பகவான் இராமகிருஷ்ணரின் கண்ணோட்டத்தில் கருணை உள்ளம் பயணிப்பது வேறு முறையில்! ஆண்டவனுடைய கருணை நமக்கு கிடைக்கப் பெற்றால், பல்லாண்டுகளாக இருட்டாய் கிடந்த ஒரு வீட்டின் அறையில், அந்த கடவுள் ஒரு துளி கருணை காட்டினால் போதும், அது அனேக ஜென்மங்களில் செய்த பாவங்களை அறவே அழித்து விடும்" என்பதை பகவான் தன்னை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு அடிக்கடி எடுத்துக் கூறுவார்.

அந்த மகான் கொண்ட கருணை அறிவுரை எதற்கு தெரியுமா? அந்தப் பக்தர்களை நெறிப்படுத்த வேண்டும் என்றனர் நற்சிந்தனையால்!

பாற்கடல் கொண்ட பரந்தாமனுக்கோ கடலளவு கருணை மனது! இதனை உலகறியும்!

வைணவ சமயத்தில் இறை மீது இயற்றி பாடப்படும் பாடல்களை "பாசுரம்" என்று கூறுவார்கள்.

பாசுரம் இதன் விளக்கம்- தாய்ப் பசுவின் அடர்த்திய காம்புகளில் இருந்து இயல்பாகவே எவ்வித தூண்டுதலும் இன்றி பால் சுரப்பதே அது!

ஒரு மேய்ச்சல் தரை பக்கம் உணவு தேட சென்ற பசு ஒன்றுதான் வழக்கமாக கட்டப்படும் கொட்டிலில் இருக்கும் தனது குட்டிகளை நினைவு வந்து விட்டால் போதும் "ஐயோ என் குட்டிக்கு இப்போ பசிக்கும் வேளையாச்சே" என்று பாச உணர்வுடன் நினைக்கும் அடுத்த கணமே, யாரும் அதன் மடியை தொடாத அவ்வேளையில், காம்புகளில் இருந்து பால் சுரந்து கொண்டே இருக்க, அது பூமியில் விழுந்து அதனை ஈரமாக்கி விடுமாம்!

இப்பாசுரங்களைக் கேட்கும் பகவானுக்கோ உடனே ஆனந்த உணர்வு ஏற்பட்டு, அதனை இசைக்கும் அடியவர்கள் மீது கருணையை மழையாகப் பொழிந்து விடுவாராம்!



இத்தகைய இறைவனின் கருணையை துரிதமாக என்னும் வேறொரு வழியும் முன்னோர்களால் பசுமாடு வைத்தே கூறப்பட்டுள்ளது.

பால் சுரக்கும் மாடு நம்முடையது தான்! ஆனால் அதன் கன்றினை வைத்து பால் சுரக்க வைக்க ஒரு சுலப முறை என்னவென்றால், பசுவின் கன்றை மெல்ல தடவிக் கொடுத்து அதன் தாய் பசுவிடம் கொண்டு சென்றாலே போதும், அது தன் குட்டியை நக்கிக் கொண்டே இருக்கையில், பால் சுரப்பவர் அதன் காம்பிலிருந்து விரைவாக பாலை சுரக்கச் செய்து பயன்படுத்தும் பாத்திரம் முழுமைக்கும் பாலால் நிரப்பி விடலாம்!

எனவே இறைவனின் அடியார்களுடைய துணைக்கொண்டு, அவரை அணுகி விடுவோர், தெய்வத்தின் கருணையை சிரமமின்றி பெற்றுவிட முடியும். இம்முறை குறித்தும் அடியார் ஒருவரின் பாசுரத்தில் அருளப்பட்டுள்ளது.

காய் கனியும் வரை நாம் ஏன் காத்திருக்க போகிறோம், இப்படி " கனி" பெற சுலப வழி இருக்க!

வள்ளல் ராமலிங்க அடிகளாரின் பக்தி உணர்வும், கருணை கொண்ட இதயமும் எவரும் அறிந்த ஒன்றாகும்.

வள்ளலார் இயற்றியருளியுள்ள பாடல் ஒன்றிது-

"உரத்த தொருவருக் கொருவர் பேசிய பொழுது உள்ளகம் நடுங்கினேன், பலகால் கரத்தினால் உரத்துக் கதவு தட்டியபோது ஐயவோ கலங்கினேன், கருத்தில் புரத்தில் அம்மா! அப்பனே! ஐயோ! எனப் பிறர் புகன்ற சொல் புழுந்தே தரத்தில் என் உள்ளத்தை கலக்கிய கலக்கம் தந்தை நீ அறிந்தது தானே!" என்று.

சாதனைகளில் ஈடுபட்டு, இறைவனை அடையத் துடிக்கும் மகான்களுடைய உள்ளம், நாளுக்கு நாள் அதிக மென்மையாகவும், நுண்ணுணர்வுடனும் கூடிய கருணை பஞ்சாக ஆகிவிடும். தவிர அதன் காரணமாக, எந்த அளவிற்கு அது இன்னும் மென்மையை பெற்று விடும் என்றால், அவர்களால், சிறிய சப்தம் போன்றவற்றை கூட தாங்க முடியாது. அவர்கள் மனம் அந்த நிலையில் எப்படி பாடுபடும், எப்படி தவிக்கும் என்பது அவர்களுக்கே புரியாத நிலையில் இருப்பார்கள்.

இத்தகையவர்களுக்கு யாராவது குரல் உரத்துப் பேசினால், வாயிற் கதவை

ஓங்கிச்சாத்தினால், இருவர் சண்டை, சச்சரவு இட்டுக்கொண்டால், யாராவது அழுதால் இவற்றையெல்லாம் அவர்களால் தாங்கிக் கொள்ளவே இயலாது!

இப்படி இறைவனிடம், அவரை தந்தையாக பாவித்து முறையிடும் வடலூராரின் கருணைச்சிந்தையை என்னவென்று போற்றுவது!



வள்ளலாரின் இந்த சிறப்பு குணத்தை பக்தர்களுக்கு ஒரு சொற்பொழிவில் எடுத்துக்கூறிய கருணை மனம் கொண்டவராக சிறப்பது மஹாரண்யம் குருஜி ஸ்ரீ முரளிதர சுவாமிகள் அவர்கள்.

உலகை சிருஷ்டி செய்தவர், மக்களின் பிறப்பு முதலியவற்றுக்கு காரணமானவர், நீதியுடன் நடப்பவர், மிகவும் நேசங்கொண்டவர், சூரிய உறவினர், சிறந்த பராக்கிரமங்களை அளிப்பவர் என்றெல்லாம் வேத வியாச முனிவரால் அவர் இயற்றியருளிய

ஸ்ரீ சிவஸஹஸ்ர நாம ஸ்தோத்திர நூலில் இடம் பெற்ற ஒரு பாடலில் ஸ்ரீ பரமேசுவரரை துதித்து மகிழ்வார்.

அந்த சர்வேஸ்வரனுடைய அம்சமாகத் திகழ்பவர் தான் " ஆதிகுரு தட்சிணாமூர்த்தி"!

ஆனால் நவக்கிரகங்களில் ஒருவராக இடம் பெற்றுள்ள பிரகஸ்பதி எனும் வியாழ பகவான் தேவ குருவாக போற்றப்படுபவர். எனவே அவர் வேறு, இவர் வேறு!

ஆதி குருவை வணங்கி பூஜித்தால், அவரிடமிருந்து பெருகிவரும் கருணை கசிந்து, தன்னை துதிப்போர்க்கு பரஞானம் அளித்து பேரானந்தம் அடையச் செய்வார்.

தேவகுரு எத்தகையவர்? அவர் கருணை ஒரு ஜாதகரின் மீது பாய்ந்து விட்டால் போதும், அந்த பாக்கியவான் இக பர போகத்தை பெற்று உலக சுகங்கள் அத்தனையையும் அனுபவிக்க முடியும்!

இந்த பிரகஸ்பதியை பற்றிய உலக வழக்குச் சொல்-" குருவின் பார்வை கோடி நன்மை" தருமென. இவருடைய கருணையைப் பெற்றவர்கள் கல்வியறிவு, நாவன்மை, செல்வம், பதவி, மதிப்பு, நன்மக்கட்பேறு, நல்ல ஆரோக்கியம் போன்ற இவ்வுலக சவுபாக்கிய சுகங்கள் அனைத்தையும் சுலபமாகப் பெற முடியும் என உரைக்கின்றன ஜோதிட சாஸ்திர நூல்கள்.

எனவே, ஆதி குருவின் கருணை, ஞானத்தையும், தேவ குருவின் கருணை உலகப் பொருட்களை அளிக்கும் என்பதை தெளிவாக புரிந்து கொள்ளலாம்.

பூலோக மனிதர்களைவிட பலவகையிலும் மேம்பட்டவர்களாக வானுலக தேவர்கள் இருந்தாலும், ஒரு காலத்தில் அவர்களுக்கும் மானிடர்களை போன்றே நரை, திரை, மூப்பு, மரணம் போன்ற இடர்கள் உண்டு.

எனவே இவைகளிலிருந்து விடுதலை பெறும் நோக்கமுடன் தேவர்கள் இறைவன் இட்ட கட்டளையை ஏற்று மந்திரகிரி என்ற மலையை மத்தாகவும், வாசுகிப் பாம்பை கயிறாகவும் பயன்படுத்தி, அசுரர்களையும் தங்களுடன் சேர்த்துக் கொண்டு பாற்கடலை கடைய தொடங்கினர்.

கடினமான இம்முயற்சியின் மூலம் பல தெய்வீக அம்சங்களும், பொருட்கள் போன்றவைகளும் கிடைத்தது, தேவர்களையும், அசுரர்களையும் இன்பத்தில் அழ்த்திவிட்டன. ஆனால் திடீரென யாரும் எதிர்பாராத விதமாக கொடிய ஆலகால விஷமும், அப்பொழுது

வெளிப்பட்டு விட்டது!

அனைவருமே அதனால் அரண்டு போய் விட்டனர். இதனையறிந்த சிவபெருமான் அவர்கள்பால் கருணைகொண்டு, ஏகாதசி திதி கூடிய அந்த மாலை வேளையில், கடகடவென அத்தனை ஆலகால விஷத்தையும் ஒரே மூச்சில் குடித்து முடித்து "நீலகண்டன்" ஆகிவிட்டார். அக்கருணை தேவாசுரர்கள் பெரிய பிரச்சனையை ஓரங்கட்ட வைத்துவிட்டது!

தன் கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பவன், இருக்க வேண்டியவன் பிறருக்கு கருணை காட்டுவதிலும் கவனமாகவும் இருக்க வேண்டும். தனக்கு மிஞ்சித் தான் தான தர்மம் என்பது ஒரு வழக்குச் சொல்லாயிற்றே!

அக்காலத்தில் கடற்கரையோரம் அமைக்கப்படும் கலங்கரை விளக்கங்கள் கடலில் ஒளி தர எண்ணெய் விட்ட பெரும் விளக்கை ஏற்றுவார்கள். அதன் பெரும் ஒளி கடல் எங்கும் பரவி, ஒரு குறிப்பிடும் தூரம் வரை பயணிக்கும் கப்பல்களுக்கு வழிகாட்டி, கடலின் கரையை, அவ்வூரை அடையாளம் காட்ட உதவிடும்.

அப்படி கலங்கரை விளக்கம் அமைந்த ஒரு கடற்கரை பட்டினத்திற்கு விளக்கேற்றும் பணிக்காக, இதற்கு முன்பு இவ்வேலையை செய்தவன் இறந்து போனதால் அனுபவமற்ற ஒரு இளைஞனை நியமித்தனர் அப்பக்கம் அடிக்கடி கப்பல்களை இயக்கும், நிர்வாகிகள்....

மார்கழி மாதத்தில் அந்த இளைஞன் கலங்கரை விளக்க, பணிக்கு வந்து சுமார் மூன்று தினங்கள் ஆகியிருக்கும். கலங்கரை விளக்கம் இயங்க, கப்பல்கள் நிறுவனம் தேவைக்கு ஏற்ப அவ்வப்பொழுது குறிப்பிட்ட தினங்களில் எண்ணெய் பீப்பாயை அப்பக்கம் கடலில் பயணிக்கும் கப்பல் மூலம் அனுப்பி வைக்கும் பணி முறை, நடைமுறையில் இருந்தது.

கந்தன் என்ற பெயருடைய அந்த இளைஞன் மிக மிக சுறுசுறுப்பானவன். திறமைசாலியும் கூட. ஆனால் அவன் கொண்ட பலவீனம் கண்மூடித்தனமான கருணைமனது!

அன்று இரவு, குளிர் தாங்காத நிலையில் கம்பளி ஆடை உடுத்திய கந்தன் தன் விளக்கேற்றும் பணியில் மும்முரமாக இருந்தான். அப்போது அவன் பணி அறையின் கதவை யாரோ தட்டவே, விரைந்து வாசலை திறந்தான்.

அங்கே அவனுக்கு முன்பே அறிமுகமான முதியவர் ஒருவர் குளிரில் நடுங்கியபடியே, "கந்தா! என் வீட்டில் விளக்கேற்ற கூட எண்ணெய் இல்லை; தயவு செய்து கொஞ்சம் எண்ணெய் கடனாய் கொடு! சீக்கிரம் அதனை திருப்பி தரேன்" என கெஞ்சினாள். மனம் இளகி போன அவன் அவர் கொண்டு வந்த டின்னில் எண்ணெய் ஊற்றி அவரை அனுப்பி வைத்தான்.

இதற்கடுத்த நாளே, கந்தன் குடிகொண்ட கலங்கரை விளக்க அலுவலக கதவை யாரோ படபடவென தட்டினார். கதவு திறந்து அவன் கண்ணில் முன் பின் அறிமுகம் இல்லாத ஒருவன் கை விளக்கை ஏந்தியிருந்தது தென்பட்டது. "யார் நீ",

(தொடரும்)



விக்ரம் வைத்தி

# அறிந்த ஆலயமும், அறிய வேண்டிய செய்திகளும்

ஒவ்வொரு புராதன ஆலயம் குறித்து எண்ணற்ற அபூர்வ தகவல்கள் கொட்டிக்கிடக்கின்றன. அத்தகைய ஒரு திருக்கோயில் ஒப்பிலியப்பன் கோயில் என்ற திருத்தலத்தில் திகழ்கிறது.

108 வைணவத் தலங்களில் ஒன்றான ஒப்பிலியப்பன் பெருமாள் ஆலயம் கோயில் நகரான கும்பகோணத்திற்கு தென்திசையில் சுமார் ஏழு கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. இவ்வூர் செல்ல நிறைய பேருந்துகள் கும்பகோணத்தில் இருந்து செல்லும். தவிர வாடகை கார், ஆட்டோ வசதிகளும் உள்ளன.

மார்கண்டேய முனிவர் இங்கு வந்து தவம் இயற்றியதால் இவ்வூருக்கு மார்கண்டேய ஷேத்திரம் என்ற பெயரும் உண்டு.

தவிர திருவிண்ணகர், ஆகாச நகரம், துளசி வனம், வைகுண்ட நகரம் எனப் பல பெயர்களும் உண்டு. மகாவிஷ்ணுவின் வசிப்பிடம் என்பதால் “விண்ணகரம்“ என்ற காரணப் பெயரை இது கொண்டுள்ளது.

இத்தலத்தில் பெருமாளின் தரிசனத்தை நேரில் பெற்ற பாக்கியசாலியாக விளங்குகிறார்கள் கருடன், தர்ம தேவதை மற்றும் மார்க்கண்டேயர் ஆகியோர்.

பைரவர் அடியார்களான நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வார் ஆகியோரால் பாடல் பெற்ற தலம் இது.

தினமும் அதிகாலையில் மகான் ஸ்ரீ ராம தேசிக சுவாமி எழுதிய தனி சுப்ரபாதம், திருப்பள்ளி எழுச்சியாக ஆலயத்தில் ஒலிக்கின்றது.

மார்கண்டேய ரிஷியின் தவப்பயனால் துளசி வனத்தில், அவர் பச்சிளம் குழந்தையாக பூமியில் கிடந்த மகாலட்சுமியை கண்டெடுத்து, பூமாதேவி

என்ற நாம கரணமிட்டு வளர்த்து வந்தார்.

மிக மிக வனப்புடன் பூமாதேவி வளர்ந்து ஐந்தாம் பிராயத்தை அடைந்திருந்தாள், மார்க்கண்டேயரை சோதிக்க சிந்தை கொண்ட திருமால் முதியவர் வேடம் தரித்து, அவரை சந்தித்து "இந்த அழகானவளை எனக்கு திருமணம் செய்து தருகிறாயா? " எனக்கேட்டார்.

வந்தவர் மகாவிஷ்ணு என்பதை அறியாத அந்த ரிஷி "ஐந்தே வயதான இப்பெண் சமையலில் எத்தனை அளவு உப்புப் போடவேண்டும் என்று கூட, அறியாதவள். இவளை மணம் புரிவதால் உமக்கு என்ன கிடைக்கும்?" என்ற கேள்வியை எழுப்பினார்.

அதெல்லாம் முடியாது.

நீர் கட்டாயம் அவளை எனக்கு மணம் முடிக்க வேண்டும் என பிடிவாதம் செய்தார். அட என்ன சோதனை இது! இந்தக் கிழவர் என்னை இப்படி பாடாய் படுத்துகிறாரே என்ற கவலையுடன் திக்பிரமை உற்றார் மார்க்கண்டேயர்.

அப்பொழுது பெருமாள் அவரை மேலும் சோதிக்க விரும்பாமல், தனது சுயரூபம் ஆன சங்கு, சக்கரதாரிராய் "ஸ்ரீமன் நாராயணன் திருக்காட்சி தந்து" இப்பொழுது சம்மதிப்பீரா?" என மலர்ந்த முகத்துடன் கேட்டார்.

கரும்பு தின்ன கசக்குமா என்ன? அந்த வளர்ப்பு தந்தையின் முழு சம்மதத்துடன் பூமாதேவியை பெருமாள் திருக்கல்யாணம் புரிந்தார் என்கிறது தல புராணம்.

அன்று மார்கண்டேயரிடம் திருமால்

"உங்கள் அருமைப் பெண் உப்பில்லாமல் சமைத்தாலும் அந்த உணவை மனமார ஏற்றுக் கொள்வேன்" எனக் கூறி அருளினார்.

அதனால்தான் இவ்வாலயத்தில் பெருமாளுக்கு நைவேத்தியமாகும் புளியோதரை, தயிர் சாதம், பொங்கல் வகையறா, வடை, முறுக்கு இவற்றில் உப்பு சேர்க்கப்படுவதில்லை.

இந்தத் திருக்கோயிலின் உட்பகுதியில் உப்புள்ள பொருட்களை உண்ணும் பக்தர்களை " தோஷம்" பற்றும் என்ற ஒரு ஐதீகம் உள்ளது.

ஒப்பிலியப்பன் ஆலய தீர்த்தம் கொண்ட பெயர் அகோரத்ர புஷ்கரணி என்பது. இதர ஆலயங்களில் ஆலய புண்ணிய தீர்த்தத்தில் இரவில் நீராடக் கூடாது. ஆனால், இதற்கு



விதிவிலக்கு உள்ள கோயிலாக இது உள்ளது.

அகோரத்ர புஷ்கரத்தின் வடகிழக்கு மூலையில் உள்ளது ஒரு வில்வ மரம். இதன் சிறப்பு, கோயிலின் சுற்று மதிலின் உயரத்தை தாண்டி இது வளராதாம்!

அகோரத்ர புண்ணிய தீர்த்தம் தவிர, இவ்வாலயத்தில் மனதாலே நினைத்தாலும் மோட்ச பாக்கியம் கிட்டும்.

சாரங்க தீர்த்தம், இந்திரனுக்கு சாபவிமோசனம் தந்த இந்திர தீர்த்தம், சூரியனின் தோஷம் அகற்றிய சூரிய தீர்த்தம், பிரம்மன் தான் இழந்த பிரம்ம பதவியை மீண்டும் பெற காரணமான பிரம்ம தீர்த்தம் ஆகிய தலதீர்த்தங்களும் அமைந்துள்ளன.

அழகிய சிற்பங்களுடன் கூடிய இக்கோயிலின் ராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன், கிழக்கு திசை நோக்கி, கம்பீர காட்சிதரும்.

ஒப்பிலியப்பன் கோயில் ஊரில் இருந்து சுமார் 2 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. பண்டரீகபுரம் என்ற சிற்றூர். அவ்வூரில் அன்னு ஐயங்கார் என்ற தீவிர பெருமாள் பக்தர் வாழ்ந்து வந்தார்.

ஒருநாள் அவருடைய சொப்பனத்தில் பகவான் காட்சி தந்து "நான் பக்கத்தில் உள்ள கிராம

குளத்தில் இருப்பதாக தெரிவித்து, தனக்கு உரிய திரு அமைத்து ஒப்பிலியப்பன் சந்நிதியில் எழுந்தருளச் செய்" என ஆணையிட்டு மாயமாகிவிட்டார்.

பகவான் குறிப்பிட்ட ஊர் குள பகுதிக்கு தனது புதல்வன் ராகவனுடன் சென்று நீரின் அடி பகுதிக்குச் சென்று தேடினார்.

பெருமாள் கனவில் கூறியவாறு அங்கு ஒரு பெரிய கருங்கல் இருப்பதை கண்டு, மிக பிரயத்தனம் செய்து அதை கரைக்கு கொண்டு வந்தார். ஒரு திறமையான ஸ்தபதியிடம் ஒப்படைக்கப்பட்ட அக்கல், திருமாலின் திரு உருவாக செதுக்கப்பட்டு பார்ப்பவர்களை பிரமிக்க செய்து விட்டது!

கற்சிலையான பெருமாளின் திருவுரு சுமார் 100 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஒரு சிற்றூரில் உருவாக்கமானது.

திருநாகேஸ்வரம் வரை புகைவண்டியில் கொண்டுவரப்படுகையில், அதனுடைய கனம் தாங்காமல், ரயில் பெட்டி உடைந்து விட்டதாம்! அதனால் ரயில்வே நிர்வாகம் அன்னு ஐயங்காரிடம் நஷ்ட ஈடு கேட்கப்போய், அவர் அப்போதைய வெள்ளைக்கார அதிகாரியிடம் வாதாடி ஜெயித்து ரயில்வே நிர்வாகத்தின் செலவிலேயே பெருமாள் திரு உருவை ஒப்பிலியப்பன் கோயில் ஆலயத்திற்கு கொண்டு வரச் செய்த அற்புதம் நிகழ்ந்தேறியது. அந்த பாக்கியவான் அன்னு ஐயங்கார், தனது சொத்தில் சிறுபகுதியை மட்டும் குடும்ப நிர்வாகத்திற்கு வைத்துக்கொண்டு மீதியை ஒப்பிலியப்பன் கோயில் கட்டிட நிர்மாணம் மற்றும் இதர தேவைகளுக்காக, கோயிலுக்கு தானமாக தந்து விட்டார் எனப்படுகிறது.

பூ நாச்சியார், பூமிதேவி, தரணி தேவி, பசுந்தரை என்ற பல திருநாமங்களைக் கொண்ட பூமாதேவி திருமாலை திருமணம் செய்து கொண்டதால் மணப்பெண் இருக்க வேண்டிய வலப்புற இடத்தில் எழுந்தருளியுள்ளாள்.

பெரும்பாலான ஆலயங்களில் பூதேவி குடி கொண்டிருப்பது இடப்புறம் மட்டுமே. தாயாருக்கு தனி சந்நிதி இல்லாத ஒரு சில கோயில்களில் இவ்வாலயமும் இடம்பெற்றுள்ளது.

ஒப்பிலியப்பன் மூலவருக்கு திருமுழுக்கு நிகழ்வும், உற்சவ திரு மூர்த்திக்கு திருமஞ்சன வைபவமும் நடத்தப்படுகிறது.

தென் திருப்பதி என்று கொண்டாடப்படும் உப்பிலியப்பன் ஆலயத்தில், திருப்பதிக்கு நேர்ந்து கொண்ட பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம். இதன் காரணம் உப்பிலியப்பன் திருப்பதி பெருமாளின் அண்ணனாக போற்றப்படுவதால்!

இக்கோயிலில் திருப்பதி போன்றே துலாபாரம் உள்ளதால், உப்பு நீங்கலாக உள்ள அனைத்து பொருளும் காணிக்கைக்கு ஏற்கப்படுகின்றன.

பக்தர்கள் தாங்கள் கொண்ட பிரம்மஹத்தி தோஷ நிவர்த்திக்காக சந்தனம், குங்குமம் இவற்றை இங்கு சமர்ப்பிக்க, இதர பாவங்களில் இருந்தும் விடுபட தீபக் கால், தூபக்கால், திருமஞ்சன பாத்திரம், வெங்கல மணி இவற்றை காணிக்கையாக்க, புத்திர பாக்கியம் பெற எண்ணுபவர்கள் பெருமாள் உற்சவத்தை நடத்தி பயன்பெறுகின்றனர்.

திருப்பதி போன்று இங்கே முடி காணிக்கையும் செலுத்தலாம்.

பிள்ளைப்பேறு அற்றவர்கள் அதனை பெறுவதற்காக இவ்வித பிரார்த்தனை முறை இத்திருக்கோயிலில் நடைமுறையில் உள்ளது.

குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் தினமும் இந்த ஆலயத்தில் சந்தானகிருஷ்ணனை தங்கள் மடியில் வைக்கும் சேவை தினமும் காலை 8:30 மணி வரை நடத்தப்படுகிறது. அத்தகைய பக்தர்கள் இங்குள்ள பகலிராப் பொய்கையில் ஸ்நானம் புரிந்து, நோன்பு ஏற்று, ஆலய அங்கப்பிரதட்சணமும் முடித்து வந்தவுடன், அவர்கள் மடியில் சந்தானகிருஷ்ணன் திரு உருவை எழுந்தருளச் செய்கிறார்கள்.

பக்தர்கள் பிரார்த்தனை மேற்கொண்டிருந்தால் கட்டண சேவையில் தினமும் திருக்கல்யாண உற்சவம், கருட சேவை, ஊஞ்சல் சேவை, பள்ளியறை சேவை, திருமஞ்சன சேவை இவைகளைச் செய்யும் வசதி இங்கு உண்டு.

ஒவ்வொரு மாதமும் இடம்பெறும் திருவோண திருநட்சத்திர நாளன்று, பகல் 11 மணிக்கு நடத்தப்படும் சிரவண தீபம் நிகழ்ச்சி, மிகச் சிறப்பான ஒன்று.

ஒப்பிலியப்பன் ஐப்பசி திங்கள் திருவோண நன்னாளில் பூமிப் பிராட்டியை மணந்துகொண்டார்



என்பதால், அப்புண்ணிய நாளில பெருமாளின் திருக் கல்யாண உற்சவம் ஆரம்பித்து 12 நாட்கள் மிக விமரிசையாக திருவிழா இங்கு நடத்தப்படுகிறது.

ஒவ்வொரு ஆவணி மாதத்திலும் ஒப்பிலியப்பனுக்கு 5 நாட்கள் நடத்தப்படும் உற்சவம் கொண்ட பெயர் "பவித்ரோற்சவம்" ஆகும். ஆவணி கேட்டை நட்சத்திரத்தில் துவங்கும் இவ்விழா ஓணம் பண்டிகை அன்று உதய கருட சேவையுடன் முடிவடையும்.

இவை தவிர வைகாசி மாதம் தொடங்கி பங்குனி வரை நிறைய உற்சவங்களை இந்த ஒப்பிலியப்பன் திருக்கோயிலில் பக்தர்கள் கண்டு மகிழலாம்.

தினமும் காலைப் பொழுதில் விஸ்வரூப சேவை நடக்க, அப்போது சுப்ரபாதம், ப்ரபத்தி மங்களம் ஆகியவை ஆலயத்திற்குள் ஒலிபரப்பாகி, அதிகாலை தரிசனம் பெற அற்புதமாக இருக்கும்!

# புத்திர பாக்கியத்தை தடை தாமதங்கள் இன்றி பெற

# எளிய லால் கிதாப் பரிகாரங்கள்




திரு. செந்தில் நாதன்

ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்




புத்திர பாக்கியம் என்பது நமக்கு இந்த ஜென்மத்தில் கிடைக்கும் அத்தனை ஐஸ்வர்யங்களையும் விட முதன்மையான ஒன்றாக கருதப்படுகிறது. ஒரு குழந்தையின் மழலை பேச்சை கேட்க ஆயிரம் செவியிருந்தாலும் பத்தாது. ஒரு குழந்தை பருவத்திலிருந்து திருமண வயதை அடைவது வரை உள்ள ஒவ்வொரு நிலையையும் பார்த்து பார்த்து ரசிப்பதற்கு இரண்டு கண்கள் பத்தாது. அத்தகைய புத்திர செல்வம் கிடைப்பதற்கும். புத்திர செல்வம் கிடைப்பதில் தடை தாமதங்களை போக்குவதற்கும் எளிய பரிகாரங்கள் லால்கிதாப் என்னும் ஜோதிட புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள பரிகாரங்களை கீழே காணலாம்.

### கருதரிப்பதற்கான லால்கிதாப் பரிகாரங்கள்:

1. தம்பதிகள் விலங்குகளுக்கு உணவு அளிப்பது எளிதில் கருதரிக்க செய்யும். அதிலும் பூனை போன்ற விலங்குகளுக்கு பாலை தானமாக அளிப்பது மிகச்சிறந்த பரிகாரமாகும்.
2. நாய் குட்டியை பராமரித்து வளர்க்க ஆரம்பிக்க எளிதில் கருதரிக்கும்.
3. சந்தான கோபால யந்திரத்தை தினமும் தீப தூப ஆராதனை செய்வதன் மூலம் எளிதில் கருதரிக்கும்.
4. கிருஷ்ணனின் குழந்தை அவதாரத்தை தினமும் வழிப்பாடு செய்ய புத்திர பாக்கியம் உண்டாகும்.
5. வியாழக்கிழமைகளில் வாழை மரத்தை வழிபாடு செய்தபின் மஞ்சள் தூளை கோவிலில் தானமாக கொடுக்க வேண்டும். அன்று வாழை பழத்தை உண்ணாமல் தவிர்க்கவேண்டும்.
6. கருதரிக்க காத்து இருக்கும் பெண் மாங்காய் மரத்தின் வேரை எடுத்து மைய அரைத்து வைத்துக்கொள்ள வேண்டும். பூரம் நட்சத்திரம் வரக்கூடிய நாளில் அரைத்து வைத்த மா வேரை பாலுடன் கலந்து அருந்திவர வேண்டும்.
7. இரண்டு கோதுமை ரொட்டித் துண்டுகளை கொண்டக்கடலை மற்றும் வெல்லத்துடன் சேர்த்து உருட்டி பசு மாட்டிற்கு உணவாக அளித்துவர எளிதில் கருதரிக்கும்.
8. தடை தாமதமின்றி கருதரிக்க விநாயகருக்கு மோதகத்தை நைவேத்யமாக படைத்து வழிபட்டு வர கருத்தரிக்கும்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள எளிய பரிகாரங்களை பக்தியுடன் செய்து நீண்ட நாட்களாக புத்திர பாக்கியம் தடை தாமதம் அடைந்து வந்தவர்கள் புத்திர பாக்கியம் கிடைக்கப் பெற்று சந்தோஷமான வாழ்க்கை வாழ்வார்களாக.

## அற்புத மகான்

# ஷீரடி சாய்பாபா

### அத்தியாயம்- நானே வருவேன்

“நீ என்னுடையவன்; எனக்கு மிக நெருக்கமானவனும் கூட! நான் உன்னை விட்டு என்றும் விலக மாட்டேன்- நீயும் விலக இயலாது! கண் விழிகளை இமைகள் காப்பது போன்று உன்னை நான் காப்பேன் நம்பு என்னை!

-மகான் ஷிர்டி பாபா



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்



தன் வீட்டுக் கூடத்தில் உள்ள தூண் ஒன்றில் சாய்ந்தவாறு அந்த வயதான பெண்மணி தன் மனதிற்குள் இவ்வாறு பேசிக் கொண்டிருந்தாள்.

"டெல்லிக்கு ராஜாவானாலும், தல்லிக்கு பிள்ளைங்கற மாதிரி தான் என் ராசா பாலா சாஹிப் தேவ். இந்த ஊருக்குத்தான் அவன் தாசில்தார் (மாமலத்தார்) எனக்கு எப்போதுமே பாசக்கார பிள்ளை தான்.

என் உடல் ஆரோக்கியத்துக்காக இதுவரை எத்தனை விரதமிருந்து இருக்கிறான் அவன்! எல்லாத்துக்கும் காரணம் அந்த சீரடி பாபா தான்! அவருகிட்ட இந்தப் பிள்ளைக்கு எத்தனை பக்தி! இப்ப நான் செய்ய வேண்டிய "உத்தியாபன விரத விருந்தையும் பாலா செஞ்சுட்டா போதும். பரம திருப்தியாய் இருக்கும் எனக்கு" என்று அந்த சமயம் பாலாசாகேப் அன்றைய அரசு குட்டியை முடித்துவிட்டு, வீட்டிற்குள் நுழைந்தார்.

ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருப்பதாக காணப்பட்ட தன் அம்மாவை பார்த்து விட்ட பாலா சாகேப் "என்னம்மா! நான் வந்தது கூட தெரியாம இருக்க. உடம்பு ஏதும் சரியில்லையா?" என வாஞ்சையுடன் கேட்டார்.

மகனின் குரலைக் கேட்டவுடன் சிந்தனைகள் கலைந்த அந்த பெண்மணி "அட! நீ எப்போ வந்தே பாலா! இன்னிக்கும் பலமான அலைச்சலா? "என பரிவுடன் கேட்ட அன்னையை மென் நகையுடன் பார்த்த அவர்," ஏன்மா! இப்ப என்ன கவலை உனக்கு. உடனே சொல்லு" என வினவினார்.

"ஏண்டா! நீ இருக்கிறப்போ நான் ஏன் கவலைப்பட போறேன்? ஒன்னும் இல்ல... இதுவரை நம்ம குடும்ப நலனுக்காக சில விரதங்களை முடிச்சிட்டோம். இன்னும் அந்த உத்தியாபனம் விரத விருந்து ஒன்னு தான் இருக்கு. அதையும் முடிச்சுட்டா தேவலை. அத பத்தி தான் இப்ப நெனச்சுக்கிட்டு இருந்தேன்". என்று பதில் சொல்லவே, உடனே பாலாசாஹேப், காலண்டரை புரட்டி விட்டு ஒரு தேதியை தாயாரிடம் சொல்லவே, அந்தப் புண்ணிய நாளில் அந்த விரதம் நடத்த முடிவானது.

பிறகு கைகால்களை சுத்தப்படுத்திக் கொண்டு தன் வீட்டு பூஜை அறைக்கு சென்று அங்கு உள்ள தனது இஷ்ட தெய்வமான மகான் ஷீர்டி பாபாவின் படத்திற்கு முன்னால் பாலா சார் நின்று "ஐயனே! இதுவரை என் குடும்பத்தில் நடந்த அனைத்து புண்ணிய நிகழ்ச்சிகளும், தங்கள் அருளால் சிறப்பாக நடந்துள்ளது. இந்த உத்தியாபனம் விரத விருந்து பற்றி சிந்திக்க நேரில் வந்து தங்களை தரிசித்து தங்களையும் அழைக்கலாமென ஆசைப்படுகின்றேன். ஆனால் அரசாங்கப் பணி சுமையினால் ஷிர்டிக்கு என்னால் தற்போது வர இயலவில்லை. அதற்காக மன்னித்து விடுங்கள்! என் தவறை பொருட்படுத்தாமல் தாங்கள் கட்டாயம் இந்த புனித விரத நிகழ்ச்சிக்கு வருவீர்கள் என்ற திடமான நம்பிக்கை எனக்கு இருக்கு" என்று உளமார பிரார்த்தனை புரிந்தார்.

அத்துடன் நின்று விடாமல் பாலா சாகேப் மறுநாளே மேற்கண்ட பிரார்த்தனையை ஒரு கடிதத்தில் எழுதி, ஒரு ஆள் மூலம் மஹான் பாபாவுக்கே, ஷிரடிக்கு அனுப்பியும் விட்டார்.

இந்த அழைப்பு கடிதம் மகானை அடைந்துவிட்டது. பாபா கடிதத்தை படித்து முடித்து தன் அருகில் இருந்த தனது வேறொரு அத்தியந்த பக்தரான ஜோக் என்பவரிடம்" ஜோக்! உமக்கும் தெரியும், யார் என்னை எண்ணுகிறார்களோ, அவர்களை நான் மறப்பதில்லை என்பதை! பாலா சாகேப் குறித்துள்ள விருந்து தேதியில் நான் மட்டுமல்ல, நீரும், வேறு ஒரு நபரும் அவர் இல்லத்துக்கு சென்று, அவருடைய கோரிக்கையை நிறைவேற்றுவோம். இச்செய்தியை ஒரு லெட்டர் மூலம் பாலாசாகிபுக்கு உடனே தெரிவியுங்கள். அவர் ஆனந்தப் படுவார்" ஆக்ஞையிட்டார். அதன்படி ஜோக் செயல்பட, அக்கடிதம் அன்றே அனுப்பப்பட்டுவிட்டது.

சீரடி மகானிடமிருந்து வந்த கடித செய்தியை பலமுறை படித்து மகிழ்ந்த பாலா சாகேப், தன் அம்மா உள்ளிட்ட அனைத்து குடும்ப உறுப்பினர்களுக்கும் அதைப் படித்துக் காண்பித்தார். அவர்களையும் சந்தோஷம் தொற்றிக்கொண்டது.

"அம்மா! சீரடி எங்கோ தூரத்தில் இருக்க இந்த நம்ம டஹானா ஊருக்கு நெடு நேரம் பயணித்து பாபா வர வேண்டி இருக்கு. நடத்த உள்ள உத்தியாபனம் விரத விருந்துக்கு மஹான் இன்னும் இரண்டு பேர்களோட வர்ரது நம்ம சந்தோஷத்தை இரட்டிப்பாக்குதலே!" இப்படி தன் மகன் குதூகலப்படுவதைக்கண்ட தாயார் கண்ணிலிருந்து ஆனந்த கண்ணீர் பெருகியது.



மகானின் வருகை பற்றி உள்ள உற்சாகத்தில், பாலாசாகேப் உத்தியாபன விரத விருந்துக்கான பணிகளில் மும்மரம் ஆனார், இன்னும் சில நாட்களில் அது நன்கு நடக்க.

இரண்டு தினங்கள் கடந்தன. அன்று டாஹானா புகைவண்டி நிலையத்தில் தனது அறையில் வேலை பார்த்துக் கொண்டிருந்த ஸ்டேஷன் மாஸ்டர் அறையில் ஒருவர் நுழைந்து "நமஸ்தே சார்!" நான் உள்ளே வரலாமா?" எனக்கேட்டார். தன் தலையை அசைத்து இசைவு தந்த அந்த அதிகாரி, வந்தவரை உட்காரச் சொன்னார். பிறகு "என்ன விஷயமா பார்க்க வந்தீங்க?" எனக் கேட்டதும் அவர் தன்னை இப்படி அறிமுகம் செய்துகொண்டார்.

"சார்! நான் ஒரு கோசாலை பிரசாகன்; தவிர பசுக்களை போஷிப்பவனும் கூட எங்கள் கோசாலை சங்கத்திற்கு நிதி திரட்டறேன். அதுக்காக ஊர் ஊராய் சுற்றி, இன்னிக்கு இந்த ஊருக்கு வந்திருக்கேன். இங்கே அதுக்காக பார்க்க வேண்டிய சரியான பிரமுகரை பத்தி சொன்னா, எனக்கு ரொம்ப உதவியா இருக்கும்" என பணிவுடன் கேட்டுக் கொண்டார்.

"ஐயா! நீங்க இது விஷயமாக பார்க்கவேண்டிய ஜென்டில்மேன் இந்த ஊரு தாசில்தாரை தான். மாமலத்தாரிலேயே நேர்மையும், தாராள மனமும் கொண்டவர் அவர்". எனச் சொல்லிக்கொண்டு இருக்கையிலேயே "குட் மார்னிங்!" என சொல்லிக்கொண்டே ஒருவர் உள்ளே பிரவேசித்தார்.

"அடடா! மாமலத்தாரா! உங்களுக்கு நூறு ஆயுசு! இப்பத்தான் இவரு கிட்ட உங்களை பத்தி சொல்லிக் கொண்டிருந்தேன்" எனக் கூறி எழுந்து அங்குவந்த மாமலத்தாரான பாலா சாகிப்பை உற்சாகமுடன் வரவேற்று, ஒரு சேரில் அவரை அமரவும் வைத்தார் நிலைய அதிகாரி.

"அப்படியா!" என்ற பாலா சாஹேப், சன்னியாச உடையில் காணப்பட்ட கோசாலை பிரசாரகருக்கு வணக்கம் கூறிவிட்டு" எதுக்காக என்னை பார்க்க வந்தீங்க? " என அன்புடன் வினவினார்.

அந்த சன்னியாசி மாமலத்தாருக்கு பதில் வணக்கம் தெரிவித்துவிட்டு தான் டஹானாவுக்கு வந்த நோக்கத்தை எடுத்துச் சொன்னார். அதைக்கேட்ட பாலா சாகேப் " ஐயோ, உங்க நோக்கம் நல்லது தான். இந்த ஊரிலே கோசாலை வசூல் விஷயத்துக்கு நீங்க பார்க்க வேண்டிய பெரிய மனிதர் ராவ் சாஹிப் நரோத்தம் என்பவர். ஒரு கமிட்டி அமைத்து, வேறொரு தர்ம காரியத்திற்கு நிதி திரட்டிகிட்டு இருக்காரு. அந்த வேலை இரண்டு மாசத்திலே முடிஞ்சிடும்.

அப்போ வாங்க... நானும் அதுக்கு நிதி கொடுத்து உதவுகிறேன் கணிசமா" என தீர்மானமாகச் சொன்னார்.

இந்த பதிலால் சற்று ஏமாற்ற முற்றாலும், "பரவாயில்லை! தாசில்தார் சார்! நான் நீங்க சொன்னபடி சில நாள் கழித்து திரும்ப வந்து உங்களை பார்க்கிறேன் உங்க "ஹெல்ப்" எனக்கு ரொம்ப தேவை" என்று கூறி, ஸ்டேஷன் மாஸ்டருக்கும், பாலா சாகேப்புக்கும் நன்றி கூறி புறப்பட்டார் கோசாலை பிரசாரகர். பிறகு வந்த காரியம் பற்றி கொஞ்ச நேரம் ரயில்வே அதிகாரியிடம் பேசிக்கொண்டு விட்டு திரும்பிவிட்டார் மாமலத்தார்.

அன்று தான் பாலா சாகேப் வீட்டில் உத்தியாபன விருந்து விரத நாள்!

வீடு களை கட்டியிருந்தது! வாசலில் மாவிலை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட மாம்பலத்தார் வீடு வந்த விருந்தினர்களால் கலகலப்பாக இருந்தது.

பாலா சாகேப் விருந்துக்கு வந்தவர்களை வாசலில் கை குவித்து நின்று வரவேற்றுக் கொண்டிருந்தார். அப்பொழுது அங்கு வந்த குதிரை வண்டியில் இருந்து இறங்கிய நபரை பார்த்ததும் அவர் திகைப்படைந்து விட்டார்." என்ன இது! அன்னிக்கு என்னை ஸ்டேஷனில் பார்த்த கோசாலை பிரசாரகர் ஆச்சே இவர்!

நிதி வசூலிக்க கொஞ்ச நாள் கழிச்சு தான் இவரை வரச் சொன்னேன். அதுக்குள்ளே, அதுவும் இன்னைக்கு பார்த்து இந்த சன்யாசி வந்துட்டாரே" என எண்ணியவாறே அவரையும், அவர் கூட குதிரை வண்டியில் வந்த இரண்டு பேர்களையும் வரவேற்றார்" பாலா சாகிப்.

சன்னியாசி பாலா சாகேப்புக்கு வணக்கம் கூறிவிட்டு, " சார்! உங்க வீட்டு விரத விருந்து குறிதது கொஞ்ச நாழி முன்புதான் கேள்விப்பட்டேன். இப்போது 8:00 மணி ஆகுது... விருந்து சாப்பாட்டுக்கு இவங்களோட மதியம் எப்போ வரலாம்?" என மிக உரிமையுடன் கேட்டார்.

அதனால் சந்தோஷம் உற்ற பாலா சாஹிப்" எல்லோரும் வாங்க! அது என் பாக்கியம் என ஆனந்தமுடன் பதில் சொன்னார். வந்த சந்நியாசியும் மற்ற இருவரும் வந்த வண்டியில் ஏறினார்கள்.



சற்று நேரத்திற்கெல்லாம் விருந்து அழைப்பு பெற்ற எல்லோரும் வந்துவிடவே, பாலா சாஹிபின் தாயார் முறைப்படி உத்தியாபன விரத விருந்து சடங்குகளை தொடங்கினாள்.

மிகச் சிறப்பாக அந்த விரத பூஜை நடந்தேறியது. அடுத்து விருந்து நேரம் வந்துவிட்டது. அச்சமயம் குதிரை வண்டியிலிருந்து சன்னியாசி இதர இரண்டு பேர்களுடன் வீட்டு வாசலில் இறங்குவதைக் கண்டு விட்ட பாலா சாஹிப்

"வாங்க, வாங்க", என அவர்களையும் வரவேற்று விருந்து கூடத்தில் அன்புடன் உட்கார வைத்தார். வந்த அனைவருமே மிக விமர்சையாக நடைபெற்ற உத்தியாபன விரத விருந்து ஏற்பாடுகளை மிக சிலாகித்துச் சொன்னார்கள், பாலா சாகிப்புக்கும் அவருடைய அன்னையிடமும் விருந்து முடிந்ததும், அனைவரும் மகிழ்ச்சியுடன் கிளம்பிவிட்டனர்.

மறுநாள் பாலா சாஹிப் மகான் பாபாவிற்கு எழுதி அனுப்பிய ஒரு லெட்டரில் "மிக நன்றாக உத்தியாபன விரத விருந்து நிகழ்ச்சி நடந்தது. ஆனால் தாங்கள் அதில் கலந்து கொண்டு சிறப்பித்து இருந்தால் யான் மிகபுண்ணிய சாலியாக இருந்திருப்பேன்"! என தன் மனக்குறையும் குறிப்பிட்டு இருந்தார்.

அக்கடிதம் சீரடியை அடைந்துவிட்டது.

வழக்கம்போல் மகானின் சீடர் ஜோக் அதனை படித்து காட்டினார். புன்முறுவலுடன் மகான் கேட்டுவிட்டு ஜோக்கிடம் இம்மாதிரி பதில் கடிதம் அனுப்பி வையுங்கள் பாலாவிற்கு என்று உத்தரவிட்டார்.

அக்கடித உரைகள் இப்படி அமைந்தன.

"அன்புள்ள பாலா! உமது மனக்குறையை நான் முன்பே உணர்ந்துள்ளேன் அன்று நடைபெற்ற உத்தியான விருந்தில் நானே, இரண்டு பேர்களுடன் வந்து மனநிறைவுடன் விருந்து உண்டேன். பாவம், நீர் என்னை கோசாலை வசூல் சன்னியாசியாக தான் அன்று கண்டு பீதியடைந்திருப்பீர்! " என்று.

லெட்டரை படித்துவிட்டு பாலா சாகிப் பதறி போய்விட்டார்.

"சே! என்ன தாசில்தார் பதவி வகித்து என்ன பிரயோஜனம்? விருந்தில் பங்கேற்ற மகான் பாபாவை அடையாளம் தெரியாத முட்டாளாக இருந்து விட்டேனே" என்று. அக்கடித வாசகங்களைப் படிக்க கேட்ட பாலா சாகிபின் தாயார் ஒரே சமயத்தில் மகிழ்ச்சியும், வேதனையும் பெற்றாள்." அட! நம்ம வீட்டு விருந்துக்கு பாபா வந்திருக்கிறார் என்ற ஆனந்தம் உடன், அவரை இன்னார் என அறியாது ஏமாந்து விட்டோமே" என்ற ஏமாற்றத்தையும்.

அன்றே, பாலா சாஹிப் மகான் பாபாவிற்கு அனுப்பிய பதில் கடிதத்தில் "இந்த தன் தவறுக்காக தன்னை மன்னிக்கும்படி கோரி" எனக் குறிப்பிட்டிருந்தார்.

இவ்விவரத்தை ஜோக் படிக்க கேட்ட மகான் பாபா அவரிடம் மேலே தன் கைகளை தூக்கி காட்டி, புன்முறுவலுடன் "அல்லா மாலிக்" ( இறைவனே எஜமானன்) என்று கூறினார்.

" வேண்டாமே"!

மகல் சபாதி என்பவர் மகான் சீரடி பாபாவின் முக்கிய தொண்டரும் பக்தரும் ஆவார். பாபாவுக்கு தினமும் அன்றாட நிகழ்வுகளில் துணையாகவும் இருப்பார் அவர். மராத்தி மொழி புராணங்களை நன்கு கற்றறிந்த மகல் சபாதி அடிக்கடி, பாபாவிடம் அனுமதி பெற்றுக்கொண்டு உபன்யாசங்களுக்கும் சென்று வருவார். அதன் மூலம் கிடைக்கும் தக்ஷிணை அவருக்கு பயன்பட்டு வந்தது.

அன்று பாபாவிற்கான தொண்டுகளை முடித்துவிட்ட மகல் சபாதி மகானிடம் "பகவானே! நாளைக்கு ஒரு நாள் மட்டும் பக்கத்து கிராமத்திற்கு செல்ல எனக்கு அனுமதி வேண்டும்" என தயங்கியவாறே சொன்னார்.

"என்ன விஷயமா, போகணும் மகல்"?

அந்த கிராமத்தில் உள்ள பெரிய மனிதர் ராம் பாவ் கார்டே தன் ஊரிலே, எனது புராண விரிவுரை நிகழ்ச்சி தர கேட்டிருக்கிறார். நானும் ஒத்துகிட்டு இருக்கேன். அதுதான்.... எனக்கூறி மகல்சாபதி முடிப்பதற்குள் குறுக்கிட்ட மகான், " அவசியம் போகணுமா? தவிர்த்துவிடேன்" என்று ஆலோசனை சொன்னார். பிறகு அவரிடம் பாபா "அங்கே நீ போனால், ஒரு சண்டையை பார்க்க வேண்டியிருக்கும்" என எச்சரித்து விட்டு தன் ஓய்வு அறைக்குள் நுழைந்து விட்டார்.

இப்பொழுது தர்மசங்கடமான நிலைக்கு ஆளாகி விட்ட மகல் சபாதி சுமார் பத்து கிலோமீட்டர் தூரத்தில் உள்ள அந்த கிராமத்திற்கு போனால் சண்டை வரும் என நம்ம மகான் சொல்கிறார். நான் போகாட்டா அந்த பெரிய மனிதரின் விரோதத்திற்கு ஆளாக வேண்டும் இப்படி தத்தளித்துப் போன மகல் சபாதி, வந்தது வரட்டும் என முடிவு செய்து அந்த கிராமத்திற்கு கிளம்பிவிட்டார்.

மகல் சபாதி புறப்பட்டு வந்தடைந்த கிராமம் அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. உள்ளூர் ஜனங்கள் தவிர அக்கம்பக்கத்து கிராமத்தினரும் அங்கு திரண்டிருந்தனர். புராண நிகழ்ச்சி முடிவடைந்ததும், வந்திருக்கும் அனைவருக்கும் பலத்த விருந்துக்கும் பெரிய மனிதர் ஏற்பாடு செய்திருந்ததும் அக்கூட்டத்திற்கு காரணமானது.

தன் முன்னே அமர்ந்திருந்த நூற்றுக்கணக்கானவர்களுக்கும் தன் ஆசிகளையும், மஹான் பாபாவின் ஆசிகளையும் தெரிவித்துவிட்டு மகல் சபாதி தன் புராண உபன்யாசத்தை தொடங்கினார்.

பாதி நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது மிக நன்றாகவே... ஜனங்களும் ஆர்வமுடன் மகல் சபாதியின் உரையைக் கேட்டு மகிழ்ந்து அடிக்கடி கைகளைத் தட்டி அவரை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தனர்.

யார் கண் பட்டதோ தெரியவில்லை, திடீரென கூட்டத்தில் சலசலப்பு. காரணம் வந்திருந்த பெரும் கூட்டத்தை சமாளிப்பதற்காக,

விழா முடிவில் நடக்கவிருந்த பெரும் விருந்தை முன்கூட்டியே தொடங்கிவிட்டது தான். சாப்பிடுவதற்காக வந்த கும்பலோ என்னவோ? அல்லது உபன்யாச மைதானம் முழுவதும் பரவி விட்ட உணவு பொருட்களின் வாசனையோ, தெரியவில்லை, “நான், நீ“ என போட்டி போட்டுக் கொண்டு புராண விரிவுரையை ஒரு பக்கம் தள்ளி விட்டு, விருந்து நடக்கவிருந்த பக்கத்து கிரவுண்டை நோக்கி ஜனங்கள் எழுந்து ஓடத் தலைப்பட்டனர்.

விருந்துக்கு முந்தாவிட்டால், அனைத்து பதார்த்தங்களும் கிடைக்காமல் போய்விடுமே என்ற தவிப்பு அங்குள்ள அத்தனை பேர்களையும் பற்றி விட்டது போலும்!

ஒரே கூச்சம், குழப்பம். மகல் சபாதி

“அமைதி அமைதி“ என குரல் கொடுத்தும் எவர் காதிலும் அது விழவில்லை!

விருந்து இலைக்காக ஓடிக்கொண்டிருந்த இரு கிராம கோஷ்டிக்கும் சண்டை மூண்டு கைகலப்பு வரை உச்சத்திற்குப் போய் விட்ட அவலநிலையைக் கண்ட மகல் சபாதி, தன் உரையை அத்துடன் முடித்துக் கொண்டுவிட்டார். நல்லவேளையாக விழாவை ஏற்பாடு செய்திருந்தவர் ஓடோடி அங்கு வந்து மகல் சபாதியிடம் இந்த எதிர்பாராத நிகழ்வுக்காக பலமுறை அவரிடம் மன்னிப்பு கேட்டு விட்டு ஒரு துணையையும் ஏற்பாடு செய்து வண்டி ஒன்றில் ஏற்றி அவருடைய ஊர் திரும்ப வழி செய்தார். வரும் வழியில், ”மகான் பாபா தன்னை எச்சரித்தும் இந்த புராண விரிவுரை நிகழ்ச்சிக்கு வந்து சண்டைகளை எதிர்கொள்ள நேர்ந்த துர்பாக்கிய நிலைக்கு வருந்தி மானசீகமாய் மகான் பாபாவிடம் அவர் மன்னிப்பு கோரினார்.

மறுநாள், தொண்டு புரிய தன் முன்னால் தலைகுனிந்து நின்று கொண்டிருந்த மகல் சபாதியை பார்த்துவிட்ட மகான், சிரித்தவாறே ”விருந்து தடபுடலா நடந்துதா?” என்று கேட்டார்.

உடனே மகானை நமஸ்கரித்து எழுந்த மகல் சபாதி ” என்னை மன்னித்துவிடுங்கள் ஐயனே”! இனி தங்கள் கட்டளையை மீறி எந்த காரியமும் செய்ய மாட்டேன்” என்று உறுதியாக பதில் சொன்னார். அப்படியே தன் வாழ்நாள் முழுவதும் அந்தக் கொள்கையை மகல் சபாதி கடைப்பிடித்தார்.

"நினைத்ததெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஏதுமில்லை"!

**ஜெய் சாய்ராம்!**

(தொடரும்)





ஆன்மீக சிறுகதை

# அவன் சித்தனா?....



ரா. பன்னீர்செல்வம்

மாசிலாமணி ஒரு சிறந்த சிவ நெறியாளர்!

ஒழுக்க சீலர்! வளர்ந்து வரும் அந்த நகரத்தில் வாடகை வீடு! அந்த வீட்டின் முன்புறம் ஒரு சிறு மளிகை கடை என தன் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருந்தார். 50 வயதைக் கடந்தவர்; ஊருக்கு வெளிப்புறம் உள்ள சித்தரின் ஜீவ சமாதிக்கு அடிக்கடி சென்று தியானிப்பார்! அங்கு சென்று வந்தாலே நல்லது நடக்கும் என்கிற நம்பிக்கை அவருக்கு நிறையவே இருந்தது!

நீலாவதி என்னும் மனைவியும் கருணாகரன் என்ற 17 வயது மகனும் கலைச்செல்வி என்கிற 15 வயது மகளும் இருந்தனர். மாசிலாமணியின் மொத்த உலகமே இதுதான்! தொழிலில் நேர்மை முக்கியம் என நினைத்து, நேர்மையாக வாழ்ந்து வந்தார்.

இறைவனின் அருளோ என்னவோ.... அவருடைய பிள்ளைகள் இருவருமே படிப்பில் முதல் மாணவர்களாக புத்திசாலியாக இருந்தார்கள். எதிலும் முதன்மையாகத் திகழும் அவர்கள் கல்வி சம்பந்தமாக மாசிலாமணி என்றுமே கவலைப்பட்டதில்லை.

வாடகை வீடு என்பது தன்னோடு முடிந்து போகட்டும்! பிள்ளைகளின் எதிர்காலமாவது சொந்த வீட்டில் அமையட்டும் என்று நினைத்து சிக்கனமாக குடும்பம் நடத்தும் தன் மனைவியின் துணையோடு பணத்தை மிச்சப்படுத்தி, பக்கத்து ஊரில் ஒரு வருடம் மாதச் சீட்டு போட்டு வைத்திருந்தார். அந்தப் பணம் வந்ததும் ஒரு நல்ல இடமாக பார்த்து வாங்கி விட்டால் நிம்மதியாக இருக்கலாம்.

நடுத்தர வர்க்கத்துக்கே உரிய எதிர்பார்ப்பு! வெள்ளந்தியான மனசு! எல்லோரையும் எளிதில் நம்பி விடும் இயல்பு! இறைவன் இப்படிப்பட்டவர்களையும் படைத்துக்கொண்டு தானே இருக்கிறான்.

மாசிலாமணி தன் மனைவியிடம், ”கடைசி சீட்ட நாம் எடுத்தால் மொத்த பணமும் வந்துவிடும்; ஊரை ஒட்டின மாதிரி ஜெயபுரம்பை ஒரு நகர் உருவாக்கிவிட்டு இருக்குது! அதுல ரெண்டு மனைய வாங்கிடலாம்”, என்றார்.

அவர் மனைவியின் முகத்தில் திடீரென சந்தேக ரேகைகள் உதித்தன.

”என்னங்க.... நீங்க சீட்டு கட்ற மனுஷன்.... நம்பிக்கையானவர் தானே!? .. ஏன்னா... இப்பவெல்லாம் சீட்டு பணம் மொத்தத்தையும் எடுத்துக்கிட்டு ராவோட ராவா ஓடிப் போயிடறதா நிறைய சம்பவம் நடக்குதே!” கவலையுடன் கேட்டாள்.

”விதி அப்படி இருந்தா நம்மால என்ன செய்ய முடியும்?!.... நீலாவதி.... நாம யாருக்கும் எந்த கெட்டதும் பண்ணியதில்ல! கடவுள், நமக்கு இப்படி ஒரு சோதனைய கொடுப்பான்?! பார்ப்போம்! கடவுள்

மேல பாரத்தப் போடு", என்றார்.

தங்களைப் போல தான் எல்லோரும் இருப்பார்கள் என எண்ணுவது தானே நல்லவர்களின் குணம்; அந்த குணம் மாசிலாமணியிடம் இருந்தது!

காலை நேரம்!

தனது சிறிய கடையை திறந்து வியாபாரத்தை நடத்திக்கொண்டிருந்தார் மாசிலாமணி!

சற்று நேரத்தில் அவரது மனைவி வந்து," என்னங்க... நீங்க போய் சாமி கும்பிட்டு அப்படியே சாப்பிட்டு வந்துடுங்க! " என்றாள்.

"சரி... நான் போயிட்டு வந்துடறேன்... சர்க்கரை உள்ள பையில இருக்கு! எடுத்துக் கொடு!... பருப்பு அந்த டின்ல இருக்கு! " ஒவ்வொன்றாய் சொன்னார்!

"எல்லாம் நான் பார்த்துக்கறேன்! நீங்க முதல்ல போய் சாப்பிட்டுட்டு வாங்க! " என்றாள் நீலாவதி!

சைக்கிளில் புறப்பட்டார்! வீடு இருபத்து தென்திசையில்! சைக்கிள் போவதோ வடதிசையில்! எதற்கு அங்கே செல்கிறார். அவரைப் பற்றி அறிந்த எல்லோருக்குமே தெரியும். அங்குதான் "பேர் சொல்லா சித்தரின் ஜீவசமாதி..... ஒரு சிறு கோவிலாக இருக்கிறது! அங்கு சென்று சித்தரை வணங்காமல் சாப்பிடவே மாட்டார்! அதே போல இன்றும் வந்துவிட்டார்!

ஜீவசமாதியின் மீது கடந்த பௌர்ணமி தினத்தன்று போடப்பட்ட பூமாலை காய்ந்து பீடத்தில் எழுதப்பட்டிருந்த " பெயர் சொல்லா சித்தர்" என்ற எழுத்துக்களை மறைத்திருந்தது.

தான் வாங்கி வந்து இருந்த பூச்சர பார்சல் உடன் சென்ற மாசிலாமணி, காய்ந்த பூமாலையை அகற்றி, அதை ஒரு செடியின் மீது போட்டுவிட்டு, அங்கே இருந்த ஒரு துணியால் சமாதியின் மேல் பகுதியை துடைத்துவிட்டு பூச்சரத்தை போட்டு வணங்கினார்.

ஒரு ஓரமாக உட்கார்ந்து தியானம் செய்யத் தொடங்கினார்.

இங்கே சமாதி அடைந்திருக்கும் இந்த சுவாமிகளுக்கு இந்த பெயர் வந்தது எப்படி?

பத்து ஆண்டுகளுக்கு முன்னால்.... அது ஒரு



ஜீவ சமாதி என்பதை கண்டறிந்த சிலர், அந்த இடத்தை தூய்மைப்படுத்தி, ஒரு சிறு ஷெட் அமைக்க திட்டமிட்டனர். அவர்களில் மாசிலா மணியும் ஒருவர்.

"ஷெட்" டெல்லாம் போட்டு முடித்த பின்னர், இது யாருடைய ஜீவசமாதி என்று எப்படி குறிப்பிடுவது? இந்த சித்தரின் பெயர் என்ன? எங்கிருந்து வந்தார்! என்பன போன்ற பல கேள்விகள் எழுந்தன. எவருக்கும் இவரைப் பற்றிய எந்த தகவலும் இல்லை.

ஆனால், புதர் மண்டிக் கிடந்த இந்த இடத்திலேயே வந்து, இங்கு ஏதோ ஒரு தெய்வம் இருக்கிறது என்று வேண்டிக் கொண்ட ஆட்டுக்கார வேலாயுதத்தின் நிலை திடீரென உயர்ந்து அவன் பெரிய மனிதர்களில் ஒருவனானான். இதற்குப் பிறகுதான் இந்த இடத்தில் ஊரார் பலரும் வழிபாடு செய்யத் தொடங்கினர். எல்லோருக்குமே நல்லருள் கிடைத்தது. அப்போது ஒரு நாள், நமது மாசிலாமணி "நம்மை யாருக்குமே இவரபத்தின விபரம் எதுவும் தெரியல; பேரும் இதுதான்னு சொல்ல முடியல! இவர் பேர யாருமே சொல்லாததனால இவர " பெயர் சொல்லா சித்தர்"னே நாம அழைக்கலாமே!" என்றார்.

எல்லாரோலும் இந்த யோசனை ஏற்கப்பட்டு, உடனே பெயிண்டரை வரச்சொல்லி பேர் சொல்லா சித்தர்" என அந்த பீடத்தில் எழுதப்பட்டது! இதுதான் இந்த சித்தருக்கு பெயர் வந்த கதை!

சித்தரை மனதார நினைந்து தியானத்தில் இருந்தார், மாசிலாமணி! அப்போது....

ஏதோ அரவம் கேட்டது!.... " ஹா..ஹா...ஹா.. "என ஆங்கார சிரிப்பு! மெல்ல கண் திறந்து பார்த்தார், மாசிலாமணி!

"பைத்தியம்"... அவனை ஊர்க்காரர்கள் எல்லோருமே " சித்தப்பா" என்று அழைப்பார்கள்! ஏனென்றால் அவன், பார்க்கும் ஆண்கள் எல்லோரையும் " சித்தப்பா" என்றும் பெண்களைப் பார்த்தால் " சித்தி" என்றும் அழைத்துத் தான் " தண்ணி குடு; சோறு போடு; காசு குடு" என்று கேட்பான். அதனால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அந்த பைத்தியத்தை " சித்தப்பா" என்றே குறிப்பிடுவார்கள்.

அந்தப் பைத்தியம் தான் ஜீவசமாதி மீதிருந்த மலர்ச்சரத்தை எடுத்து பூப்பூவாய் பிய்த்து அர்ச்சனை செய்வது போல் போட்டுக் கொண்டிருக்க.... இதை பார்த்த மாசிலாமணி பதறி, " டேய்.... சித்தப்பா.... என்ன பண்ற? பூவ ஏன் பிச்சு போட்ற?".... என தடுக்க முனைந்தார்; முடியவில்லை!

அவன் பூக்களைப் பிரித்து வீசியபடியே வெளியே ஓடினான்! மாசிலாமணி சமாதியை பார்த்தார். மேற்பரப்பில் பூக்கள் அங்குமிங்குமாக அலங்கரித்தன. ஒற்றை பூச்சரம் சமாதி முழுவதும் நிரம்பி இருப்பதை போல தோன்றியது! " இதன் மூலம் சுவாமிகள் என்ன சொல்ல வருகிறார்; புரியவில்லையே! " என யோசித்தவர், நன்றாக மனதார வணங்கி விட்டு புறப்பட்டார்!

கடையில் வியாபாரம் சுமாராக நடந்துகொண்டிருந்தது! ஒருவர் வந்து, " கடைக்காரண்ணே! ஒரு மூணு கிலோ அரிசி கொடுங்க!" என்றார்.

"என்ன முனுசாமி, விசேஷமா? "... என்றார் மாசிலாமணி, " ஒரு ஏக்கர் பயிரில களையெடுப்பு நடக்குது! அவங்களுக்கு சோறாக போடத்தான்".... என்றார்.

அப்போது அங்கு வந்த போஸ்ட்மேன், சைக்கிளை நிறுத்திவிட்டு, "மாசியண்ணே! குடிக்க கொஞ்சம் தண்ணி கொடுக்கிறீர்களா? பக்கத்து ஊர்ல இருந்து வெயில்ல வந்தது தாகமா இருக்கு! " வியர்வையை துடைத்தபடியே!...

பானையின் மூடியை திறந்து ஒரு சொம்பு நிறைய தண்ணீர் எடுத்துக் கொடுத்தார், மாசிலாமணி! தண்ணீரைக் குடித்துவிட்டு சொம்பை கொடுக்க, கையில் வாங்கியபடி மாசிலாமணி, "இன்னைக்கு ரொம்ப களைப்பா தெரியறிங்களேண்ணே! " என்றார்.

"என்ன பொழப்பண்ணே இது.... வெயில்ல... நாய் படாத பாடு!.. " என சலித்துக் கொண்டே போஸ்ட்மேன், " பக்கத்து ஊர்ல இன்னைக்கு 23 லட்டர் வந்திருந்தது! பலபேர் வீட்ல இல்ல; அலைந்தது தான் மிச்சம்! என்னடான்னு எல்லோரும் தாலுக்கா ஆபீஸ் ல இல்ல இருந்தாங்க! " என்றார்.

"அவ்வளவு பேரும் அங்க என்ன பண்ணாங்க!? "- மாசிலாமணி!

"கருத்துக் கேட்புக் கூட்டமாம்.... நம்ம பக்கத்தில ஏதோ ஏர்போர்ட் வரப்போகிறதாம், " போஸ்ட் மேன்!

"வந்திடுமாண்ணே!"..... மாசிலாமணி.

"அதெல்லாம் இப்ப ஆகுற கதையா? ஏர்போர்ட் வரலாமா? கூடாதான்னு கருத்து கேட்பாங்க!

அப்புறம் இடம் தேர்வு செய்வாங்க! அதல எவனா ஸ்டே வாங்க கோர்ட் படி ஏறுவான்! அடுத்த தலைமுறையாவது பார்த்திடும்! ம்!.... சரி, நான் வரேன் அண்ணே! " பெருமூச்சுவிட்டபடி சைக்கிளில் ஏறிப் புறப்பட்டார்!

"எப்படியோ.... ஏதாவது புதுசா வந்த இந்த ஊரு முன்னுக்கு வந்தா போதும்!" என்றபடி பொட்டலம் மடித்தார், மாசிலாமணி!

நெடுஞ்சாலை பகுதி தவிர, அந்த ஊரே 8 மணிக்குள் அடங்கிவிடும்!

அதனால், மாசிலாமணியின் வீட்டில் இரவு நேர சாப்பாட்டில் மகன், மகள் அனைவரும் நீலாவதி பரிமாற ஒன்றாய் அமர்ந்து சாப்பிடுவது வழக்கம்!

எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

நீலாவதி, "இன்னைக்கு தேதி பத்துங்க! சீட்டு பணம் எப்ப போய் வாங்க போறீங்க!? ", என்றாள்.

"அந்த மனுஷன் கண்ணியமானவரு.... மத்தியானமே தகவல் சொல்லி அனுப்பியிருந்தாரு! நாளைக்கு காலையில வந்து வாங்கிக்க சொன்னாரு! காலையில நீ கடைக்கு வந்ததும் நான் போய் வாங்கிட்டு வந்துடறேன், " என்றார் மாசிலாமணி!

"கடைசி சீட்டாச்சே.... பணம் கைக்கு வருமா? என்ன ஆகுமோன்னு பயந்துகிட்டிருந்தேன்! நல்ல வேள... யார் செஞ்ச

புண்ணியமோ நாளைக்கு பணம் கைக்கு வந்துவிடும்னு சொல்றீங்க!”

”எங்க போக போகுது?! ரெண்டு வருஷமா வாய, வயித்த கட்டி சிறுக சிறுக சேர்த்தது... அப்படி ஒன்னும் கடவுள் நம்மள கைவிடமாட்டான்! ”

”பணம் வாங்க போகும்போது பையனையும் கூட கூட்டிட்டு போறீங்களா?...”

”அவன் எதுக்கு?... அவன் பள்ளிக்கூடம் போகட்டும் நா போய் வாங்கிட்டு வந்துடறேன். அப்புறம் இன்னொரு விஷயம்! நாளைக்கு வரைக்கும் தான் பிளாட் 30 ஆயிரத்துக்கு கிடைக்கும்! ஒரு நாள் போச்சு முப்பத்தைந்தாயிரமாம்! அதனால, நாளைக்கு மத்தியானம் சாப்பிட்டு முடிச்சிட்டு, ஒரு மூணு மணிக்கு ரெண்டு பேரும் போயி பணத்தைக் கொடுத்து பிளாட் “புக்“ பண்ணிட்டு வந்துடுவோம். ஜெயபுரத்தில நமக்கும் வீடு உண்டு! ” தெம்பாக சொன்னார்!

அறுபதாமாயிரம் போய்.... மொத்தமாக அத்தனை தொகையை கையில் வைத்து பார்த்த உடன் பூரித்துப் போனார், மாசிலாமணி!

”அண்ணே! இந்தப் பையில் போட்டு ஜாக்கிரதையா கொண்டு போங்க!” என்றபடி பணத்தை அந்தத் துணிப் பையில் போட்டுக் கொடுக்க, அதை வாங்கி இடுப்பு வேட்டியில் நன்றாக சொருகி. சட்டையை மேலே இருந்து தடவி பார்த்தபடி, சீட்டுக்கார அண்ணாச்சிக்கு நன்றி கூறி சைக்கிளில் புறப்பட்டார் மாசிலாமணி!

அவர் நேராக பணத்துடன் வந்தது ஜீவசமாதிக்கு! பணத்தை ஜீவ சமாதிக்கு அருகே வைத்து வணங்கினார்.

அவசரம் அவசரமாக.... அவசரம் என்பதைவிட பரவசம் மேலிட மதிய உணவை சாப்பிட்டு முடித்த மாசிலாமணி, மனைவியை அவசரபடுத்தினார்.” என்ன பண்ற நீலா! சீக்கிரம் கிளம்பு! பக்கத்து ஊரு பஜார்ல தான் ஜெயபுரம் ஆபீஸ் இருக்குது! போயிட்டு நம்ம கடைக்கு திரும்ப சரியா இருக்கும்”.

பணத்தை எடுத்துக்க! கிளம்பு!” .. என்றபடி, சட்டையை மாட்ட பூஜை அறையில் சாமி படத்திற்கு முன்னால் வைத்திருந்த பணப்பையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள் நீலாவதி!

சைக்கிள் பயணம்! கணவன் சைக்கிளை ஓட்ட பின்னால் உட்கார்ந்திருந்த மனைவி, பணப்பையை தன் மடியில் வைத்திருந்தார். அவளது கவனம் முழுவதும் பணப்பையிலேயே இருந்தது!

தெம்பாக மிதித்து வேகமாக சைக்கிளை ஓட்டினார் மாசிலாமணி. என்ன ஆச்சு?.. ஏன் இந்த தடுமாற்றம்! தட்டுத்தடுமாறி சைக்கிள் சாலையில் இருந்த ஜல்லி கற்கள் இடறி விட சைக்கிள் சாய்ந்தது! இருவரும் ஆளுக்கு ஒரு பக்கமாக விழுந்து புரண்டார்கள்.

”சே! என்ன இப்படி ஆகிடுச்சு!” என புலம்பியவர், மனைவி விழுந்து கிடப்பதை பார்த்து பதறி, நீலா... உனக்கு ஒன்னும் ஆகலையே?... ” என்றவாறு எழுந்து வந்தார்.

”ஐயோ.... கால் சுளுக்கிடுச்சு போலங்க! காலை எடுத்து வைக்கவே முடியல;” என தடுமாறி எழுந்தாள் நீலா!

மெல்ல, சைக்கிளை தூக்கி நிமிர்த்தியவர், கூர்ந்து கவனிக்க.... செயின் கழண்டிருந்ததைப் பார்த்தார்! சைக்கிளை சற்று தூரம் தள்ளி வந்து சமதளத்தில் நிறுத்தியவர், செயினை சரியாக போட முயற்சி செய்தார்.

சேலையில், கை, கால்களில் ஒட்டி இருந்த புழுதி மண்ணை தட்டிவிட்ட படி சங்கடத்துடன் நின்றாள் நீலாவதி!

திடீரென்று ஞாபகம் வந்ததைப் போல மாசிலாமணி,

”நீலா.... பணப்பை பத்திரமா இருக்குதா?” பரப்புடன் கேட்டார். அப்போதுதான் கவனித்தார், நீலா.....” பணப்பை எங்கே?... பணம் எங்கே?.... உங்கையில பணப்பை இல்லையா?”..... உடல் நடுங்க கேட்டவரின் கண்களில் நீர் திரையிட்டது! நீலா, பேச்சு வராமல் தவித்தாள்.

கை, கால்கள் நடுங்கியது!

அதே நேரத்தில்...

சாலையில் இவர்கள் விழுந்த இடத்தின் பக்கத்தில் இருந்த வாய்க்காலில் இருந்து எழுந்தது ஓர் உருவம்! அது....

”சித்தப்பா”, என்கிற பைத்தியம்! அவன் கையில் பணப்பை!

அதைப் பார்த்தவுடன் உயிரே வந்ததைப்போல் கத்தினார்,” சித்தப்பா.... அதை கொடுத்திரு!” என்றபடி அவனை நோக்கி நகர,

நீலாவும் வேகமாய் நடந்தார்.

இவர்கள் வருவதைப் பார்த்த "சித்தப்பா" ஓஹோவென சிரித்தபடி, வயலில் புகுந்து ஓடினான். பதட்டம், கோபம், அழுகை எல்லாம் கலந்த நிலையில் இருவரும் வயல்வரப்புகளில் ஓட... வயல் வெளியை அடுத்திருந்த தோப்பில் புகுந்தான் " சித்தப்பா"..

மாசிலாமணியின் குடும்பமே கண்ணீரில் மிதந்தது. இரண்டு நாட்களாய் கடையும் திறக்கவில்லை. ஊர் முழுக்க இதே பேச்சு! பைத்தியக்காரன் "சித்தப்பா" வை ஊரே தேடியது!

அதில் பலர், "பைத்தியத்திடமிருந்து பணத்தை பாதுகாத்து மாசிலாமணியிடம் ஒப்படைக்கவும் வேறு சிலர் பணத்தை தாங்கள் எடுத்துக் கொள்ளவும் திட்டமிட்டனர். பைத்தியக்காரன் என்ன சொல்லவா போகிறான் என்ற எண்ணம்! ஆனால், இரண்டு நாட்களாக "சித்தப்பா" யார் கண்ணிலும் படவில்லை! தேடுவோர் தேடிக்கொண்டே இருந்தனர்.

மூன்று நாட்கள் கழிந்தன.

அன்றுதான் கடையைத் திறந்தார் மாசிலாமணி!

கடைக்கு வந்த எல்லோருமே இவருடைய பணம் பறி போன விதத்தினை ஏதோ துக்கம் விசாரிப்பது போல விசாரித்தனர்.

ஒரு தடவை பணத்தை பறிகொடுத்த சோகம் தான் ஆனால், பலரும் வந்து ஒவ்வொரு தடவை விசாரிக்கும் போதும் அந்த நினைவை புதுப்பித்து புதுப்பித்து நாம் அனுபவிக்கும் வேதனை இருக்கிறதே அதுதான் மாபெரும் சோகம் என நினைத்து, தன் விதியை நொந்து கொண்டார்.

கொஞ்ச நேரத்தில்.... போஸ்ட்மேன் வந்தார், அவரது முகத்தில் ஒரு பிரகாசம்! சைக்கிளை நிறுத்தியவர்,

"அண்ணே... நல்ல வேள.... நீங்க தப்பிச்சிங்க! " என்றதும் மாசிலாமணி புரியாமல் அவரைப் பார்க்க, மேலும் தொடர்ந்தார். "நீங்க ஜெய புரத்திலே வாங்க போனப்ப தானே பணத்தை பறிகொடுத்திங்க! இப்ப.... அந்த ஜெயபுரமே போயிடுச்சு!"

ஒன்றும் புரியாமல் "என்ன சொல்றீங்கன்னே! " என்றார் மாசிலாமணி"

"உங்களுக்கு விஷயமே தெரியாதா? ஜெயபுரம் லே-அவுட் போட்டாங்களே... அது உட்பட 250 ஏக்கர் நிலம் ஓட்டுக்காக கவர்மெண்ட் கையகப்படுத்தி இருக்காங்க! ஜெயபுரம் பிளாட்டில் பணம் போட்டவர்கள் எல்லாம்.

"போச்சே. போச்சே.. போட்ட பணத்தில் பாதியாவது மிஞ்சுமா என்று தவிக்கிறாங்க! கடவுளா பார்த்து தான் உங்கள காப்பாத்தி இருக்கான்! " என்றார் போஸ்ட்மேன்!

மாசிலாமணியின் உள்ளம் கொதித்தது. "அப்படி இடத்தை வாங்கி இருந்தால் கவர்மெண்ட் கொடுக்கிற கொஞ்சம் பணமாவது மிஞ்சி இருக்கும்! இப்ப ...எல்லாம் மொத்தமா போச்சு".... மனம் புழுங்கினார்.

மனைவி வந்தவுடன், "நீலா.... கோவில் பக்கம் போய் நாலு நாள் ஆச்சு, நமக்கு வாய்ச்சது அவ்வளவுதான்! அதுக்காக கடவுள நொந்துக்க முடியுமா? எல்லாம் ஏதோ காரணத்துக்காக நடக்குது! நாம என்ன செய்ய முடியும்?! நான் போயிட்டு வந்துடறேன்; அந்தப் பூவை எடு! " என்றார்.

சைக்கிளை ஜீவசமாதி கோவிலை நோக்கி செலுத்தினார். வழக்கம்போல சமாதி மீது துடைத்துவிட்டு பூவை போட்டுவிட்டு, கண்மூடி அமர்ந்தார்.

"ஐயா... உங்களத்தான் தெய்வமா நெனச்சு இத்தனை காலமா வேண்டிக்கிட்டு வரேன்... என் இரண்டு வருஷம் உழைப்பால் சேமித்த பணம் இப்ப கையில இல்ல!

"இன்னும் ரெண்டு வருஷம் கஷ்டத்தை அனுபவிடான்னு நீ சொல்றது தெரியுது! எல்லாமே நீ காட்ற வழிதான்; நான் என்ன செய்வேன்?!" உள்ளம் உருக வேண்டினார்.

தன்னை மறந்து அமைதி நிலையில் தியானத்தில் இருந்தவர் ஏதோ அரவம் கேட்டு கண்விழித்து பார்க்க.... பைத்தியமான "சித்தப்பா"... ஹா... ஹா...ஹா வென சிரித்தபடி, சமாதியின் மீது பணப்பையை வைத்து இவரை பார்த்து சிரித்தான்.

மாசிலாமணியின் மனதில் ஆயிரம் புறாக்கள் சிறகடித்தன.

சித்தர், சமாதியில் உள்ளவரா? இல்லை இந்த "சித்தப்பா"வா?....



# அகத் தாமரையே அருள்நிறை ஆலயம்

இது எனது வீடு. இது எனது தோட்டம். இது எனது சொத்து இது எனது கோயில் என அடம் பிடித்தால், இறைவன் உறையும் தேர்வடம் பிடிக்க முடியாது. குடம் நிறைய பாலை ஊற்றி கும்பிட்டாலும் நம் பாவங்கள் அகலாது.

நம் நிழல் நம்மோடு தான். நாம் செய்யும் செயல்களோ நம்மோடு வருபவை தடம் மாறாமல், தடுமாறாமல், எல்லாமே ஈசன் கருணை என வாழ்வோம். எல்லாப்புகழும் இறைவனின் திருவடிக்கே- நாம் வெறும் கருவி நன்மை இயக்குபவன் சர்வேஸ்வரன் என்பதை என்று உணர்கின்றோமோ அன்று தான் பரிபக்குவ நிலையை அடைகின்றோம்.

சுத்த தேகம்- ஞான தேகம்- பிரணவ தேகம் என்ற முத்தேக சித்தியைப் பெற முடியுமா? அஷ்டமா சித்தியை அடைய முடியுமா? சடாமுடியுடன் காவியை தரிந்தவர்களால் மட்டும் அத்தகைய பேற்றைப் பெற முடியுமா? வெள்ளுடை தரித்த வள்ளலார் மரணமில்லா பெருவாழ்வு வாழ்ந்து வையகத்திற்கே அருள் ஒளியை வழங்கி திருவருட்பிரகாச வள்ளலாராக, அருள் ஞான பிரகாசமாக ஆன்மநேய அருட்கடலாக பரிவுடன் தயவு நெறியை தரணிக்கே உயிர் இரக்கத்தை உணர்த்திய உத்தமர் ஒரு தாயின் வயிற்றில் அவதரித்தவர் தானே அப்பெருமானை பற்றிட, படிநிலைகளில் உயர மாசிலா மனம் நமக்கு வேண்டும்.

நல்லகமே இறைவன் உறையும் உண்மையான ஆலயம்!

பூசலார் கட்டிய மனக் கோயிலே அரசன் கட்டிய நிஜக் கோயிலை விட பெரியது என்று உணர்த்தினான் ஈசன்!

உள்ளம் பெருங்கோயில் என்பது முற்றும் உணர்ந்தோர் கண்ட முடிந்த முடிவு!

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஈசனை வேண்டி நிற்பதே பெரும் பாக்கியமாக உணர்ந்தனர்.

மழைப் பொழிவும், பூமி விளைவதும் ஈசனால்!

உயிரினங்கள் ஜனனம் ஆவதும் ஜீவிப்பதும் மரணிப்பதும் ஈசனால்.... எல்லாமே, எதுவுமே ஈசனின் படைப்பு!


இதில் நாம் பெருமைப்பட என்ன இருக்கிறது.

நாமே இரவல் தான். நம் உடல் இரவல். நம் உயிரும் இரவல். நம் படிப்பு ஆசான் தந்தது!

கர்வம் மனிதனுக்குத் தேவை இல்லாதது. சர்வம் ஈசன் கிருபையால் நிகழ்வது. இதை மறைக்கவோ மறுக்கவோ மறக்கவோ கூடாத பேருண்மை.



சைவ சித்தாந்த செம்மல்
**கவிஞர். சீனு. செந்தாமரை**
கடலூர்



திருவாரூர் சு.சேகர்

## கோரிக்கைகளை நிறைவேற்றுவார்

# கோவைகோனியம்மன்!!

வளமையும் பெருமையும் மிக்க கோவை மாநகரத்தில் காவல் தெய்வமாகவும் தனிப் பெரும் அரசியாகவும் அருள்மிகு கோனியம்மன் என்ற பெயரில் அன்னை அருளாட்சி நடத்துகின்றார்.

கோனியம்மன் கோயில் கோவை மாநகரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. இக்கோயிலை மையமாகக் கொண்டே கோவை நகரம் அமைக்கப்பட்டது. கோவை மாநகரில் கோட்டை ஈசுவரன் கோவில், பேட்டை ஈசுவரன் கோவில் என்ற இரண்டு சிவாலயங்களுக்கு இடையில் பழம் பெருமையுடன் விளங்குவது அருள்மிகு கோனியம்மன் திருக்கோயில். கோவை மாநகரின் மூன்று கண்கள் போல விளங்கும் கோயில்களில் ஒன்றாக வீற்றிருந்து பராசக்தியின் அம்சமாக அருள்புரிகிறாள். சிவபெருமானைப் போன்று வலது செவியில் குண்டலமும், இடது செவியில் தோடும் அணிந்து காட்சி அளிக்கிறார். கோனியம்மனை பார்க்கும் போது சிவமும் சக்தியும் வேறு வேறல்ல என்பதை உணர்த்துகிறது.

அறுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த கோயிலுக்குச் சோழ, பாண்டிய, நாயக்க, மைசூர் மன்னர்கள் பல விதங்களில் திருப்பணிகளைச் செய்துள்ளனர். கோனியம்மன் கோயிலில் திருமணத்தடை நீங்க, குழந்தைப்பேறு பெற, தொழில் விருத்தி அடைய வேண்டிக் கொள்கின்றனர்.

## ஸ்தல வரலாறு:

கொங்கு நாடான இன்றைய கோவை மாநகரம் பல நூற்றாண்டுகளுக்கு முன் காடுகளாகவும், முட்புதர்களாகவும் இருந்தது. இருளர்களின் தலைவன் கோவன் என்பவர் அதனைச் சீர்படுத்தி ஒரு புதிய ஊரை உருவாக்கினார். கோவன் அமைத்த புத்தூர் என்பதால், கோவன் புத்தூர் என அந்த ஊர் அழைக்கப்பட்டது. அந்த ஊரே இன்று கோயம்புத்தூர் என அழைக்கப்படுகிறது. நல்லாட்சி செய்து வந்த கோவன், மக்கள் நலம் பெற்றுச் செழிப்புற வாழச் சிறு நிலத்தைச் சீரமைத்து அங்குக் கல் ஒன்றினை வைத்து அம்மனாக எண்ணி வழிபடத் தொடங்கிய பின், கோவன் புத்தூர் மக்கள் செழிப்புற்றுத் திகழ்ந்தனர். அதன்பின், இருளர்கள் அந்த அம்மனையே தங்களது குலதெய்வமாக எண்ணி கோயில் கட்டி வழிபடத் தொடங்கினர்.

கோவன் ஆட்சி முடிந்த பல்லாண்டுகளுக்குப்பின் இப்பகுதியை இளங்கோசர் என்ற மன்னன் ஆண்டு வந்தார். அப்போது, சேர மன்னன் படையெடுத்து வர, தன் நாட்டையும், நாட்டு மக்களையும் காக்கும் பொருட்டு, கோவன்புத்தூரின் மையத்தில் ஓர் கோட்டையையும், மண்மேட்டையும் கட்டி, காப்புத்தெய்வமான அம்மனை "கோயம்மா" என்று பெயரிட்டு வைத்து வழிபட்டார். இளங்கோசர் வணங்கி வந்த கோயம்மாவே கோனியம்மா என மருவியது. பழங்குடியினரின் ஆட்சிக்காலத்திற்குப் பின்னர் முக்கியத்துவத்தை இழந்த இக்கோயிலை மைசூர் மன்னர்களில் ஒருவர் 'மகிசாசுர மர்த்தினி' அமைப்பில் சீரமைத்தார். கிராமமாக இருந்த கோவன்புதூர், இன்று முக்கிய பெரிய நகரமாக விளங்க அருள் செய்து விளங்குபவள் கோனியம்மன். கோவை நகர மக்களும், கோனியம்மனையே முக்கிய தெய்வமாகவும், தலைமை தெய்வமாகவும் ஏற்றுக்கொண்டு போற்றி வழிபட்டு வருகின்றனர்.

## திருக்கோயில் அமைப்பு:

கோவை மாநகரில் கோட்டை ஈசுவரன் கோயில், பேட்டை ஈசுவரன் கோயில் என்ற இரண்டு சிவன் கோயில்களுக்கு இடையில் பழம் பெருமையுடன் விளங்குவது அருள்மிகு கோனியம்மன் திருக்கோவில். மூன்று கோயில்கள் முக்கண் போலவும் அதில் கோனியம்மன் திருக்கோவில் நடுவில் உள்ள நெற்றிக்கண்




போலவும் அமைந்துள்ளது. கோவை மாநகரின் மையமாகவும் கோனியம்மன் திருக்கோவில் அமைந்துள்ளது.

கோனியம்மன் திருக்கோயில் எண்பத்து நான்கு அடி உயரத்தில் ஒன்பது கலசத்துடன் ஏழுநிலையுடன் இராஜகோபுரம் அமைந்துள்ளது. வெளிப்பிரகாரத்தில் நுழைவாயிலில் கிழக்கு திசையில் பழைய அரசமரத்தடியில் பத்து கரங்களுடன் கம்பீரமாகப் பஞ்சமுக விநாயகர் வலஞ்சுழி திருமேனியாக வீற்றிருக்கிறார். இரண்டு பக்கங்களிலும் ராகு - கேது விக்ரகங்கள் காட்சி தருகின்றன. இங்கு நாக தோஷ நிவர்த்திக்குப் பிரார்த்தனை செய்கின்றனர்.

கர்பகிரஹத்தில் கோனியம்மன் வடக்கு நோக்கி, எட்டு கரங்களில் சூலம், உடுக்கை, வாள், சங்கம், கபாலம், அக்னி, சக்கரம், மணி ஏந்தி வலது காலை மடித்து பீடத்தின்மீது வைத்துக்கொண்டு, இடது காலைக் கீழே தொங்கவிட்டபடி காட்சியளிக்கிறார். சிவனைப் போல, இடது காதில் தோடும், வலது காதில் குண்டலமும் அணிந்து, சிவசக்தி ஸ்வரூபமாக அமர்ந்திருக்கின்றார். அம்மன் சந்நிதிக்கு எதிரே சிம்ம வாஹனம் உள்ளது. முன்மண்டபத்தில் சரஸ்வதி, லட்சுமி துர்க்கை ஆகிய தேவியர் உள்ளனர். திருக்கோயில் சுற்றுப்பிரகாரத்தில் சாந்த விநாயகர் சந்நிதியும், ஸ்ரீ வள்ளி,தெய்வானை சமேத

சுப்பிரமணியர் சந்நிதியும் அமைந்துள்ளது. அம்மனுக்கு வலப்புறத்தில் நவகிரக சந்நிதியில் தம்பதி சமேதராக நவக்கிரகங்கள் அருள்பாலிக்கிறார்கள். இங்கு நவக்கிரக நாயகர்கள் தம்பதி சமேதராக வீற்றிருப்பது தனிச்சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. இந்த நவக்கிரகங்களை வணங்குவதால், கிரக தோஷங்கள் அனைத்தும் விலகும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாகும். கர்பகிரஹத்திற்கு பின்பகுதியில் ஆதி கோனியம்மன், துர்க்கை, சப்தமாதர்கள், வீரபத்திரர், கருப்பர், முனீஸ்வரர் உள்ளனர்.

## ஸ்தல பெருமை:

இன்றும் இப்பகுதில் வாழும் மக்கள், கோனியம்மனிடம் உத்தரவு கேட்ட பின்பே அனைத்து சுபகாரியத்தையும் செய்வர். இவர்கள் கோனியம்மனை, ”கோவையின் அரசி” எனவும், ”கோவை மாநகர காவல் தெய்வம்” எனவும் அன்புடன் அழைக்கின்றனர்.

இத்தலத்தில் காமிக ஆகம வழிபாட்டு முறையில் பூஜைகள் நடைபெறுகின்றன. நாகலிங்க மரம், மகிழ மரம், அரச மரம் இக்கோயிலின் ஸ்தல விருட்சம் ஆகும். இந்த கோயிலில் காலையில் மட்டும் அம்மனுக்கு அபிஷேகம் செய்யப்படுகிறது. இந்த அபிஷேகப் புனித நீர் நோய்தீர்க்கும் அருமருந்தாக விளங்குகிறது. இங்கு சத்ரு சம்ஹாரத்துக்காகச் சிறப்புப் பூஜைகள் செய்யப்படுகின்றன, இத்தலம் சிறந்த பிரார்த்தனைத் தலமாகவும் விளங்குகிறது. குழந்தைப் பேறு, வேலை, திருமணம், தொழில் முன்னேற்றம் போன்றவற்றிற்காக நேர்ந்து கொள்ளப்படும் பிரார்த்தனைகள் உடனடியாக நிறைவேறுவதாகப் பக்தர்கள் கூறுகின்றனர்.

## விசேஷ பூஜை:

இந்த கோயிலில் அமாவாசை, பௌர்ணமி நாட்களில் விசேஷ பூஜைகள் நடைபெறுகின்றன. தமிழ் மாதப்பிறப்பு, ஆடி வெள்ளி, தை வெள்ளி, நவராத்திரி, திருக்கார்த்திகை, தனுர்மாத பூஜை, தைப்பொங்கல், தீபாவளி போன்ற நாட்களிலும் சிறப்புப் பூஜைகள் செய்யப்படுகின்றது.

## அக்னி திருமணம்:

இத்தலத்தில் சிவபெருமானுக்குத் தனிச் சந்நிதி இல்லாததால், அம்மன் சந்நிதி முன் யாகம் வளர்த்து, சிவபெருமான் அக்னி ரூபத்தில் அம்மனை மணந்து கொண்டதாக ஐதீகம். மாசி மாதத்தில், திருக்கோயில் முன் அக்னிக் குண்டம் அமைக்கப்பட்டு, அதில் ஒளிரும் அக்னியையே சிவபெருமானாகப் பாவித்து, அருகில் வைக்கப்படும் தீர்த்த கலசத்தின் மேல் திருமாங்கல்யம் அணிவித்து பூஜை செய்யப்பட்டு பின்னர் அது அம்மனுக்கு அணிவிக்கப்படுகிறது. இதற்கு, அக்னி திருமணம் என்று பெயர்.

அக்னி திருமணத்திற்கு மறுநாள் தேரோட்டம் நடைபெறும்.

## பரிகாரங்கள் :

இந்த கோயில் உள்ள கோனியம்மனை வேண்டிக்கொண்டால் திருமணத்தடை நீங்கும், குழந்தைப்பேறு கிட்டும், நோய்கள் நீங்கும், தொழில் விருத்தி அடையும் என்பது நம்பிக்கை. கோனியம்மனை வேண்டி தங்கள் பெண், பிள்ளைகளுக்கு வரன் கிடைக்கப்பெற்றவர்கள் கோயிலிலேயே நிச்சயதார்த்த நிகழ்ச்சியை நடத்துகின்றனர். மணமக்கள் வீட்டார் இருவரும் ஒரு கூடையில் உப்பை நிறைத்து, அதன் மேலே மஞ்சள், தேங்காய், வெற்றிலை, பாக்கு, பூ வைக்கின்றனர். கோனியம்மன் சாட்சியாகத் திருமணத்தை உறுதி செய்கின்றனர்.நோய் நீங்கவும், மாங்கல்ய பாக்கியத்திற்கும் வேண்டிக்கொள்கின்றனர்.

## திருமாங்கல்ய காணிக்கை :

திருமணத்தடை நீங்க கன்னியர், அம்மனிடம் மனம் உருக வேண்டிக் கொள்கின்றனர். தங்கள் வேண்டுதல் நிறைவேறியதும் ஆலயம் வந்து அன்னைக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து, திருமாங்கல்யத்தை காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

## மாவிளக்கு போடுதல்:

அம்மை, தீராத நோய்கள், பிற கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்டால் இக்கோயிலுக்கு வந்து கோனியம்மனுக்கு மாவிளக்கு இட்டு, பொங்கலிட்டுப் படைத்தால் அன்னை அந்த நோய்களில் இருந்து நிச்சயம் காப்பாற்றுவார் என்பது ஐதீகம்.

## திருவிழாக்கள்:

இந்த கோயிலில் ஆடி மாதம் முழுவதும், தினந்தோறும் ஊஞ்சல் உற்சவம் நடைபெறுகின்றது. இது போன்று வேறெங்கும் நடப்பதில்லை.

மாசி மாதத்தில் பதினான்கு நாட்கள் திருவிழா சிறப்பான முறையில் கொண்டாடப்படுகின்றது.

நவராத்திரியின் போது ஒன்பது நாட்களும் அம்மனுக்கு விதம் விதமாக அலங்கரித்துச் சிறப்புப் பூஜைகள் நடைபெறும்.



## தேர்த் திருவிழா:

கோவை மாநகரில் நடைபெறும் திருவிழாக்களில் கோனியம்மன் கோயில் தேர்த் திருவிழா குறிப்பிடத்தக்கது. கோவை நகரில் இந்த கோயிலில் மட்டுமே தேர்த்திருவிழா நடத்தப்படுகிறது. மாசி மாதம் பதினான்கு நாட்கள் தேர்த்திருவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தெப்பம், தீர்த்தவாரி, வசந்த உற்சவம் என்று விமரிசையாக விழா நடக்கிறது. இதையொட்டி பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் வருவார்கள். விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேர்த்திருவிழாவில் லட்சக் கணக்கான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுப்பார்கள். அம்மன் தேரில் பவனி வருவது கண்கொள்ளாக் காட்சி.

இதில் சுற்று வட்டார மக்கள் கலந்து கொண்டு அம்மனின் அருள் பெற்றுச் செல்கின்றனர். மாசி மாதத்தில் தேர்த்திருவிழா காணும் கோனியம்மன், பக்தர்களின் வாழ்க்கையைக் கோணலின்றிக் காப்பாற்றிடுவாள் என்பது ஐதீகம்.

## கோயில் திறந்திருக்கும் நேரம்:

இந்தக் கோவில் தினமும் காலை 6.00 மணி முதல் பகல் 12.30 மணி வரையிலும், மாலை 4.30 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் திறந்திருக்கும்.

## கோயிலுக்குச் செல்லும் வழி:

இக்கோயில் கோவை மத்திய பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 2கி.மீ தொலைவிலும், கோவை காந்திபுரம் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 6.2 கிலோமீட்டர் தொலைவிலும், கோயம்புத்தூர் சர்வதேச விமான நிலையத்திலிருந்து சுமார் 12 கிலோமீட்டர் தொலைவிலும், கோவை ரயில் நிலையத்திலிருந்து நடந்து செல்லும் தூரத்திலும் அமைந்துள்ளது.

நமது அனைத்துக் கோரிக்கைகளையும் நிறைவேற்றிடும் கோவை கோனியம்மன் கோயில் சென்று தரிசிப்போம்...

கோவையின் காவல் தெய்வம்

கொங்கு மண்டலத்தில் தன்னிகரற்ற தெய்வம்

ஓம் சக்தி தாயே போற்றி

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகி

கோனியம்மன் தாயே போற்றி

சக்தி வழிபாடு மேன்மை செய்யும் நம் வாழ்வை

ஓம் சக்தி.. பராசக்தி...

## அரிய ஆன்மீகத் தகவல்

# பகவானின் கொலுசு





ரா. பன்னீர்செல்வம்

சென்னையில் இருந்து பெங்களூர் செல்லும் நெடுஞ்சாலையில் காஞ்சிபுரத்தை அடுத்துள்ள அழகிய கிராமம் தான் "தாமல்", இந்த தலத்தில் குடி கொண்டுள்ள இறைவன் தாமோதரப் பெருமாள்! இந்தப் பெயரில் பகவான் உறைகின்ற ஸ்தலங்கள் வேறு எங்கும் இருப்பதாக தெரியவில்லை.

தாமம் என்றால் கயிறு; உதரம் என்றால் வயிறு! கோகுலத்தில் வளர்ந்த கிருஷ்ண பரமாத்மா, சிறு பிரயாரத்தில் மிகவும் துருதுருவென இருந்தாராம். அவரை கட்டிப்போட நினைத்த அன்னை யசோதா தாம்புக் கயிறு எடுத்து அதன் ஒரு முனையை உரலில் கட்டி மறு முனையை பாலகிருஷ்ணனின் வயிற்றில் கட்டி, அவர் எங்கும் போகாமல் தடுத்தாராம். இதுதான் தாமோதரன் என பெயர் வரக் காரணம்.

இன்றும் தாமல் ஆலயத்தில் உள்ள மூலவர் சிலையின் வயிற்றில் கயிறு படிந்த தடம் இருப்பதை காணமுடியும்.

இங்குள்ள தாமோதர பெருமாளிடம் குழந்தை இல்லாத தம்பதியர் நேர்ந்து கொண்டால் குழந்தை பிறப்பது உறுதி! இப்படி வேண்டுதல் நிறைவேறியவர்கள் தங்கள் நேர்த்திக் கடனாக கொலுசு கொண்டு வந்து காணிக்கையாக்குகின்றனர். அப்படி காணிக்கையாய் வந்த நூற்றுக்கணக்கான கொலுசுகள் பகவான் கால்களுக்கு அழகு சேர்ப்பது இந்த தலத்தில் நித்தமும் நடக்கும் அதிசயம்!

# ஆன்மீக கேள்விகளும் அர்த்தமுள்ள பதில்களும்...



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

## உபதேசம் புரிவதில் மூன்று வகை உண்டாமே? அவை எவை?

வேதம் போன்ற நூல்களில் சொல்லப்படும் வழிமுறைகள் - “பிரபு ஸம்மிதம்“ எனும் அதிகாரிகள் கட்டளையிடுவதைப் போன்றது. அது ஒரு வகை.

ஞானிகள், ரிஷிகளைப் போன்றோர் கூறும் அறிவுரைகள் ஒரு நண்பன் கூறுவது போன்று அமைய அதனை “ஸுஹ்ருத்ஸம்மிதம்“ என்க, அது இரண்டாம் வகையாகும்.

சில நூல்களில் கூறப்படும் நன்னெறிகள், பேச்சு வழக்கில் ஒரு மனைவி தன் கணவனுக்கு சுட்டிக்காட்டும் உண்மைகள் போன்றிருக்க அது ‘காந்தா ஸம்மிதம்“ ஆக, அதுவே மூன்றாம் வகையைச் சார்கிறது.

இவ்வளவு எளிமைப்படுத்தி உபதேச முறையை அருளியவர் மகான் காஞ்சிப் பெரியவாளே!

## வால்மீகி முனிவரின் தந்தை யார்?

வால்மீகி தான் படைத்த ராமாயணத்திலே, “நான் பிரம்ம புத்திரராகிய ப்ரதேசஸின் புதல்வன்; கடும் தவமும் புரிந்தவன்” என ராமபிரான் முன்னிலையிலேயே கூறுகிறார்.

## அன்னை காளிகாம்பாளை வேண்ட என்ன கிடைக்கும்?

ஆண்டவனிடம் எதையும் கேட்டுப் பெறுதல் அவ்வளவு உசிதமல்ல!

ஆனால் அன்னை காளிகாம்பாளே தன் பக்தர்களுக்கு இவற்றை அருள்வாள் என்பது கவிமாமணி மயனின் இக்கவிதையில் அடங்கும்.

“பவமாயை தீர்க்கும் நின்னைப் பரவசமாய் பணிவோர்,

பாபவினை தீர்த்துட்ச செயல் பலளிக்கும் தாயே!

புவனமதில் புகழ், செல்வம் போன்றும் நலம் தருவாய்!

பொற்கரத்தால், திருவிழியால், வரமருளும் திருவே!

நவநிதியும், திருமணமும் நல்ல மகப்பேறும்

நன்மை யாவும் அருளுகின்ற, சர்வசக்தி நீயே

அவனி புகழ்ந் தேத்துகின்ற அன்னை சக்தி தாயே!

அருள் பொழியும் காளிகாம்பாள் அடி மலர்கள் பணிவோம்”

## படுக்கையிலிருந்து காலையில் விழித்தவுடன் பார்க்கத்தக்கது எவை?

தாமரைப்பூ, தங்கம், தனது வலது கை, கன்றுடன் பசு இதில் ஏதேனும் ஒன்று, கண்ணாடி, தன் மனைவி இவைகளை காலையில் கண் விழித்தவுடன் பார்த்தால் நற்பலன்கள் கிட்டும் என்பது ஐதீகம்.

## “திருஎல்லை“ என்றால் என்ன?

ஒரு தலத்துக்கு நாம் செல்கையில், எங்கிருந்து அவ்வூர் இராஜகோபுரம் தெரிகிறதோ, அப்பகுதியே “திருஎல்லை“ என்பது.

“திரு எல்லை பணிந்தேத்தி“ என்று மகிழ்வார் பெரிய புராணம் தந்த சேக்கிழார் பிரான்.

இராய கோபுரம் என்பது வழக்கில் இராஜகோபுரமாகி விட்டது என்பார்கள்.

## “வீர முஷ்டி“ என யாரைக் குறிப்பிடுவார்கள்?

ஆலயங்களுக்கு ஆபத்து வருகையில் அதனை தடுக்கும் ஆயுதமாக விளங்குபவர்களே இந்த வீரமுஷ்டிகள்.

“உண்பான், தின்பான் சிவப்பிரம்மாணன் குத்துக்கு நிற்பான் வீரமுஷ்டி” என்ற வேடிக்கையான பழமொழிகூட உள்ளது. வீரமுஷ்டிக்கு வயிராவி என்ற பெயருமுண்டு.

## அது என்ன ‘திரிபுண்டரம்?”

விபூதியை எடுத்து நீரில் குழைத்து, அது நிலத்தில் சிந்தாதவாறு அண்ணாந்து கொண்டு “சிவசிவ” என உச்சரித்தபடி வலக்கை நடுவிரல் மூன்றினால் தரிக்க வேண்டும்; அப்படி விபூதியை நெற்றியில் வளையாமல் இடையறாமல் ஒன்றை ஒன்று பற்றாதவாறு, ஓரங்குல இடைவெளிவிட்டு அணிதலே “திரிபுண்டரம்“ ஆகும்.

விபூதி தரிக்கையில் வடக்கு முகமாகவோ அல்லது கிழக்கு முகமாகவோ இருந்து செய்ய வேண்டும்.

## நெய் தீபம் ஏற்றுவது விசேடமானதா?

மரணத்தருவாயில் உடலிலிருந்து பிரியும் உயிரைக்கூட சில நிமிடங்கள் நிறுத்தி வைக்கும் சக்தி படைத்தது, அத்தருணத்தில் ஆலயத்தில் ஏற்றப்படும் நெய் தீபத்தால்.

நோயின் கடுமை குறையவும், திருக்கோயிலில் நெய் தீபமேற்றி வழிபடல் நன்று.

## எண்ணெய் தேய்த்துக் குளிக்க கூட நாள் கிழமை உண்டா?

உண்டு என்கிறது. சாஸ்திரம். சனிக்கிழமையில் எண்ணெய் குளியல் மேற்கொள்ள அது உடல் ஆரோக்கியம் தரும்.

பெண்கள் செவ்வாய், வெள்ளி, தினங்களிலும், ஆண்கள் திங்கள், புதன், சனிக்கிழமைகளில் எண்ணெய் தேய்த்து குளிக்கலாம்.

தன் பிறந்தநாள், அருணோதய விடியற்காலை (இதற்கு “தீபாவளி“ விலக்கு) மாலை நேரம், திருமண நாள், உபவாச நாள், முடிவெட்டிக் கொண்டநாள் ஆகிய தினங்களில் எண்ணெய் ஸ்நானம் செய்யக் கூடாத நாட்களாகும்.

துக்கத்திற்காக மயானம் சென்று திரும்பியவர்கள் தங்கள் தலையில் எண்ணெய் விட்டு குளித்தல் தோஷம் தரக்கூடியது.

## சாதுக்கள் தரிசனத்தால் என்ன பயன்?

அநேகம். சில இவை -

மகான் தரிசனம் பெறல், அவர் கூட பேசுவது, உடன் யாத்திரை செல்லல் ஆகியவை புண்ணியங்களை அளிக்க வல்லது.

அஞ்ஞானத்தையும், இதுவரை செய்த பாவங்களை அழிக்கக் கூடிய தன்மையை சாதுக்கள் தரிசனம் அளிக்கும்.

## சக்தி பீடங்கள் 51 எப்படி உருவாயின?

தக்ஷன் தான் நடத்திய வேள்விக்கு தன் மாப்பிள்ளை சிவபிரானை அழைக்காது அவமானப்படுத்தினான். தன் கணவன் சிவன் சொல்லைத் தட்டிவிட்டு வரவேற்பு இல்லாவிடினும், பார்வதி தேவி அந்த யாகத்துக்குச் சென்றாள். அங்கு தந்தையின் கேலிக்கும், கிண்டலுக்கும் ஆளான தக்ஷன் மகள் அந்த யாக குண்டத்திலேயே குதித்து தன்னுயிரை மாய்த்துக் கொண்டாள்.

அதனால் ஆவேசங் கொண்ட பரமேசுவரன், தன் அம்சமாய் வீரபத்திரரை உருவாக்கி தக்ஷனை எதிர்க்க அனுப்பினார். அங்கே சென்ற வீரபத்திரர் தக்ஷனின் தலையைக் கொய்து, யாக குண்டத்தையும் அழித்து விட்டார்.

சிவபிரான் அனைத்து தேவர்களின் வேண்டுகோளை ஏற்று, சம்பந்தப்பட்ட யாக சாலைக்குச் சென்று

தக்ஷனை உயிர்ப்பிக்க, அவன் ஆட்டுத் தலைப் பெற்று, இறைவனால் மன்னிக்கப்பட்டான்.

யாகக் குண்டத்திலிருந்து தன் துணைவி உமாமகேசுவரியின் சடலத்தை சுமந்து கொண்டு கைலாய நாதன் அதிக துக்கம் பூண்டு பித்தனைப் போல உலகெங்கும் அலைந்தார். மகாவிஷ்ணு தனது அம்பு விட்டு இறந்து போன பார்வதி தேவியின் சடலத்தை பல துண்டுகளாக்கினார். அவை, பாரதம் முழுவதும் சிதறி 51 இடங்களில் விழுந்தன. அந்த துண்டுகளே "சக்தி பீடங்கள்" என வழங்கப்பட்டன. அங்கே சக்தி ஆலயங்கள் பின்னால் தோன்றின.

## வள்ளிமலைத் திருப்புகழ் சுவாமிகள் பற்றி...?

சுவாமிகள், கி.பி.1870ஆம் ஆண்டு பிறந்து, வளர்ந்து, மைசூர் சமஸ்தானத்தில் மடைத் தொழில் புரிய, அங்கு வள்ளிமலை சுவாமிகளுக்கு குன்ம நோய் ஏற்பட்டது.

தீவிர முருக பக்தரான அவர் பழனித் தலம் சென்று தினமும், அந்த முருகனின் அபிஷேகப் பாலை பல நாட்கள் அருந்தி குணம் பெற்றார். அருணகிரிநாதரை குருவாக ஏற்ற அவரிடம் பலபேர் திருப்புகழ் பாட்டு கேட்டு ஏற்றம் பெற்றனர்.

சுவாமிகள் தான் வாழ்ந்த வள்ளிமலைக் குகையிலேயே 1950ஆம் ஆண்டு சமாதியானார்.

## பாவ, புண்ணியங்கள் எதனால் குறையும்?

வாயை விட்டு சொல்வதால் செய்த பாவங்களும், புண்ணியங்களும் குறைந்து போய்விடும்.

எனவே செய்த புண்ணியங்களை நாம் பிறருக்கு சொல்லாதிருத்தலே நன்று. மகான் ஸ்ரீ புட்டபர்த்தி பாபா அவர்கள் இதனை அடிக்கடி வலியுறுத்திச் சொல்வார்.

## ஸ்ரீ முருடேஸ்வரர் ஆலயம் எங்குள்ளது? அதன் சிறப்பென்ன?

மங்களூர் - கோவா நெடுஞ்சாலையில் உடுப்பியைத் தாண்டி கொஞ்ச தூரம் சென்ற பிறகு அன்னை மூகாம்பிகை ஆலயத்திற்கு செல்லும் வலப்புறம் பாதை பிரிவதற்கு முன்னால் கடல் ஓரத்தில் அழகு காட்சி தரும் முருகடேசுவரர் ஆலயம் தென்படும்.

ஆலயத்தின் மூன்று பக்கமும், அரபிக்கடல் சூழ்ந்திருக்க, ஒரு சிறிய (கந்தகிரி) மலையில் முருகடேசுவரர் குடி கொண்டுள்ளார்.

ஆலயத்தின் பின்னால் பிரம்மாண்டமாக 123 அடி உயரத்தில் சிவபிரான் அமர்ந்த நிலையில் (கான்கிரீட்டில் உருவானது) தரிசனம் தர பரவசம் சூழும் நமக்கு. உலகத்திலேயே பெரிய சிவ உரு இதுவாகத்தான் இருக்கும் என நம்பப்படுகிறது. தொழிலதிபர் திரு.ஆர்.என்.ஷெட்டி என்பவரால் இச்சிலை ஒரு கோடியில் உருவாக, அதை தன் செலவில் கட்டினார்.

தவிர 249 அடி உயரம் கொண்ட ராஜ கோபுரமும் நம்மை அசத்தும்.

கருவறையின் உள்ளே தரையோடு தரையாக அமிழ்ந்துள்ள மாதிரி ஆவுடையாரில் ஆத்ம லிங்கமாக சிவன் குடியேறியுள்ளார்.

சிவராத்திரி தினத்தில் வில்வ தளத்தால் இந்த சிவனை அர்ச்சிப்பவர்களுக்கு மரண பயமின்றி சுவர்க்கம் கிட்டும் என நம்பப்படுகிறது.

சிவபெருமானிடமிருந்து தவம் பெற்ற ஆத்ம லிங்கத்தை இராவணன் பெற்று திரும்புகையில் ஆட்சி செய்த தேவர்கள், அதனை தந்திரமாக பற்றி ஸ்ரீகோகர்ணத்தில் பிரதிஷ்டை செய்து விட்டனர். இதனை பின்னால் அறிந்த இலங்கேசுவரன் அந்த லிங்கத்தைப் போர்த்தியிருந்த துணியை வெறுப்புடன் வீசி எறிய அது கந்தகிரி மீது விழுந்து ஆத்மலிங்கமாக மாறிவிட்டது. அத்துணியின் பெயர் மிருதா என்பதால், அந்த இறைவன் படிப்படியாய் முருடேசுவரர் ஆகிவிட்டார்.

## கௌரவர்களில் பாண்டவர்களுக்காக தூது சென்ற கிருஷ்ணர் வசதியற்ற விதுரன் இல்லத்தில் ஏன் தங்கினார்?

தூதாக கிருஷ்ணர் அஸ்தினாபுரத்திற்கு வந்த சமயம், அனைவரும் அவரை அன்போடு வரவேற்றனர். வந்திருந்த இளைஞர்களும், பெரியவர்களும், சிற்றரசர்களும், செல்வந்தர்களும், வணிகர்களும், “ஐயனே! தாங்கள் எங்களுடைய மாளிகையில் தங்க வேண்டும்” எனத் தனித்தனியே போட்டி போட்டுக் கொண்டு அழைத்தனர். கண்ணன் இந்த வேண்டுகோளை ஏற்காமல் வீதியைக் கடந்து வருகையில் தென்பட்ட சிறிய இல்லத்தைக் காட்டி, “இது யாருடையது?“ என அருகிலிருந்தவர்களைக் கேட்க, அங்குள்ள விதுரர் முன்வந்து, கிருஷ்ணரிடம் “பெருமானே! இது தங்கள் திருமாளிகை” என அன்புடனும், அடக்கத்துடனும் பதில் தந்தார். உடனே அந்த இல்லத்திற்குள் அவர் விதூரரின் தோளை அணைத்துக் கொண்டு உட்புகுந்து விட்டார். ‘யான்’ எனது என்ற விதுரரின் அகம்பாவமற்ற “பா“வம் அவருக்குப் பிடித்ததால்!

விதுரர் வழங்கிய அகம்பாவமற்ற நீதியின்சாரமே “விதுரநீதி“ நூலாகும்.

## விளக்கு ஏற்றுவதால் உண்டாகும் பலன், பயன்படுத்தப்படும் திரி வகைகளால் மாறுபடுமா?

ஒவ்வொரு வகை திரியும், வெவ்வேறு பலனை அளிக்கக் கூடியது.

மங்களம் நிலைக்க - பஞ்சு திரி

முன்வினைப் பயன் நீங்க செல்வம் நிரந்தரமாக - தாமரைத் தண்டு திரி

மக்கட் செல்வத்துக்கு - வாழைத்தண்டு திரி

நிறைந்த செல்வத்துக்கு - வெள்ளை எருக்கன் பட்டைத் திரி

பேய்த் தொல்லை ஒழிய - புதுமஞ்சள் துணி திரி

திருமணத் தடை அகல செய்வினை தோஷம் நீங்க - புது சிவப்பு நிறத்துணி திரி

மலட்டுத் தன்மை மறைய தரித்திரம் நீங்கி சுபிட்சம் கிட்ட - புது வெள்ளைத்துணி திரி

## சண்டேசுவரர் கொண்ட சிறப்பு என்ன?

மனிதனாகப் பிறந்து, தன் தீவிர சிவ வழிபாட்டால் தெய்வத்தன்மை பெற்றவர் சண்டேசுவரர்.

சண்டேசுவரரின் இயற்பெயர் விசார சருமன். இவர் கொண்ட தீவிர சிவபக்தியால் மனம் குளிர்ந்த கயிலைநாதன், “சண்டீசப்பதம்” என்ற பெரிய பதவியை அவருக்குக் கொடுத்து கௌவரப்படுத்தினார்.

ஈசுவரனின் நான்காவது புத்திரனுக்கு உரியதான தகுதி கிடைத்ததால் இவருக்கு “சேய்ஞலூர் பிள்ளையார்“ என்ற பிறப்பு பட்டம் உண்டு.

தொண்டர் நாயகம் என சிறப்பு கொண்ட விசார சருமன், இறைவனுக்கு இணையான ஈசுவர பட்டம் கிடைத்தது போற்றப்படுவது பெருமைப்படக்கூடியதே!

வழக்கமாக சிவாலயங்களில் மூலஸ்தானத்தின் வடக்கு முதல் ஆவரணத்தில் தென் திசை நோக்கியுள்ள சின்ன சன்னிதியில் இவரது இருப்பிடம் இருக்கும். சுகாசன கோலம் இவர் சிறப்பு.

சிவாலயத்துக்குரிய சண்டேசுவரர் “தொனிச்சண்டரெனவும், அம்மன் கோயிலுக்குரியவர் சக்தி சண்டேசுவரி“ என்றும், விநாயகர் கோவிலுக்குரியவர் “கும்போதர சண்டேசுவரர்“, “கும்பச்சண்டர்“ என்றும், முருகன் ஆலயத்துக்குரியவர் ‘சுமத்திர சண்டேசுவரர்’ என்றும், சூரிய பகவான் கோவிலுக்குரியவர் “தேஜஸ் சண்டேசுவரர்“ எனவும் ஆகம முறைப்படி கொண்டாடப்படுவார்.

“சண்டேசரை எவ்விடத்தும் எப்போதும் பூஜிக்க!” என்பது ஆன்மீகப் பெரியோர்களின் வாக்கு.

அரிய ஆன்மீகத் தகவல்

# தென் திருப்பதி



## திருமலை வையாவூர்

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகலிருந்து உத்திரமேரூர் செல்லும் சாலையில் அமைந்துள்ள தலம் தான் "திருமலை- வையாவூர்". இத்தலத்தை தென் திருப்பதி என்று கொண்டாடுவதோடு திருப்பதிக்கு செலுத்தவேண்டிய நேர்த்திக்கடன்களை பக்தர்கள் இத்தலத்தில் செலுத்துவதும் வழக்கம்!

இந்தத் தலத்தில் உள்ள மலை மீது அருள் புரிபவர் தான் பிரசன்ன வெங்கடேச பெருமாள்! திருப்பதி ஆலயத்தை உருவாக்கிய மன்னன் தொண்டைமான் இப்பகுதிக்கு வந்தபோது, திருப்பதியில் காணும் அதே தரிசனம் பெற வேண்டுமென்று பெருமாளை வேண்ட, மன்னனுக்கு அருள் புரிவதற்காக சீனிவாச பெருமாள் இங்கு வந்து தரிசனம் தந்தாராம்.

மலையில், கோவிலுக்கு வெளியே பெருமாள் வந்த ரதத்தின் தடம் பதிந்துள்ளது இங்குள்ள அர்ச்சகர் பக்தர்களுக்கு காட்டுகிறார். இவ்வாலயம் அமைந்த பிறகு, அனுமன் சஞ்சீவி மலையோடு போர்க்களத்திற்கு செல்லும்போது, இந்த மலையில் இருக்கும் பெருமாளை வணங்க முற்பட்டு, தன் வலது கையில் இருந்த சஞ்சீவி மலையைக் கீழே வைக்காமல் அப்படியே இடது கைக்கு மாற்றி, தன் வலது கையால் பெருமாளை கும்பிட்டாராம். இதனாலேயே இத்தலம் திருமலை வையாவூர் என்றானது! திருமலை கை வைக்காமல் வணங்கியதால் இப்பெயர் விளங்குவதாக அறியப்படுகிறது. மேலும் திருப்பதியை போன்றே இந்த தலமும் ஆதிவராக ஷேத்திரமாகும்!



ரா. பன்னீர்செல்வம்

இங்கும் லட்சுமி வராகர் சன்னதி கொண்டு அருள்புரிகிறார்.

# உங்கள் படைப்புகள் எங்கள் இதழில் இடம் பெற வேண்டுமா?

இனிய சத்வித்யா வாசகர்களே! நமது மாத இதழில் உங்கள் ஆன்மீகக் கட்டுரைகளும் கருத்துகளும் இடம் பெற வேண்டுமா? உங்களுடைய அரிய ஆன்மீக படைப்புகளை எங்களுக்கு அனுப்புங்கள்! தகுதியானவை ஏற்றுக்கொள்ளப்படும்

கட்டுரைகள் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

Astroved.com Pvt.Ltd

**சத்வித்யா ஆன்மீக மாத இதழ்**

**பிரின்ஸ் இன்ஃபோ பார்க், பிளாட் எண்.81-பி,**
**ஏ-பிளாக், 4வது தளம், 2வது பிரதான சாலை,**
**அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை 600058.**

Email id:

magazine@astroved.com



# வேங்கடவன் வரலாறு





திரு. கிருஷ்ணன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

வெங்கடேஸ்வரா என்றால் "வேங்கடத்தின் இறைவன்" என்று பொருள்

இந்த வார்த்தை வெங்கடா (ஆந்திர பிரதேசத்தில் உள்ள ஒரு மலையின் பெயர்) மற்றும் ஈஸ்வரா ("இறைவன்") ஆகிய வார்த்தைகளின் கலவையாகும். புராணங்களின்படி, "வெங்கடா" என்ற சொல்லுக்கு "பாவங்களை அழிப்பவர்" என்று பொருள்,

"வெங்கடா" என்பது "வெண்" (ஒதுங்குகிறது) மற்றும் "கடா" (தொல்லைகள்) ஆகிய இரண்டு சொற்களின் கலவையாகும் என்றும் கூறப்படுகிறது. வேங்கடா என்று கூறப்படுவது "தொல்லைகளை விலக்குபவர்" அல்லது "பிரச்சனைகளை நீக்குபவர்"

## ஸ்ரீனிவாச பெருமாள் அவதாரம் ஏன் தசாவதாரத்தில் இடம் பெறவில்லை

ஆந்திரப் பிரதேசத்தின் திருப்பதியில் உள்ள திருமலை வெங்கடேஸ்வரா கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான பக்தர்கள் ஏராளமான செல்வங்களை நன்கொடையாக வழங்குகிறார்கள். மகாவிஷ்ணுவின் இந்த அவதாரத்திற்குப் பின்னால் ஒரு பெரிய புராணக்கதை உள்ளது. ஒருமுறை, ஒரு சடங்கு நடத்தப்பட இருந்தது. யாகத்திற்கான முனிவர்களும், குருமார்களும் எந்தக் கடவுளுக்கு வேள்வியின் பலன்களை அர்ப்பணிப்பது என்ற குழப்பத்தில் இருந்தனர். முனிவர்கள் சப்தரிஷிகளில் ஒருவரான பிருகு முனிவரை ஒரு தீர்வைப் பரிந்துரைக்க அழைத்தனர். சிறந்த கடவுளை சோதிக்க, பிருகு ஒரு சோதனை செய்தார்.

பிருகு முனிவரின் பாதத்தில் ஒரு கண் உண்டு. அதன் சக்தி மிகவும் விஷேஷமானது அதனால் அவருக்கு ஆணவம் அதிகரித்தது. மாயவன் மாதவன் அதனை அறிந்து தன் லீலயை தொடர ஆரம்பிதார்.

அவர் முதலில் தேவர்களின் அரசனான இந்திரனிடம் சென்றார். இந்திரன் பிருகுவின் இருப்பை ஒப்புக் கொள்ளவில்லை, ஆனால் சொர்க்கத்தில் அப்சரஸ்களின் நடனத்தை ரசிப்பதில் மும்முரமாக இருந்தான். பிருகு இந்திரனைப் பிரபஞ்சம் முழுவதும் அகங்கார ஆத்மா என்று மட்டுமே சபித்தார். அடுத்து பிரம்மாவை தரிசித்தார். பிரம்மா தனது நான்கு தலைகளுடன் வேதங்களை உச்சரிப்பதிலும், தியானம் செய்வதிலும், உலகை உருவாக்குவதிலும், தனது மனைவி சரஸ்வதியுடன் நேரத்தை செலவிடுவதிலும் மும்முரமாக இருந்தார். அடுத்து, சிவபெருமானை தரிசித்தார். சிவன் தன் துணைவி பார்வதியுடன் தன் காலடியில் ருத்ராதியானத்தில் மும்முரமாக இருந்தார். பிருகு சிவனை உருவமற்ற லிங்கத்தில் மட்டுமே வழிபடுவேன் என்று சபித்தார். இறுதியில், பிருகு விஷ்ணுவிடம் சென்றார். விஷ்ணு ஆதிசேஷனின் மீதும், லட்சுமி அவன் காலடியிலும் உறங்கிக் கொண்டிருந்தாள். முனிவர் வந்ததை அறிந்த



பெருமாள் அதனை அறியாதவன் போல் சாயனத்கில் இருந்த நிலையில் பிருகு முனிவர் விஷ்ணுவின் மார்பில் எட்டி உதைத்தார். பெருமாள் உடனே முனிவருக்கு பணிவிடை செய்ய தொடங்கினார். பிருகு முனிவர் மகிழ்ச்சியடைந்து, விஷ்ணுவுக்கு வேள்வியின் பலன்களை அளிக்கும் படி முனிவர்களுக்கு உத்தரவிட்டார். இதற்கிடையில் முனிவருக்கு பணிவிடை செய்யும் தருவாயில் அவரின் காலில் உள்ள கன்னை இறைவன் பறித்தார். தனது தவறை உணர்ந்த முனிவர் இறைவனிடம் மன்னிப்பு வேண்டி விடை பெற்று சென்றார். முனிவரின் அகந்தை அழிந்தது.

ஸ்ரீ என்றழைக்கப்படும் லக்ஷ்மி தேவி, தான் வசித்த விஷ்ணுவின் மார்பில் பிருகு முனிவர் தன்னை மறைமுகமாக அவமதித்ததாக உணர்ந்ததால், விஷ்ணுவுடன் சண்டையிட்டார். பிருகுவிடம் மன்னிப்பு கேட்ட விஷ்ணுவின் செயலால் மிகவும் ஏமாற்றமடைந்த லட்சுமி தேவி வைகுண்டத்தை விட்டு வெளியேறினாள்.

லக்ஷ்மி தாயார் வைகுண்டதை விட்டு சென்றதும் அந்த இடம் ஒளி இழந்தது.

விஷ்ணு பகவான் விரைவில் லட்சுமி தேவியைத் தேடி பூமிக்கு வந்தார். ஒரு சிறுவனைப் போல மாறுவேடத்தில் பூமியில் வந்து குடியேறினார் பெருமாள். ஆனால் அவர் லக்ஷ்மியை கண்டுபிடிக்கத் தவறிவிட்டார். சில காலத்திற்கு சேஷாசலம் மலையில் ஒரு எறும்புப் புற்றில் குடியேறினார். இந்த இடம் திருமலையில் உள்ள பெருமாளின் இன்னொரு அவதாரமான வராஹ ஸ்வாமியின் இடமாகும். துன்மார்க்கன் ஹிரண்யாக்ஷனிடம் இருந்து பூமியை மீட்டு கலியுகம் தொடங்கும் வரை ஆதி வராஹ ஸ்வாமிகள் தங்கியிருந்து மக்களுக்கு கர்ம யோகத்தைப் போதித்த இடமும் திருப்பதிதான்.

விஷ்ணு பகவான் புளிய மரத்தின் கீழ் இருந்த ஒரு எறும்புப் புற்றில் தனது மாறுவேடத்தில் அமர்ந்து மகாலட்சுமி தேவியின் பெயரை உச்சரிக்கத் தொடங்கினார்

பார்வதி மற்றும் சரஸ்வதியின் வேண்டுகோளின் பேரில், சோழ ராஜ்யத்தில் சிவபெருமானும், பிரம்மாவும் பசுவாகவும், கன்றாகவும் அவதரித்தனர். இந்த பசுவும் கன்றும் சேஷாசலம் மலையில் சோழ சாம்ராஜ்யத்தின் மேய்ப்பனால் தினமும் மேய்ந்து கொண்டு இருந்தன. பசு, விஷ்ணுவின் தாகத்தைக் குறைக்க தினமும் தன் பாலை எறும்புப் புற்றில் ஊற்றி வந்தது. அப்போது சோழ மன்னன் நகர் வலம் வந்த சமயம் ஆடு மேய்ப்பவர் இல்லாததை அறிந்து மேய்ச்சல் வயலுக்குச் சென்றார் அங்கு பசுக்கள் விஷ்ணுவுக்கு பால் கொடுக்கின்றன. இருப்பினும் விஷ்ணு மாறுவேடத்தில் இருந்தார். சோழ மன்னனால் அவரை அடையாளம் காண முடியவில்லை. எனவே, அரசன் தனது வில் மற்றும் அம்புகளை ஏற்றி, பசுவையும் கன்றையும் கொல்ல முயன்றான், மாறு வேடத்தில் இருந்த இறைவன் பசு மற்றும் கன்றை காத்து தர்ம வழியில் நடக்க தவறிய அரசனுக்கும் அடுத்த பிறவியில் அரக்கனாகப் பிறப்பான் என்று சபித்தார். சோழ மன்னன் தன் தவறுக்கு வருந்தி இறைவனின் பாதத்தில் சரணடைந்தான். கருணை கடலான ஸ்ரீமன் நாராயணன் மனமிறங்கி அடுத்த பிறவியில் தனது மகளை மணந்து கொள்வேன் என்று கூறி சாபாத்தை வாரமாக மாற்றினார். “நமக்கு நல்கிய எந்த வரத்தையும், அளித்த எந்த சாபத்தையும் ஆசியையும் வாசுதேவன் மாற்றி அமைப்பான் என்பதற்கு இதுவே சாட்சி.”

ராமாயண காலத்தில் வேதவதி என்பவள் ராமபிரான் மீது காதல்கொண்டு அவரை மணக்க விரும்பினாள். சீதையை மணந்த பெருமாள் தான் ராம அவதாரத்தில் ஏக பத்தினி விரதன் என்றும் அதுவே தன்னுடய அவதார நோக்கம் என்று அவளிடம் கூறி கலியுகத்தில் வேதவதியை மணப்பதாக வாக்களித்தான். அந்த வேதவதி தான் கலியுகத்தில் பத்மாவதி தாயராக

பிறந்தாள்.

துவாபர யுகத்தில் கிருஷ்ணர் யசோதாவிற்கு கலியுகத்தில் மகனாக பிறப்பார் என்று வரம் அளித்ததாக கூறப்படுகிறது. வகுலா தேவி யசோதையின் மறு அவதாரம்.

இதற்கிடையில், சோழ மன்னனின் அடுத்த பிறவியான ஆகாச ராஜாவின் அரண்மனையில் வேதவதி பத்மாவதியாக பிறந்தாள்.

ஒரு நாள் ஸ்ரீநிவாச பெருமாள் காட்டில் வேட்டைக்கு சென்ற சமயம் ஒரு யானை பத்மாவதி தாயாரை தாக்க வந்தது. தாயாரை காத்த பெருமாள் மீது தாயாருக்கு காதல் மலர்ந்தது. அவர்கள் இருவரும் காதலித்து, முந்தைய பிறவியில் சோழ மன்னனுக்கு விஷ்ணுவின் வரத்தின்படி திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தனர்.

விஷ்ணு, பத்மாவதியின் திருமணத்திற்கு நிதியளிப்பதற்காக குபேரரை அணுகினார். லட்சுமி தேவி அவரை விட்டு விலகியதால், அவருக்கு பணம் தேவைப்பட்டது. கடனை அடைக்கும் வரை ஸ்ரீனிவாச பெருமாள் திருப்பதியை விட்டு வெளியேற மாட்டேன் என்று குபேரரிடம் கூறினார்.

திருப்பதி கோவிலுக்கு தேவைப்பட்ட நிலத்தை வராக பெருமாள் வழங்கினார். தன்னை காண வரும் பக்தர்கள் குறைகளை களைவேன் என்றும் தன்னை வணங்கும் பக்தர்கள் ஸ்ரீ வராக பெருமாளையும் வணங்குவர் என்று திருமால் வாக்களிதார்.

திருப்பதி பாலாஜியை உலகின் பணக்கார கோவில்களில் ஒன்றாக மாற்றும் வகையில் பக்தர்கள் இங்கு பல அற்புதங்களை அனுபவிக்கின்றனர். ஆயினும் குபேரரின் கடன் இன்னும் அடைக்கப்படவில்லை! கடன் அடைக்க பெருமாளுக்கு ஒரு நொடி போதும் ஆயினும் இன்றும் திருப்பதி கோவில் வருமானத்தினால் எண்ணற்றோர் வாழ்க்கை மற்றும் அடிப்படை தேவைகள் அடங்கி உள்ளது என்பது நிதர்சனமான உண்மை இதுவும் அந்த மாயகண்ணனின் லீலை.

"மூவுலகை அளந்த இறைவனக்கு நம்மை நன்றாக ஆள தெரியும்" என்பது என் நம்பிக்கை"

இந்தத் திருமணத்தைப் பற்றி அறிந்த லட்சுமி தேவி கோபமடைந்தாள். ஆனால் திருமால் அளித்த வரங்கள் நிறைவேறியதால் திருமணம் நடந்தது என்பதை அறிந்ததும், லக்ஷ்மி தேவி மீண்டும் விஷ்ணுவின் இதயத்திற்குத் திரும்புகிறார், மேலும் அவரது ஆசீர்வாதங்களை வழங்கி என்றென்றும் மீண்டும் அங்கேயே வாசம் செய்கிறார். லட்சுமி தேவியின் அம்சமாக பத்மாவதி வழிபடப்படுகிறாள்.

திருப்பதிக்கு செல்லும் பக்தர்கள் பத்மாவதி கோவிலையும், வராஹா கோவிலையும் ஏன் வழிபடுகிறார்கள் என்பதை விளக்கும் நிகழ்வுகள் இவை திரேதா யுகத்திலும் துவாபர யுகத்திலும் அளித்த வாக்கினை நிறைவேற்றும் பொருட்டு திருமாலின் லீலைகள் இருந்ததால் தசாவதாரத்தில் அவர் பெயர் இடம் பெறவில்லை.

### நிலம் சார்ந்த பிரச்சினைகள் தீர ஒரு சிறந்த ஸ்தலம்

தங்களுக்கு நிலம் சார்ந்த பிரச்சினைகள் தீர பூவராக பெருமாளை வழிபட தீர்வு கிடைக்கும்.

கடலூர் மாவட்டதில் உள்ள ஸ்ரீ முஷ்ணம் என்ற இடத்தில் ஸ்ரீஅம்புஜ வள்ளி தாயார் சமதே ஸ்ரீ பூவராக பெருமாள் கோயில் உள்ளது. மனதார வேண்டி வர உங்கள் பிரார்த்தனைகள் நிறைவேறும். சர்வம் ஸ்ரீ கிருஷ்ணார்பணமஸ்து



# அனுபவ வார்த்தைகள்!

குறுகிய இடுப்பும் பரந்த மனமும் இடம் மாற்றிக் கொள்வதுதான் வாழ்க்கை!

என்னுடைய டாக்டர் ஒரு பிரசித்திப்பெற்ற கண், காது, மூக்கு தொண்டை மற்றும் பர்ஸ்!

கருமி என்பவன் ஒரு பணக்கார ஓட்டாண்டி!

ஒரு பெண் இன்னொரு பெண்ணிடம் அனுதாபம் காட்டுவது அவள் மூலம் விவரங்களை அறியவே!

பணத்தை சேமித்தால் வரும் நன்மை, கடன் வாங்காமல் வருமானவரி கட்டத்தான்!

ஒருவரை வேண்டாம் என்று கழட்டி விட சுலபமான வழிகள் இரண்டு உண்டு;

முதல் வழி, அவரிடம் கடன் கேட்பது அடுத்த வழி, அவருக்கு ஏதாவது அட்வைஸ் வழங்குவதே!

அது என்ன குடும்ப பட்ஜெட்?

ஒருவன் தன் வருமானத்திற்கு மேல் வாழ்க்கை நடத்தப் போடும் மாதாந்திர திட்டம் தான்!

எல்லாம் விவாதிக்கப்பட்டு, எதுவும் செய்யப்படவில்லை என்றால் அந்த நிறுவனத்தின் கமிட்டி மீட்டிங் முடிவடைந்துவிட்டது என்று அர்த்தம்!

நீ விரோதியாக பாவிப்பவரிடம் திடீரென அன்பு மழை பெய்து குளிப்பாட்டி விடு!

தெளிவான அவன் மூளை குழம்பிப் போய்விடும்!

உங்கள் வீட்டு கதவு, நீண்ட நேரமாக தட்டப்பட்டால், அது உங்களுக்குத் தேவையான வாய்ப்பாக இருக்க வழியில்லை; வேண்டாத விருந்தாளியின் வருகையாக கூட இருக்கலாம்!

என்று ஒரு பெண்ணிற்கு 40ம் வயது ஆரம்பிக்கிறதோ, அன்றிலிருந்து அவள் சிறப்பாக செயல்படுவாள் தனது தோற்றம் இளமையாக காட்சி தர!

நீ கூறும் விஷயத்தை எதிராளி நம்ப சுலபமான வழி இது- சொல்வதை ரகசியமாய் அவன் காதில் சொல்ல வேண்டும்.

நீ எதை சாப்பிடுகிறாயோ அதனால் உனக்கு அல்சர் நோய் வராது! உன்னை எது சாப்பிடுகிறதோ, அதனால் தான் வரும்.

அரசியல் கட்சியின் வளர்ச்சிக்கு காரணமாகும் பொய் வாக்குறுதிகளே, அதன் முடிவிற்கும் காரணியாகிறது!

சதா இருமிக்கொண்டே இருப்பவர்கள்தான் டாக்டரிடம் போவதற்கு பதிலாக, சினிமா தியேட்டர்களுக்கும், இதர கலை நிகழ்ச்சிகளுக்கும் வந்துவிடுவார்கள்!

ஒரு நடிகருக்கு நல்ல மார்க்கெட் வந்துவிட்டது என்றால் அவரே பிறரிடம் பேசமாட்டார், அவர் தன் மேனேஜரை முதலில் பேச சொல்வார்!

மறக்கப்பட்ட, அல்லது மறக்கப்பட வேண்டியவரை, நினைவூட்டவே அவருக்கு சிலை உள்ளிட்ட ஞாபகச் சின்னம் அமைப்பது!

இத்தனை விஷயங்களைத் தெளிவாக தெரிந்து கொள்ள தெரியாத மனிதர்கள் ஏமாறாதிருக்கிறார்கள் - நன்றிக்கு உரியவர்கள்!

**மதுரை சரபேஸ்வரன்**

# நல்ல கனவுகளைக் காண



ரா. பன்னீர்செல்வம்

எல்லோருக்கும் கனவுகள் வருவதுண்டு, இதில் ஒரு சிலர் இரவை நினைத்தாலே அதிலும் தூங்குவதை நினைத்தாலே பயம் உண்டாகும். அதற்கும் காரணம், நித்திரையிலும் தூக்கத்தைக் கொடுத்து, நிம்மதியைக் கெடுக்கும் கனவுகள்.

அப்படி கெட்ட கனவுகள் கண்டு, மனம் பேதலித்து நிம்மதியின்றி, தவிப்பவர்கள், அந்த பயமின்றி, நல்ல கனவுகளைக் காண ஓர் மந்திரப்படலை சௌந்தர்ய லஹரியில் கொடுத்துள்ளார் அது 39வது பாடல்

## மந்திரப்பாடல் :

தவ ஸ்வாதிஷ்ட்டானே ஹ்ரீதவஹ-மதிஷ்ட்டாய நிரதம்
தமிடே ஸ்ம்வர்த்தம் ஜனனி மஹீதம் தாஞ்ச ஸமயாம்
யதாலோகே லோகான் தஹதி மஹிதம் க்ரோதகலிதே
தயார்த்ரா யாத்ருஷ்டி சிசிர முகசாரம் ரசயதி

## பாடலின் விளக்கம்

தாயே! சுவாதிஸ்டானம் என்னும் உன்னுடைய சக்கரத்தில் நெருப்பாய் பிரகாசித்து கணப்பொழுதும் நீங்காமல் இருப்பவன் ருத்ரன். நெருப்பின் வடிவான ருத்ரனையும் சந்திரகலா என்னும் குளிர்த்தன்மையுடைய உன்னையும் ஒரு சேர வணங்குகின்றேன் ருத்ரனின் அக்னிப் பார்வையால் துன்பங்கள் விலகவும் குளிர்ச்சியான உன் கருனைப் பார்வையினால் என்னைக் காத்தருள வேண்டும் அம்மா!

## மந்திரத்தை பிரயோகிக்கும் முறை

வெள்ளித் தட்டில் விபூதியைப்பரப்பி அதன் மீது இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை வரைந்து கொள்ள வேண்டும்.

தினமும் 108 முறை என 12நாட்கள் கிழக்கு முகமாக அமர்ந்து மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.

அதன்பிறகு குங்குமத்தினால் லலிதா அஷ்டோத்திர அர்ச்சனை செய்தல் நலம்.

பழங்கள், பால் பாயசம், வெண் பொங்கல் ஆகியவற்றை நைவேத்யமாக படைத்தல் அவசியம்.

இதனை சரியாக செய்து மந்திரத்தை ஜபித்தால் அன்னையின் அருளால் கெட்ட கனவுகள் ஏதும் வராமல், பயமின்றி நல்ல சொப்பனங்கள் கண்டு, துன்பமின்றி வாழலாம்.

# குறளும் பொருளும்

அந்த அலுவலகத்தில் 70, 80 பேர் பணியாற்றுகின்றனர். அனைத்தும் கம்ப்யூட்டர் மயம்! இந்த அலுவலகத்தின் கடைசியில் ஒரு தனி அறை, அங்கே நான்கு பேர்! அவர்கள் வேலையே தனி பெரும்பாலும் யாரிடமும் ஒட்டாமல் எவருடனும் தொடர்பு படுத்த இயலாத வேலை அவர்களுடையது.

அந்த நால்வரில் ஒருவன் வெங்கட்! மற்ற மூவரும் வருவதற்குமுன் சரியாக சொல்லப்போனால் அலுவலகத்திலேயே யாவரும் வருவதற்கு முன்னால் வந்து வேலை பார்ப்பான். அவனுடன் இருப்பவர்களே... ”என்னடா அவ்ளோ பொறுப்பா உனக்கு?” என கிண்டல் செய்வார்கள். அலுவலகத்தின் மற்ற ஊழியர்களோ இவர்கள் நால்வரையும் பெரிதாய் கண்டுகொள்ள மாட்டார்கள்.

சீக்கிரம் வந்து அப்படி என்ன வேலை தான் செய்தான் வெங்கட்? ஒன்றுமில்லை! அவனுக்கு வீட்டில் என்ன பிரச்சனையோ இருக்க முடியாமல் இங்கு வந்து தூங்குகிறான் என அவனைச் சார்ந்த மூவரும் எண்ணியிருந்தனர்.

ஒரு நாள்.... அந்த நால்வரின் தனியறையில் சற்றே சலசலப்பு! அலுவலக பொருட்கள் சிலவற்றை காணவில்லையாம். இது எதையும் வெளியே சொல்லாமல் அவர்களுக்குள்ளேயே குழம்பினார்கள். சற்றே ஆய்வு செய்தபோது, பொருட்கள் காணாமல் போகவில்லை; எடுத்துச் சென்று விட்டான் வெங்கட் என்பதை மற்ற மூவரும் தெரிந்து கொண்டார்கள்.

உடனே, இந்த விஷயத்தை மேலதிகாரியிடம் சொல்ல... அவர்கள் அவனை அழைத்து விசாரிக்க, உண்மையை ஒப்புக் கொண்டு மன்னிப்பு கேட்டவன், அனைத்தையும் திருப்பித் தர சில நாள் அவகாசம் கேட்டான். அவனை வேலையை விட்டு நிறுத்தியும் விட்டார்கள்.

என்னதான் மூடி வைத்தாலும் விஷயம் கசியாமல் இருக்குமா?.. அந்த அலுவலகத்தின் அனுபவஸ்தரான ஒரு ஊழியர், வெறும் வாயையே மெல்லுபவர்! அவல் கிடைத்தால் விடுவாரோ? வெளியில் வந்தவர், அங்கே செக்யூரிட்டியிடம், ”அவனுங்க நாலு பேருமே எப்பவும் தனியாவே யார்கூடவும் ஓட்ட மாட்டானுங்க! இப்ப இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கிறது! வெங்கட் மேலே எனக்கு ஒரு சந்தேகம் எப்பவுமே உண்டு!

ஆனா, எனக்கென்னமோ... இதல நாலு பேருக்குமே சம்பந்தப்பட்ட ஒருத்தன பலிகடா வாக்கிட்டாங்களோன்னு சந்தேகமா இருக்குது!” என்றார்.

மெல்ல சிரித்த செக்யூரிட்டி, “நடந்ததையெல்லாம் நானும் கேள்விப்பட்டேன்; நீங்க சொல்றது மாதிரி இல்ல, செஞ்சவனே ஒத்துக்கிட்டு போயிட்டானே”, என்றார். அந்த ஊழியரோ, “என்னோட அனுபவத்தப்பத்தி தெரியுமா உனக்கு!? நான் சொன்னா சரியா இருக்கும்!” என்றார். சற்றும் தயங்காமல் செக்யூரிட்டி சொன்னார்.” எனக்கு உங்கள பத்தியும் நல்லா தெரியும், நீங்க அவல நினைச்சு உரலை

இடிக்கிறவரு!

அதல சத்தம் மட்டும் தான் வரும்; சத்தியம் இருக்காது! உங்கள மாதிரி ஆளுங்களுக்காகவே வள்ளுவர் ஒரு குறளில் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?...

“அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன் புறங்கூறான் என்றல் இனிது!”

அதாவது, நீ தர்மப்படி பேசி, நல்லது செய்யலனாலும் புரளி பேசி ஒருத்தன கெடுக்காம இருந்தாலே போதும்னு திருவள்ளுவர் சொல்றாரு.... புரியுதா?”... என்றார் செக்யூரிட்டி!

நம்மள பத்தி நல்லா தெரிஞ்சுக்கிட்டு இருக்கானே“ என்றவாறு, அங்கிருந்து புறப்பட்டார் ஊழியர்!



**தமிழ் வசந்தன்**

# ஜீலை மாத பலன்கள் 2022




விஜய்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்



## மேஷ ராசி

மேஷ ராசி நேயர்களே உங்கள் தகுதி உயரும் மாதமாகும். விரும்பிய கல்வியை கற்க முடியும். நீங்கள் புதிதாக கற்கும் அனைத்தும் தொழில் வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும். உங்கள் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புகள் தேடி வரும். சாதனை புரிவதன் மூலம் சமுதாயத்தில் புகழ், மரியாதை உயரும். பிடிவாதம் அதிகரிக்கும், தான் என்ற எண்ணம் தலை தூக்கும் விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். வருமானம் அதிகரிக்கும், சேமிப்பு உயரும். குடும்பத்தில் உள்ளவர்கள் கலகலப்பாக, மகிழ்ச்சியாக இருப்பார்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தைரியம் கூடும். திருமணம் கைகூடும். வீடு, வாகனம், சொத்து போன்ற செயல்களில் ஈடுபடாமல் இருப்பது செலவுகளை குறைக்கும்.



## ரிஷப ராசி

ரிஷப ராசி நேயர்களே, தன்னம்பிக்கை அதிகரிக்கும். அனைத்து பாதிப்புகளையும் சமாளிக்கும் திறன் கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும். வருமானம் எவ்வளவு அதிகரித்தாலும் அதற்கேற்றவாறு செலவுகளும் அதிகரிக்கும். கடன் கூடும், தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள கடன் வாங்கும் சூழ்நிலைகள் உருவாகும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நன்மை தரும். தகவல் தொடர்பு சார்ந்த செயல்களில் கவனம் தேவை. சிறு தூரப் பிரயாணங்களில் பாதிப்பு ஏற்படலாம். வெளிநாடு செல்ல வாய்ப்பு கிடைக்கும். தங்கள் திறமைகள் கூடும். தலைகணம் ஏற்படலாம், அதனால் குடும்பத்தில் பாதிப்புகள் உருவாகலாம். அனைவரையும் அனுசரித்து செல்வது நன்மை தரும். தொழில் சீராக இருக்கும், லாபங்கள் கூடும். மூத்த சகோதரர், நண்பர்களிடம் ஆலோசனை உதவிகள் பெறலாம். கூட்டாளிகள் பிடிவாதமாக இருப்பார்கள், அவர்களால் செலவுகள் அதிகரிக்கும். ஆன்மீக யாத்திரை செல்ல வாய்ப்பு கிட்டும்.



## மிதுன ராசி

மிதுன ராசி நேயர்களே, மரியாதை, புகழ் அதிகரிக்கும். கனவு, கற்பனைகள் மேலோங்கும். புதிய வாய்ப்புகள் தேடிவரும். கேளிக்கை, விருந்து, விழாக்களில் கலந்து கொள்ள வாய்ப்பு வரும். செலவுகள் கூடும், செலவுகளால் மனமகிழ்ச்சி ஏற்படும். தொழிலில் மரியாதை, மதிப்புக் கூடும். திடீர் லாபங்கள் கிடைக்கும். கடன், வழக்கு போன்ற பிரச்சனைகளில் இருந்து வெளிவர முடியும். அனைத்து பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். நீண்ட தூரப் பயணங்களினால் தாமதம் ஏற்படும். உயர் கல்வியில் தடைகள் வரும். குடும்பத்தில் கடினமான வார்த்தைகளை பயன்படுத்தக் கூடாது. அனைவரிடத்திலும் அன்பாக நடந்து கொள்ள வேண்டும். பூர்வீகம் சார்ந்த செயல்களில் ஈடுபடக்கூடாது.



## கடக ராசி

தொழில், வேலை சிறப்பாக இருக்கும். பதவி உயர்வு கிடைக்கும். ஊதியம் அதிகரிக்கும். தங்கள் கோரிக்கைகள் நிறுவனத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். அதிக வேலைச்சுமை இருக்கும் ஆகையால் உடல் நலம் பாதிப்படையும். சீரான ஓய்வு தேவை. உடல்நலனில் கவனம் தேவை. பாதுகாப்பு, ஆதரவு கிடைக்கும். கிடைக்கும் ஆதரவை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் மனம் சோர்வடையும், பயம் அதிகரிக்கும், குழப்பங்கள் கூடும். முடிவெடுக்கும் சூழ்நிலைகளில் பொறுப்பை பெரியவர்களிடம் தந்து விடுவது பாதிப்பில்லாமல் காலத்தை கடக்க உதவும். செலவுகளில் கவனம் தேவை, சேமிப்புகள் கரையும் சூழ்நிலைகள் உருவாகும். குழந்தைகள் பிடிவாதம் பிடிப்பார்கள், அவர்களை தண்டிக்காமல், புரியவைப்பது குடும்பத்தில் பாதிப்புகளை குறைக்கும்.



## சிம்ம ராசி

சிம்ம ராசி நேயர்களே, மிகவும் சிறப்பான காலமாகும் இந்த ஜூலை மாதம். லாபங்கள் கூடும், தேவைகள் பூர்த்தி ஆகும். விருப்பங்கள் நிறைவேறும். வெற்றிகள் குவியும், மகிழ்ச்சி கூடும். நண்பர்கள் உதவுவார்கள், சமுதாயத்தில் மதிப்பு கூடும். அனைத்து விதமான நன்மைகளும் கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும், சேமிப்பு உயரும், புதிய பொருட்கள் வாங்குவீர்கள். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வைப்பீர்கள். தாங்கள் பயன்படுத்தும் வார்த்தைகளில் அனைவரும் ஈர்க்கப்படுவர். தொழில் சிறப்பாக இருக்கும். உடல்நலம் சீராக இருக்கும். கூட்டாளிகள் சிறப்பான திட்டங்கள் தீட்டுவார்கள். அவர்கள் திட்டங்களால் லாபம் கிடைக்கும். தாய் தந்தையிடம் அனுசரித்து செல்வது நலம். தந்தை, தாய் மிகவும் பிடிவாதமாக இருப்பார்கள். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதை தவிர்த்து, அன்றாட வேலைகளை செய்தாலே பெரிய லாபங்கள் கிடைக்கும்.



## கன்னி ராசி

அனைத்து செயல்களுக்கும் கிழக்கு திசையை தேர்ந்தெடுப்பது சிறப்பான பலன்களைத் தரும். தொழில் மேன்மையடையும். நிர்வாகம் சிறப்பாக இருக்கும். புகழ் கூடும் லாபங்கள் கிடைக்கும். குழந்தைகள் முன்னேற்றம் அடைவார்கள். வாழ்க்கை துணை உதவிக்கரமாக இருப்பார். திருமண முயற்சிகள் செய்யலாம். வீடு, வாகனம், சொத்து சார்ந்த செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். பங்காளிகள் சண்டை சொத்து தகராறு, வாகன விபத்து ஏற்படலாம். நிதானம் தேவை. மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவீர்கள். உயர்கல்வி படிப்பவர்கள் சிறப்பான முன்னேற்றம் அடைவார்கள். குடும்பத்தில் அமைதி காப்பது பஞ்சாயத்து, கடன் போன்ற பிரச்சினைகளை தவிர்க்க உதவும்.




## துலாம் ராசி

அனைத்து திறமைகளும் உங்களிடம் இருக்கும். ஆனால் அதை வெளிப்படுத்த முடியாத சூழ்நிலையில் இருப்பீர்கள். எதிர்பார்ப்பில்லாமல் செய்யும் அனைத்து செயல்களையும் கடமை என நினைத்து செய்தால் வெற்றி கிடைக்கும். பேராசையுடன் செய்யும் செயல்களால் பொருள் விரையும், பாதிப்புகள் ஏற்படும். வேலையில் தடை, தாமதம் அதிகரிக்கும். கருப்பசாமி வழிபாடு தடைகளை அகற்ற உதவும். அனைவரிடத்திலும் அமைதியாக பழகுவது பிரிவினையை தவிர்க்கும். வாழ்க்கைத்துணை பிடிவாதமாக, முரட்டுத்தனமாக மாறக் கூடிய சூழ்நிலை உருவாகும். விட்டுக்கொடுத்து செல்வது பிரிவினையை தவிர்க்கும். கூட்டுத்தொழில், கூட்டாளிகள் ஆகாது. ஆன்மீக யாத்திரை மன அமைதியைத் தரும்.



## விருச்சிக ராசி

விருச்சிக ராசி நேயர்களே, உடல்நலனில் கவனம் தேவை. வயிறு, தலை, ரத்தம் சார்ந்த பிரச்சனைகள் ஏற்படலாம். வாகனத்தில் செல்லும்போது அனைத்து பாதுகாப்பு கவசங்களையும் பயன்படுத்த வேண்டும். சாலை விதிகளை கடைபிடிக்க வேண்டும். விபத்து நடக்க வாய்ப்பு உண்டு. கடன், வழக்கு போன்ற பிரச்சினைகளில் நீங்களாக சென்று சிக்கிக் கொள்ள வாய்ப்பு உள்ளது. ஆகையால் அனைத்து செயல்களிலும் யோசித்து செயல்பட வேண்டும். தொழிலில் தடை, தாமதம் அதிகமாக இருக்கும். திடீர் அதிர்ஷ்டத்தை நம்பி பொருளாதாரத்தை முதலீடு செய்யக்கூடாது. நிர்வாகம் பாதிப்படையும். மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்த வேண்டாம். உங்களின் வருமானத்தை பிறர் அனுபவிக்க நேரிடும். துர்க்கை வழிபாடு துன்பங்களை குறைக்கும்.



## தனுசு ராசி

தனுசு ராசி நேயர்களே, திருமணத்திற்கு வசந்த காலம். திருமணம் சார்ந்த அனைத்து முயற்சிகளும் செய்யலாம். திருமணம் ஆனவர்கள் வாழ்க்கை துணையுடன் நேரம் செலவிட வேண்டும். எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய வேண்டும். விடுமுறை நாட்களில் சுற்றுலா செல்வது சிறப்பு. இது குடும்பத்தில் மகிழ்ச்சியை அதிகப்படுத்தும். வேலை சிறப்பாக இருக்கும். வேலையில் குறித்த நேரத்தில் அனைத்து செயல்களையும் செய்து முடிக்க முடியும். அது உங்களுக்கு பெயர், புகழ் பெற்றுத் தரும். சுய தொழிலில் முதலீடு செய்யக்கூடாது. உங்களுக்கு வரக்கூடிய வருமானம், லாபம் கடனுக்கு செலவிட வாய்ப்பு உண்டு. ஆகையால் திட்டமிடல் அவசியமாகும். மாத பிற்பகுதி பொருளாதார வளர்ச்சியை தரும். சிவ வழிபாடு அனைத்து பாதிப்புகளையும் நீக்கி வளர்ச்சியை தரும்.



## மகர ராசி

மகர ராசி நேயர்களே, வேலையில் தவறுகள் நடக்க வாய்ப்பு உண்டு. உதவியாளர்கள் உதவியுடன் அனைத்து செயல்களையும் சரி பார்த்த பின்பு செயல்படுத்துவது குறைகளை நீக்கும். உங்கள் உதவி பிறருக்குத் தேவைப்படும், நீங்கள் உதவுவதால் மரியாதை, மதிப்புக் கூடும். மாத பிற்பகுதியில் அதிக கவனம் தேவை. தடுமாற்றங்கள் அதிகரிக்கும். மனம் குழப்பமடையும், தெளிவில்லாமல் காணப்படுவீர்கள். தியானம் செய்வதின் மூலம் மன அமைதி கிடைக்கும். சேமிப்பு கரையும், வாழ்க்கைத் துணையுடன் வாக்குவாதங்களை தவிர்ப்பது நலம். வாழ்க்கைத் துணைவருக்கு தலைகணம் கூடும். ஆகையால் உங்களை குறை கூறுவார். விட்டுக்கொடுத்து செல்வது குடும்ப வாழ்வில் இடைவெளியை குறைக்கும்.



## கும்ப ராசி

கும்ப ராசி நேயர்களே, விரயங்கள் அதிகரிக்கும் மாதம், ஆகையால் செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும். புதியவர்களை நம்பி தொழிலில் முதலீடு செய்யக்கூடாது. வேலையில் மாற்றம் ஏற்படலாம். மாற்றங்களால் பெரிய லாபம் இல்லை, ஆகையால் இருக்கும் வேலையை கவனமாக கையாள்வது நன்மை தரும். புதிய முயற்சிகளால் பாதிப்பு அதிகரிக்கும். இளைய சகோதரர் பிடிவாதமாக செயல்படுவார். சிறு தூர பிரயாணங்கள் மன அமைதியை குறைக்கும். உடல்நலனில் பாதிப்பு ஏற்படும். மருத்துவமனை செலவுகள் அதிகரிக்கும். வருமானத்தையும், லாபங்களையும் அசையா சொத்துக்கள் வாங்க பயன்படுத்தலாம். காலி இடமாக வாங்காமல், கட்டி முடித்த வீடு வாங்குவது சிறப்பு. காதல் திருமணம் நடக்க வாய்ப்பு உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். தந்தைக்கு கடன் சுமை அதிகரிக்கும். விநாயகர் வழிபாடு பாதிப்புகளை குறைக்கும்.



## மீன ராசி

மீன ராசி நேயர்களே, மிகவும் சிறப்பான மாதம் ஆகும். வருமானம் அதிகரிக்கும். வாழ்வில் ஒரு புதிய உறவு கிடைக்கும். மறுமணம் ஏற்பட வாய்ப்பு உண்டு. திருமணமானவர்களுக்கு, குழந்தை பாக்கியம் கிடைக்கும். அனைத்து தடைகளையும் கடந்து செல்ல முடியும். உங்கள் முயற்சிகள் வெற்றி பெறும். போட்டி பந்தயங்களில் வெற்றி பெறுவீர்கள். லாபங்கள் கிடைக்கும். தொழில் சிறப்பாக நடைபெறும். சமுதாயத்தில் புதிய அந்தஸ்து கிடைக்கும். தாயின் உடல்நிலை சீராக இருக்கும். வீடு, வாகனம், சொத்துக்கள் வாங்க சிறப்பான காலம். அம்மன் வழிபாடு அனைத்தும் முன்னேற்றத்தையும் வழங்கும்.